நீகிரோ மாமா

மூல ஆசிரியை :

ஹாரியெட் பீச்செர் ஸ்டோ

தமிழாக்கம் :

ப. ராமஸ்வாமி

முதற் பதிப்பு: மார்ச், 1966
உரிமை பதிவு

விலை ரூ. 3-00

பதிப்புரை

உலகப் புகழ்பெற்ற இலக்கியங்களுள் ஒன்முன இந்த நூல் தமிழ் நாட்டு மாணவ, மாணவிகளுக்குப் பெரிதும் பயன்படவேண்டும் என்ற நோக்கத்துடன் இதனை வெளியிடுகிறோம். மாணவர்கள் மட்டுமின்றி, இதனைப் படிக்க நேரும் எப்பருவத்தினரையும் இந்த நூல் தன்பால் முழுதும் கவர்ந்து, அவர்கள் உள்ளங்களில் ஒரு கிளர்ச்சியை உண்டுபண்ணும் என்பது திண்ணம்.

மனிதனாகப் பிறந்துவிட்ட யாரும் மற்ற எந்த மனித உயிரின்மீதும் ஆதிக்கம் செலுத்தும் உரிமை கொள்வதற்கில்லை. மாறாக, பிற உயிரைத் தன்னுயிரே போல் கருதக்கூடிய பண்பிலும் அன்பிலும்தான் செயல்பட வேண்டும். அமெரிக்காவில் நீகிரோவர்கள் அடிமைப்பட்டுக் கொடுமைப் படுத்தப்பட்ட செய்திகளைப்பற்றி உலகமே அறியும். டாம் மாமா என்ற அபூர்வமான-வியக்கத்தக்க பாத்திரத்தையும், மற்றப் பாத்திரங்கள் சிலவற்றையும் படைத்து, இந்த நூலின் மூலம் உலகக் கவனத்தையே கவர்ந்துவிட்டார் இதன் மூல ஆசிரியை. டாம் மாமாவின் கதையைப் படிக்கும் ஒவ்வொரு வாசகரும் இரு துளிக் கண்ணீர் சிந்தாமல் இப் புத்தகத்தை மூடிவைக்க மாட்டார்கள். இத் தகைய மன நெகிழ்ச்சி ஏற்படுத்தும் நூலின் மூலப்

நமது மாணவர்கள் அன்பின் வழியைத் தெற்றெனத் தெரிந்துகொள்வார்கள். பாட நூல்மூலம் போதிக்கும் அறிவுரையின் துணையோடு இத்தகைய கதை நூல் மூலம் உணர்வுகளையும் நிகழ்ச்சிகளையும் உண்மை எனக் கொள்ளும் நிலை எய்தி இருந்து பயனை அடைவார்கள். அதிலும் இந்த நூலான 'நீகிரோ மாமா' நிகழ்ச்சிகளை எளிதில் உண்மைபோல் காட்டும் திறன் படைத்திருக்கிறது. சமூகத்தில் மனித உணர்வுகளுக்கும் உரிமைகளுக்கும் மதிப்பும் மரியாதையும் வைத்துப் பழக நம் மாணவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும் அதற்குப் பெரிதும் உதவக் கூடியது இந்த நூல். மாணவர் உலகம் பயனடையும் வண்ணம் இந்த நூல் அவர்களுக்கு ஒரு ஒளிவிளக்காக இருக்கட்டுமென்று கருதி, இதனை அவர்களுக்குப் பெருமையுடன் அளிக்கிறோம்.

—சித. ராமநாதன்

முன்னுரை

இந்த நூல் உலகத்தை ஆட்டிவைத்த பத்துப் தினைந்து நூல்களுள் ஒன்று என்று அறிஞர்களால் போற்றப்படுகின்றது. இது 1852-ம் ஆண்டில் முதன் முதல் அமெரிக்காவில் ஆங்கிலத்தில் வெளிவந்தது. உடனே 23 மொழிகளில் இது மொழிபெயர்க்கப் பட்டது. பின்னல் இது முக்கியமான உலக மொழிகள் அனைத்திலும் வெளிவந்திருக்கிறது. சென்ற நூறு வருடங்களுக்கு மேலாக இந்தக் கதையின் பெருமை யும் புகழும் நாளுக்குநாள் அதிகரித்து வருகின் றனவேயன்றிக் குறையவேயில்லை.

ஒரு நூல் உலகத்தை ஆட்டிவைக்க முடியுமா? ஆம். இந்த நூல் உலக நிலையை மாற்றுவதற்கு மிகவும் வேலை செய்திருக்கின்றது.

இந்தக் கதை உள்ளத்தை உருக்கும் மிகச் சிறந்த கதை. அமெரிக்காவிலிருந்த அடிமை நீக்ரோவர் களைப்பற்றி இது சித்திரித்துக் காட்டுகின்றது. இது வெளிவந்ததால், அமெரிக்க ஐக்கிய மாகாணத்தில், நீக்ரோவர்களை அடிமைகளாக வைத்துக்கொள்ளும் முறை மாறுவதற்குத் தீவிரமான ஏற்பாடுகள் தோன்றின. அங்கே வடபகுதியிலிருந்த மக்கள் அடிமை முறையை வெறுத்தனர்; தென்பகுதியிலிருந்த

மக்கள் அடிமை முறையைத் தீவிரமாக ஆதரித்தன. இந்த வெறுப்பும் விருப்பும் சேர்ந்து, 1861-ல் இ பகுதிகளுக்கும் பெரிய உள்நாட்டுப் போராக மூண் விட்டது. 1865-ல் இரு பகுதிகளும் ஒன்றுகச் சேர்ந்த அடிமை முறையை ஒழிக்கும் சட்டமும் இயற்ற பட்டது.

இந்த நூலின் ஆசிரியர் திருமதி ஹாரியெட் பீச்செ ஸ்டோ (Mrs. Harriet Beecher Stowe) உலகப் புகழ்பெற் ஆசிரியர்களில் ஒருவர். அவ்வளவு புகழுக்கும் இந் ஒரு நூலே காரணமாயிருக்கிறது. இந்த நூலின் ஒ வொரு பக்கத்திலும் உண்மையின் நாதம் ஒலிக்கிறது இதனுலும், இதிலுள்ள பாத்திரங்களாலும், ஆசிரிய போதிக்கும் உயர்ந்த ஒழுக்கங்களாலும், இதன் உரு கத்தாலும் இது அழியாப் புகழ் பெற்றுள்ளது.

மனிதரை மனிதர் அடிமைகொள்ளும் முறையால் ஏற்படும் துயரங்களை யெல்லாம் இந்தக் கதையில் ஆசிரியர் விவரித்துள்ளார். பிற்காலத்தில் அமெரிக் காவில் இந்தத் துயரங்கள் மறைந்து, அடிமை முறை யும் சட்டப்படி தடுக்கப் பெற்றுள்ளது. ஆயினும் இன்றுவரை நீகிரோவர்கள் இடையிடையே பல துன் பங்களுக்கு உள்ளாக நேருகின்றது. இப்பொழுதுகூட அமெரிக்க நீகிரோவர்கள் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்குத் தடைகள் செய்யப்படுவதை யும், அவர்களுடைய பெருந் தலைவர் திரு. மார்ட்டின் லூதர் கிங் என்பவர் மகாத்மா காந்தியின் அஹிம்சை முறையில் போராட்டம் நடத்துவதையும் பற்றிச் செய்திகள் வருகின்றன. அமெரிக்காவிலும், ஆப்பிரி காவிலும் நீகிரோவர்களின் நிறம் பற்றிய துவேஷம்

ன்னும் ஒழியவில்லை. ஆனல் அடிமை முறை அடி பாடு ஒழிந்துவிட்டது.

மூலத்தில் இந்த நூலின் பெயர் 'டாம் மாமாவின் டிசை' (*Uncle Tom's Cabin*) என்பது. மூலத்தைச் நக்கி, 'நீகிரோ மாமா' என்ற பெயருடன் இங்கே மிழில் அளிக்கப் பெற்றுள்ளது. இதைப் படிக்கும் ாணவ மாணவிகள் பின்னல் மூலம் முழுவதையும் டித்து இன்புற வேண்டியது அவசியம்.

ப. ராமஸ்வாமி

உள்ளடக்கம்

			பக்கம்
1.	அடிமை வியாபாரி	...	1
2.	எலிஸாவும் அவள் கணவனும்	...	6
3.	டாம் மாமாவின் குடிசை	...	9
4.	அடிமையைத் தேடுதல்	...	15
5.	தாயும் சேயும்	...	20
6.	அடைக்கலம் அளித்த அன்பர்கள்	...	26
7.	டாம் மாமாவின் பிரிவு	....	30
8.	விடுதலை பெற்ற வீரன்	...	39
9.	எவாஞ்சலின்	...	46
10.	டாமும் ஈவாவும்	...	53
11.	அன்பு நிறைந்த உள்ளம்	...	59
12.	இறுதி நாட்கள்	...	65
13.	அடிமைகளுக்கு நேர்ந்த அவதி	...	70
14.	டாமின் புதிய யசமானன்	...	79
15.	மன்றூஸகின் கொடுமைகள்	....	87
16.	ஆன்மாவுக்கு அழிவில்லை !	...	97
17.	சுதந்தரம்	...	102
18.	அடிமை வேட்டை	...	106
19.	ஆன்மாவின் வெற்றி	....	112
20.	மகத்தான சபதம்	...	119
21.	பிரிந்தவர் கூடுதல்	...	127
22.	சொல்லும் செயலும்	...	130

1. அடிமை வியாபாரி

ஆப்பிரிகா கண்டத்தில் வசித்துவரும் நீகிரோ மக்கள் கறுப்பு நிறமுள்ளவர்கள். தடித்த உதடுகளும், சுருட்டைத் தலையும் பெற்ற அம்மக்களைப் பார்த்தவுடனே, அவர்கள் நீகிரோவர்கள் என்று தெரிந்துகொள்ளலாம். முற்காலத்தில் வெள்ளையர்கள் ஆப்பிரிகாவின் மேற்குக் கரையிலிருந்து அவர்களைப் பிடித்துக்கொண்டு போய், அமெரிக்க ஐக்கிய மாகாணத்தில் விற்பனை செய்வது வழக்கம். அங்கே குடியேறியிருந்த ஐரோப்பிய வெள்ளையர்கள், அவர்களை வாங்கி, தங்கள் தோட்டக் காடுகளில் வேலைக்கு வைத்துக்கொண்டார்கள். அமெரிக்காவில் குடியேறிய நீகிரோவர்கள், ஆண்களும் பெண்களும், தங்கள் குழந்தை குட்டிகளுடன் அங்கேயே வசித்து வரலாயினர். அவர்கள் அனைவரும் காலை முதல் இரவுவரை கரும்புத் தோட்டங்களிலும், பருத்திக் காடுகளிலும், மற்றும் கழனிகளிலும் வேலை செய்து வந்தார்கள். அவர்களில் சிலர் வெள்ளையர்களுடைய வீடுகளில் வேலை செய்து வந்தார்கள்.

அமெரிக்க ஐக்கிய மாகாணத்தின் தென்பகுதியிலேயிருந்த ராஜ்யங்களிலேயே அடிமைகள் அதிக

மாக இருந்தனர். அங்கேதான் விவசாயமும் மிகுதி யாக நடந்துவந்தது. ஊர் ஊராகச் சந்தைகள் கூடும். அவைகளில் வியாபாரிகள் அடிமைகளைக் கொண்டுவந்து விலை கூறி விற்பார்கள். மற்ற நாடு களில் ஆடு மாடுகளை விலைக்கு வாங்குவதுபோல, அங்கே அடிமைகளை விலைக்கு வாங்கிவந்தார்கள். இந்த அடிமைகளுக்கு மனித உரிமைகளே இல்லாம லிருந்தது. முதலாளிகள் அவர்களை அடிக்கலாம், மிதிக்கலாம், என்ன வேண்டுமானாலும் செய்யலாம். அவர்களை வதைத்துக் கொன்றாலும், எவ்விதக் கேள் வியுமில்லை. சட்டங்கள், நீதிகள் எல்லாம் வெள்ளை யர்களுக்கு மட்டுமே. இவ்வாறு நீகிரோ மக்கள் பல தலைமுறைகளாக அந்த நாட்டிலே அவதிப்பட்டுவந்த னர். தெய்வபக்தியும் இரக்கமும் கொண்ட சில முத லாளிகள் நீகிரோவர்களிடம் அன்பு காட்டி வந்தனர். 'நாமும் மனிதர்கள், அவர்களும் மனிதர்கள்' என்ற உணர்ச்சியுடன் அவர்கள் நடந்துவந்தனர். ஆயினும் பெரும்பாலான முதலாளிகள் கொடுமையே உரு வெடுத்து வந்தவர்கள். ஒவ்வொரு நாளும் அவர்கள் அடிமைகளைச் சவுக்கால் அடிப்பார்கள். அவர்களில் கணவர் மனைவியர்களைப் பிரித்து விற்பார்கள். சில சமயங்களில் குழந்தைகளை விற்பார்கள்; அல்லது, குழந்தைகளை வைத்துக்கொண்டு, பெற்றோர்களை விற்றுவிடுவார்கள். மொத்தத்தில் கறுப்பர்கள் கால் நடைகளைவிட மிகவும் கேவலமாக நடத்தப்பட்டார் கள். அவர்கள் சட்டப்படி உயிரற்ற பொருள்களா கவே கருதப்பட்டனர்.

அடிமைமுறை நிலைத்திருந்த காலத்தில் கென் டக்கி என்ற இடத்தில் ஷெல்பி என்ற பிரபுவின் குடும்

பத்தினர் வசித்துவந்தனர். ஷெல்பிக்கு ஏராளமான நிலங்கள் இருந்தன. அவைகளில் பல நீக்கிரோ அடிமைகள் வேலை செய்துவந்தனர். ஒரு நாள் ஹேலி என்ற நீக்கிரோ வியாபாரி அவர் வீட்டிற்கு வந்து பேசிக் கொண்டிருந்தான். ஷெல்பி அவனிடம் கடன் வாங்கியிருந்தார். அதைக் கேட்கவே அவன் வந்திருந்தான். பணத்திற்குப் பதிலாகச் சில அடிமைகளைக் கொடுத்துக் கடனைத் தீர்த்துவிடலாமென்று ஷெல்பி கருதினார். அந்த நேரத்தில் வெளியே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்த ஹேலி, 'அதோ வந்துகொண்டிருக்கும் அடிமையை எனக்குக் கொடுத்துவிடுங்கள். அவனுடன் ஆணோ, பெண்ணோ, ஒரு குழந்தையைச் சேர்த்துக் கொடுத்தால், நீங்கள் தரவேண்டிய 1200 டாலரையும் நான் வரவு வைத்துவிடுகிறேன்' என்று கூறினான்.

வெளியே வந்துகொண்டிருந்தவன் டாம் என்ற நீக்கிரோ. அவனை எல்லோரும் 'டாம் மாமா' என்று பிரியமாக அழைப்பார்கள். அவன் திண்ணிய உடல் படைத்தவன்; எல்லோரிடத்திலும் அன்பு கொண்டவன். ஹேலி அவனைக் குறிப்பிட்டுக் கேட்டதில் ஷெல்பிக்கு வருத்தம் அதிகம். 'கடன் இல்லாவிட்டால், இந்த டாமை விற்பதற்கு நான் இணங்கவே மாட்டேன். அவன் அவ்வளவு நல்லவன், நேர்மையுள்ளவன், முதல்தரமான உழைப்பாளி; மத விஷயத்தில் அவனுக்குப் பக்தி அதிகம்' என்று அவர் கூறினார். வியாபாரிக்கு அவர் பேச்சே பிடிக்கவில்லை. 'அடிமைகளுக்கு மதமும் கிடையாது, ஒன்றும் கிடையாது. நான் அவர்களை ஆடு மாடுகளைப் போலவே வாங்குகிறேன், அப்படியே விற்கிறேன். நான் குறிப்பி

அடிமையையும், ஒரு பையனையும் கொடுத்தால், கணக்கு முடிந்துவிடும்!' என்று மீண்டும் அவன் சொன்னான்.

அந்த நேரத்தில் நான்கு வயதுள்ள நீகிரோ சிறுவன் ஒருவன் அந்த அறைக்குள்ளே ஓடிவந்தான். ஷெல்பி அவனைக் கண்டதும் மேசைமீதிருந்த திராட்சைப்பழக் கொத்தொன்றை அவனிடம் அன்புடன் கொடுத்து, அவனை நடனமாடச் சொன்னார். உடனே அந்தப் பையன், ஒரு பாட்டைப் பாடிக்கொண்டு, ஆடத் தொடங்கினான். அப்பொழுது எலிஸா என்ற வேலைக்காரி, அறைக்குள் வந்து அவனை அழைத்துக் கொண்டு சென்றாள். இளவயதுடைய அந்தப் பெண் தான் அந்தப் பையனுடைய தாய் என்பது அவள் தோற்றத்திலிருந்து தெரிந்தது.

அவள் வெளியே சென்றதும், ஹேலி, 'இந்தப் பையனையும் சேர்த்துக் கொடுத்துவிடுங்கள்!' என்று கேட்டான்.

'ஐயோ, அவன் எலிஸாவின் ஒரே குழந்தை. அவனைக் கொடுக்க அவள் சம்மதிக்கவே மாட்டாள். ஹாரி என்ற அந்தச் சிறுவன்தான் அவளுக்கு உயிர் போன்றவன். அவனைப் பிரித்தால், அவள் நெஞ்சு உடைந்துபோவாள்!' என்றார் ஷெல்பி.

'அடிமைகளிலே தாயேது, பிள்ளையேது? இவர்களுக்கெல்லாம் நீங்கள் அதிகமாக இடம் கொடுத்துவிட்டீர்கள்' என்று ஹேலி கூறினான்.

'ஹாரி விஷயமாய் நான் யோசித்துத்தான் சொல்லவேண்டும். நீங்கள் இன்று மாலை திரும்பி வந்தால் முடிவு சொல்கிறேன்' என்றார் ஷெல்பி.

இவர்கள் அறைக்குள்ளே பேசிக்கொண்டிருந்த



அந்தப் பையன் ஆடத் தொடங்கினான்...

பொழுது, எலிஸா வெளியே நின்று சிறிது நேரம் உற்றுக் கேட்டாள். ஹாரியை விற்கப்போவதாக அவள் தெரிந்துகொண்டாள். அவள் திடுக்குற்று, என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்து நிற்கை யில், யசமானி அம்மாள் அவளைக் கூப்பிட்டாள். உடனே எலிஸா அவளிடம் ஓடிச் சென்று, நடந்ததை அவளிடம் தெரிவித்தாள். ‘முதலாளி என் குழந் தையை விற்றுவிடுவார் போலிருக்கிறது. [illegible]

விற்கப்போகிறார்களாம்!' என்று அவள் படபடப்புடன் கூறினாள்.

அதைக் கேட்ட திருமதி ஷெல்பி, 'அப்படியொன்றும் இராது. வீட்டுக்கு வந்தவர் எல்லோரும் உன் பையனைப் பிடித்துக்கொண்டு போவார் என்று எண்ணுகிறாய்? என் கணவர் அடிமைகளை விற்கவே மாட்டார்!' என்று யசமானி அம்மாள் கூறினாள். அதிலிருந்து எலிஸா சற்று ஆறுதல் அடைந்தாள். பின்பு அவள் வீட்டு வேலைகளைக் கவனிக்கச் சென்றாள்.

அன்றிரவு ஷெல்பி உணவு உண்ணும்பொழுது திருமதி ஷெல்பி அவரிடம் விசாரித்தாள். 'நம்முடைய அடிமைகளில் எவரையேனும் விற்கப்போகிறீர்களா?' என்று அவள் கேட்டாள். ஷெல்பி, அடிமைகளை, விற்பதில் தனக்கு மனமே இல்லையென்றும், ஹேலியிடம் தான் வாங்கியிருந்த கடனுக்காக டாம் மாமாவையும் குழந்தை ஹாரியையும் அவனுக்குக் கொடுக்க வேண்டியிருப்பதாயும் தெரிவித்தார். அந்த இரண்டு அடிமைகளையும் கொடுக்காவிட்டால், தான் வீட்டையே விற்கவேண்டி யிருக்குமென்றும் அவர் சமாதானம் சொன்னார்.

௨. எலீஸாவும் அவள் கணவனும்

எலீஸா சிறு குழந்தையா யிருந்தபொழுது, திருமதி ஷெல்பி அவளை விலைக்குவாங்கி வளர்த்துவந்தாள். அவள் அவர்கள் வீட்டுக்குழந்தையைப்போலவே வளர்ந்துவந்தாள். அவளுக்கு ஓரளவு கல்வியும் அளிக்கப்பட்டது. வயதுவந்தபின், அவள் ஹாரிஸ் என்ற ஓர்

அடிமையை மணந்துகொண்டாள். ஹாரிஸ் பக்கத்து ஊரில் வேறு ஒரு தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தான். அவனுடைய முதலாளி இரக்க மற்றவர். அவர் அவனைப் பலவாறு துன்புறுத்தி வந்தார். அத்துடன் அவன் மேற்கொண்டு எலிஸா இருக்கும் இடத்திற்குப் போகக்கூடாது என்று கட்டுப் பாடு செய்திருந்தார். ஆனால் அவன் இரகசியமாக, அவருக்குத் தெரியாமல், அவளைப் பார்ப்பதற்காக இரவில் சென்றிருந்தான்.

எலிஸா அவனைக் கண்டதும் மகிழ்ச்சியடைந்து, அவனைத் தன் அறைக்குள் அழைத்துச் சென்றாள். அங்கு அவன் முகம் களையிழந்து காணப்பட்டது. எலிஸா குழந்தை ஹாரியைத் தூக்கி அவனிடம் காட்டினாள். ஹாரிஸ், 'இவன் ஏன் பிறந்தான் என்று தான் வருத்தமாயிருக்கிறது!' என்றான். அதைக் கேட்டு எலிஸா நடுக்கமடைந்தாள். அவள் அவன் அருகில் அமர்ந்துகொண்டு, 'ஹாரிஸ், நீ ஏன் இன்று இவ்வளவு வருத்தமாயிருக்கிறாய்?' என்று கேட்டாள்.

'நானும் பிறந்தே யிருக்கக்கூடாது. அடிமைகளாகிய நமக்கு வாழக்கூட உரிமை கிடையாது. நான் புத்திசாலியா யிருப்பது என் முதலாளிக்குப் பிடிக்க வில்லை. நான் எங்கேயாவது ஓடிச்செல்ல விரும்பு கிறேன். இன்னும் ஒரு வாரத்தில் நான் தப்பி ஓட வேண்டும். என்னை எவரும் பிடிக்க முடியாது. எப்படி யாவது நான் கானடா தேசத்திற்குப் போய்விட்டால், இந்த அடிமைத் தொல்லை ஒழிந்துவிடும்.'

'நீ போய்விட்டால், என் கதி என்னவாகும்?'

'சில நாட்களுக்குப் பிறகு நீயும் அங்கே வந்து விடு! அங்கே நாம் சந்தித்துக்கொள்வோம். அப்படி

இயலாதுபோனல், நாம் சுவர்க்கத்தில்தான் சந்திக்க வேண்டும்!'

அவனுடைய வருத்தத்தை அறிந்துகொண்டு, எலிஸா அவனைச் சமாதானப்படுத்தினாள். 'நம்மை வளர்த்துவரும் முதலாளிகளுக்குக் கேடு செய்யக் கூடாது' என்று அவள் சொன்னாள்.

'எவன் எனக்கு முதலாளி?' என்று ஹாரிஸ் கேட்டான்.

'என் முதலாளிக்கும் யசமானிக்கும் விசுவாசமாக நடப்பதுதான் நியாயம் என்று நான் எண்ணி வந்திருக்கிறேன்.'

'நீ வேண்டுமானால் விசுவாசமாயிருக்கலாம். சிறு வயது முதலே, உன்னை அவர்கள் வளர்த்துவந்தார்கள். ஆனால் எனக்கு எவனும் முதலாளியில்லை. நான் எத்தனை கசையடிகள் பட்டிருக்கிறேன் என்பது உனக்குத் தெரியுமா? நான் பட்டதெல்லாம் போதும். இனி எப்படியாவது தப்பி ஓடவேண்டும். கானடாவிலே சுதந்திரமாக ஏதாவது தொழில் செய்து பிழைக்கலாம்.'

அவனுடைய உறுதியைக் கண்ட எலிஸா, அவன் எதிரிகளிடம் அகப்பட்டால், தோலை உரித்துவிடுவார்கள் என்று எச்சரிக்கை செய்தாள். அவன், 'என்னைப் பற்றி நீ கவலைப்பட வேண்டாம். எப்படியாவது நீ வெளியே வந்து சேர்ந்தால் போதும்' என்றான். அன்று அவன் ஏதோ வெறிகொண்டிருந்தான். எவ்விதத்திலும் அவனைத் தடுக்கமுடியாது என்பதைத் தெரிந்துகொண்டு, எலிஸா மெதுவாக அவனுக்கு விடைகொடுத்து அனுப்பினாள். அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களிலிருந்தும் கண்ணீர்

தாரை தாரையாக வழிந்து கொண்டிருந்தது. வரவேற்பறையி ணில், ஒரு வேளை அதுவே அவர்களுடைய கடைசிச் சந்திப்பாக இருக்குமோ என்று அவர்கள் சந்தேகப்பட்டுக் கொண்டிருந்தனர். கணவன் இயற்கையிலேயே துக்கப்பட்டுக் கொண்டிருந்ததால், எலிஸா குழந்தை யைப்பற்றி அவனிடம் ஒன்றுமே சொல்லவில்லை.

St Xavier's College ...
PALAYAMKOTTAI

3. டாம் மாமாவின் குடிசை

டாம் மாமாவின் குடிசை ஷெல்பி பிரபுவின் வீட்டுக்கு அருகிலேயே இருந்தது. குடிசைக்கு முன் னால் அழகிய ரோஜாச் செடிகளுள்ள ஒரு சிறு தோட் டமும் இருந்தது. குடிசை மரக்கட்டைகளால் அமைந் தது. டாமின் மனைவி **குளோ** என்பவள், யசமானர் வீட்டில் வேலைகளை முடித்துவிட்டு, அந்தக் குடிசைக்கு வந்து, பலகாரங்கள் தயாரித்துக் கொண்டிருந்தாள். ஷெல்பியின் வீட்டில் அவள் தான் தலைமையான சமை யற்காரி. அந்த மாவட்டத்திலயே சமையல் செய்வ தில் தனக்கு நிகரானவர் இல்லை என்று அவள் பெருமை பேசிக்கொள்வாள்.

அறையில் ஒரு மூலையிலே ஒரு கட்டில் இருந்தது. அதனருகில் இரண்டு பையன்களும், ஒரு பெண் குழந் தையும் விளையாடிக் கொண்டிருந்தார்கள். **மோஸே, பீட்டர்** என்ற அந்தப் பையன்கள் தங்கள் தங்கைக்கு நடமாடக் கற்றுக்கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் மூவரும் டாமின் குழந்தைகள்.

டாம் மாமா, ஒரு நாற்காலியில் அமர்ந்து, 'மோஸை

மீதிருந்த தாள்களில் சில எழுத்துக்களை எழுதிக் கொண்டிருந்தான். அவன் அருகில் ஷெல்பியின் மூத்த குமாரன் ஜியார்ஜ் உட்கார்ந்து கொண்டு, அவன் எழுதுவதைக் கவனித்து வந்தான். டாம் தவருக எழுதும்பொழுது, அவன், 'இப்படி எழுத வேண்டும்' என்று திருத்திக் கொடுத்தான். அவன் சொல்லிய வண்ணமே டாம் திருத்தி எழுதினுன். ஒரு பக்கத்திலே குழந்தைகள் இன்பமாக விளையாடிக் கொண்டிருந்தார்கள். மறு பக்கத்திலே, பகல் முழுதும் நன்ருக உழைத்து வந்த டாம், கல்வி கற்க வேண்டும் என்ற ஆர்வத்தோடு, எழுதிக் கொண்டிருந்தான். அடுப்படியிலே குளோ மகிழ்ச்சியோடு வேலை செய்து கொண்டிருந்தாள். இத்தகைய அமைதியான இன்ப முள்ள குடும்பம் உலகிலே அரிது என்று சொல்லும் படி இருந்தது.

திடீரென்று ஜியார்ஜ், 'அத்தை! பணியாரம் தயா ராகி விட்டதா? எனக்குப் பசியாயிருக்கிறது!' என்று கேட்டான். அவள் எல்லாம் தயாராகிவிட்டதாகக் கூறினுள். மேசை மீதிருந்த புத்தகமும் தாள்களும் வேறிடத்தில் எடுத்து வைக்கப்பட்டன. மேசைமீது டாம் ஒரு துணியை விரித்து வைத்தான். அவனுக்கும் ஜியார்ஜுக்குமாக, குளோ சில தட்டுக்களில் பணி யாரங்களைக் கொண்டு வந்து வைத்தாள். அவர்கள் சாப்பிடத் தொடங்கினுர்கள். அப்பொழுது ஜியார்ஜ் சில பண்டங்களை எடுத்துத் தரையிலே விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளிடம் கொடுத்து உண்ணச் செய்தான்.

சாப்பாடு முடிந்தபின்பு, குளோ மேசையை நன்ருகத் துடைத்துவிட்டு, அதை அறையின் நடுவே

கொண்டு வைத்தாள். அப்பொழுது டாம் ஜியார்ஜைப் பார்த்து, 'நேரமாகிவிட்டது! நாம் பிரார்த்தனையைத் தொடங்குவோமா?' என்று கேட்டான். 'அப்படியே செய்வோம்!' என்று ஜியார்ஜ் கூறினான். அந்த நேரத்தில் ஷெல்பி பிரபுவின் தோட்டங்களில் வேலை செய்து வந்த எல்லா அடிமைகளும் அங்கே வந்து கூடிவிட்டனர். தேவ கீதங்கள் பாடப்பட்டன. ஜியார்ஜ் வேதப் புத்தகத்திலிருந்து ஒரு பகுதியை வாசித்தான். டாம் மாமா, அன்பு ததும்பும் உள்ளத்தோடு, ஓர் உபதேசம் செய்தான். சிறிது நேரம் எல்லோரும் பிரார்த்தனை செய்துவிட்டு, டாமிடம் விடை பெற்றுக்கொண்டு வெளியே சென்றனர்.

டாம் வாயிற் கதவை அடைத்துக் கொண்டு உள்ளே சென்று சிறிது நேரம் குழந்தைகளிடம் விளையாடிக் கொண்டிருந்தான். கைக்குழந்தையான போலி அவன் மூக்கையும் தலையையும் பிடித்து வேடிக்கை செய்து கொண்டிருந்தது. சிறிது நேரத்திற்குப்பின் டாம் குழந்தைகளைக் கட்டிலிலே படுக்க வைத்துத் தூங்கச் செய்தான். குளோ தன் வேலைகளை முடித்து விட்டு, தானும் அயர்ந்து கண் மூடினாள். டாமும் குழந்தைகளின் பக்கத்தில் படுத்துக் கொண்டான்.

அவர்கள் படுத்துக்கொண்டு வெகு நேரமாகவில்லை. திடீரென்று யாரோ குடிசையின் கதவைத் தட்டும் ஓசை கேட்டது. உடனே குளோ எழுந்திருந்தாள். வெளியேயிருந்து 'அத்தை, அத்தை!' என்று குரல் கேட்டது. அது எலிஸாவின் குரல் என்று தெரிந்ததும், குளோ வாயிற் கதவைத் திறந்தாள். அந்த நடு நிசியில் நல்ல உடைகள் அணிந்து எலிஸா தன் குழந்தையையும் தூக்கிக்கொண்டு வந்

திருந்தாள். அவள் அறைக்குள்ளே நுழைந்ததும், அவளுடைய பதட்டத்தையும் பரபரப்பையும் கண்டு, 'என்னவிஷயம்?' என்று குளோ விசாரித்தாள். டாமும் எழுந்து நின்று கவனித்துக் கொண்டிருந்தான்.

அன்று இரவு வீட்டு வேலைகளை முடித்துவிட்டு



தங்கள் தங்கைக்கு நடமாடக் கற்றுக்கொடுத்துக் கொண்டிருந்தார்கள்

எலிஸா தன் அறைக்குத் திரும்பும்பொழுது, யசமானரும் அவர் மனைவியும் பேசிக் கொண்டிருந்தது அவள் காதில் பட்டது. அதிலிருந்து தன் குழந்தையையும் டாம் மாமாவையும் யசமானர் விற்றுவிட்டார் என்பதை அவள் தெரிந்துகொண்டாள். உடனே அங்கிருந்து அவள் தன் அறைக்குச் சென்று, அங்கே கட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த தன் குழந்தையை எழுப்பினுள். 'ஹாரி! நாம் உடனே இந்த இடத்தை விட்டு வெளியேற வேண்டும்! நீ சப்தமே போடக் கூடாது. அம்மா சொன்னபடி கேட்க வேண்டும். யசமானர் உன்னைக் கைவிட்டு விட்டார். ஆனுல் உன்னுடைய தாயாகிய நான் உன்னைக் கைவிடுவேனு?' என்று சொல்லிக் கொண்டே, அவனுக்குப் புதுச் சட்டை அணிவித்து, ஒரு போர்வையும் போர்த்தி அவனை உட்கார வைத்தாள். அறையிலிருந்த ஒரு காகிதத் துண்டை எடுத்து, அதில் நன்றியறிதலோடு யசமானி அம்மாளுக்குச் சில வரிகள் எழுதி வைத்தாள். பிறகு சட்டென்று குழந்தையைத் தூக்கிக் கொண்டு, அவள் நேராக டாம் மாமாவின் குடிசையை நோக்கிச் சென்றுள்.

அங்கே டாமிடமும் அத்தையிடமும் தான் கேள்விப்பட்ட விஷயத்தைச் சுருக்கமாய்ச் சொன்னுள். 'நான் ஓடிச் செல்லப் போகிறேன். என் குழந்தையை நான் எப்படியாவது காப்பாற்ற வேண்டும்! மாமா, உன்னையும் விற்று விட்டதால், நீயும் என்னேடு வந்து விடு!' என்று அவள் ஆவேசத்துடன் கூறினுள். இச் செய்தியைக் கேட்ட இருவரும் சிறிது நேரம் அப்படியே திகைத்து நின்றனர். எலிஸாவின் பேச்சை அவர்கள் அப்படியே நம்பினர்.

'உடங்களை விற்றதில் யசமானருக்கு மிகவும் வருத்தம்தான்' என்றாள் எலிஸா.

அப்பொழுது டாம் பேசலானான்: 'யசமானர் மிகவும் நல்லவர். நம்மில் எவரையும் விற்பதற்கு அவர் இசைய மாட்டார். ஆனால் அவருக்கு என்ன கஷ்டம் நேர்ந்து விட்டது என்று தெரியவில்லை. அதனால்தான் அவர் என்னையும், உன் பையனையும் விற்கத் துணிந்திருக்கிறார்!'

'உன்னை விலைக்கு வாங்கியவன் ஒரு வேளை மிகவும் கொடியவனா யிருப்பான். அவனிடம் போனால், உனக்கு என்ன கஷ்டங்கள் நேருமென்று தெரியவில்லை. உன் துணிமணிகளை நான் ஒரு நொடியில் எடுத்துத் தருகிறேன். நீயும் எலிஸாவுடன் ஓடிவிடு!' என்று கேட்டுக்கொண்டாள் குளோ.

'அப்படியில்லை; நான் போக மாட்டேன்! எலிஸா போக வேண்டியது அவசியம். அது அவள் உரிமை. யசமானர் என்னையே விற்றிருந்தாலும், அவர் உன்னைக் கைவிட மாட்டார். உன்னையும் குழந்தைகளையும் அவர் நிச்சயம் காப்பாற்றுவார். இப்பொழுது அவருக்குப் பணம் தேவையா யிருப்பதால், என்னை அவர் விற்றிருக்கலாம். பின்னால் ஒரு காலத்தில் அவரே என்னை மறுபடியும் விலைக்கு வாங்கி வருவார்' என்று சொன்னான் டாம்.

அவன், பேச்சின் நடுவே, கட்டிலைத் திரும்பிப் பார்த்தான். அதிலே மூன்று குழந்தைகளும் மெய் மறந்து தூங்கிக் கொண்டிருந்தனர். அவர்களைப் பார்த்தவுடன், அவன் கண்களிலிருந்து கண்ணீர் அருவியாகப் பெருகி வந்தது. அவன் தரையிலே அமர்ந்துவிட்டான்.

எலிஸா அவசரமாகப் புறப்படலானாள். போகும் பொழுது, அவள், 'என் கணவரைக் கண்டால், அவருக்குச் சமாதானம் சொல்லுங்கள். நான் ஏன் அவசரமாக வெளியேறுகிறேன் என்ற செய்தியை அவருக்கு உடனே தெரிவியுங்கள். எப்படியும் கானடாவிலே அவரைத் தேடிச் சந்திப்பேன்!' என்று கூறினாள். மறு கணத்திலேயே அவள் வேகமாக வெளியே ஓடி மறைந்து விட்டாள்.

4. அடிமையைத் தேடுதல்

மறு நாள் காலை திருமதி ஷெல்பி விழித்து எழுந்ததும், அவள் எலிஸாவைத் தேடினாள். மூன்று முறை அவள் மணியடித்தாள். எலிஸா வரவில்லை. பிறகு ஆண்டி என்ற நீகிரோ பையனை அழைத்து, எலிஸாவைக் கூட்டிவரச் சொன்னாள். அவன் எலிஸாவின் அறைக்குள் சென்று பார்த்தான். துணிகளெல்லாம் தரையிலே சிதறிக் கிடந்தன. அங்கே எலிஸாவும் இல்லை, குழந்தையும் இல்லை. ஆண்டி அப்படியே திரும்பிச் சென்று, தான் கண்ட செய்தியை யசமானியிடம் தெரிவித்தான்.

'ஆகா! எலிஸா தப்பிவிட்டாள்! அவள் ஓடிப் போனதுதான் நல்லது! குழந்தையை அவளிடமிருந்து பிரித்தபிறகு, அவள் முகத்தில் நான் எப்படி விழிக்க முடியும்?' என்று திருமதி ஷெல்பி தனக்குள்ளே சொல்லிக்கொண்டாள். எலிஸாவைப் பற்றி அவள் எவ்வளவு மகிழ்ச்சியடைந்தாளோ, அவ்வளவு

ஷெல்பி பிரபு துக்கமடைந்தார். அவளுடைய குழந்தையை விலைக்கு வாங்கிய ஹேலி வந்து கேட்டால், என்ன பதில் சொல்வது என்று அவர் தயங்கினார். அந்த நேரத்தில் அடிமை வியாபாரி ஹேலி வீட்டு வாயிலுக்கு வந்துவிட்டான்.

ஷெல்பி அவனை வரவேற்று, நடந்த விஷயத்தை அவனிடம் கூறினார். அவன் மிகுந்த கோபமடைந்து, துள்ளிக் குதித்தான். ஷெல்பி அவனைச் சமாதானப் படுத்தி, 'உங்களுடன் இரண்டு வேலையாட்களை அனுப்பி வைக்கிறேன். என் குதிரைகளையும் எடுத்துக்கொண்டு நீங்கள் மூவரும் உடனே தொடர்ந்து சென்றால் எலிஸாவைப் பிடித்துவிடலாம்!' என்று சொன்னார். அப்பொழுது அருகிலிருந்த ஆண்டியை அழைத்து, 'நீ போய் வேலைக்காரன் ஸாம் என்பவனை அழைத்து வா! இரண்டு குதிரைகளும் தயாராயிருக்கட்டும்!' என்று சொல்லியனுப்பினார். பின்னர் பலகாரம் அருந்துவதற்காக, அவர் ஹேலியைக் கூடத்திற்கு அழைத்துச் சென்றார். திருமதி ஷெல்பி, அவன் முகத்தில்கூட விழிக்கக்கூடாது என்று, வேறு இடத்திற்குப் போய்விட்டாள்.

ஆண்டி ஸாமைக் கண்டு பேசினான். ஸாம் முதலாளிக்குத் தன் கைவரிசையைக் காட்டுவதற்கு அது தக்க வாய்ப்பு என்று மகிழ்ந்தான். 'ஒரு நொடியில் எலிஸாவைப் பிடித்துவிடலாம்!' என்று அவன் சவால் கூறினான். ஆண்டி அவனைத் தடுத்துப் பேசினான்: 'நீ என்ன, உண்மையாகவே எலிஸாவைப் பிடிக்க வேண்டுமென்று முனைந்துவிட்டாயா? முதலாளிதான் அவளைப் பிடிக்க வேண்டுமென்று ஆத்திரப்படுகிறார். எசமானியம்மாள் அவளைப் பிடிக்காமல் விட்டுவிட

வேண்டுமென்று விரும்புகிருர்கள். நமக்கு பாசமாளி யம்மாளின் தயவுதான் தேவை. ஆகையால், நாம் கூடவே போய், எலிஸா வியாபாரி கையில் அகப்படா மல் இருப்பதற்கு வழி செய்யவேண்டும்!' என்று சொன்ஞன்.

ஸாம், 'அதுவே சரி' யென்று சொல்லிவிட்டு, இரண்டு குதிரைகளை அவிழ்த்துக்கொண்டு வந்தான். அவன் ஹேலியின் குதிரை கட்டியிருந்த இடத்திற்கு வந்து, அதன் சேணத்திற்கு அடியில் கீழே கிடந்த கூர்மையான சிறு கல் ஒன்றை எடுத்துத் திணித்து வைத்தான்.

ஹேலி அங்கே வந்ததும் தன் குதிரைமீது ஏறி ஞன். சேணத்தின்மேல் அவன் அமர்ந்ததும் அதனடியி லிருந்த கல் குதிரையை அழுத்தி அதன் தோலைக் கிழித்துவிட்டது. உடனே குதிரை வெறிகொண்டு துள்ளிக் குதித்து, ஹேலியைத் தூக்கி யெறிந்து விட்டு, வெளியே ஓடத் தொடங்கிற்று. ஸாமும் ஆண்டியும் ஷெல்பியின் இரண்டு குதிரைகளையும் அவிழ்த்து விட்டுவிட்டனர். பிறகு அவர்களிருவரும் தரையிலே கிடந்த ஹேலியைத் தூக்கியெடுத்தனர். ஹேலி, 'உடனே போய்க் குதிரைகளைப் பிடித்து வாருங்கள்! நேரமாகிவிட்டது!' என்று உத்தரவிட் டான்.

ஸாமும் ஆண்டியும் குதிரைகளைத் தொடர்ந்து ஓடலாயினர். மூன்று குதிரைகளும் சேர்ந்து ஓடிக் கொண்டிருந்தன. அவர்கள் மனம் வைத்திருந்தால், அவைகளை உடனே பிடித்திருக்கலாம். ஆனால், அவர் கள், பிடிக்கப்போகும் பாவனையில், கூச்சலிட்டு, அவை களை விரட்டிக்கொண்டுதான் ஓடினர். இவ்வாறு

மூன்று மணி நேரம் சாலையிலே நெடுந்தூரம் ஓடிய பிறகு, அவர்கள் குதிரைகளைப் பிடித்துக்கொண்டு வீடு திரும்பிவந்தனர். ஹேலி உடனே தாங்கள் கிளம்பிச் செல்லவேண்டுமென்று கூறினான். அவனுக்குக் கோபமும் எரிச்சலும் தாங்க முடியாமல் இருந்தன. 'இப்பொழுதே மூன்றுமணி நேரம் பாழாகிவிட்டது!' என்று அவன் வருந்தினான். குதிரைகளைத் தேய்த்துவிட வேண்டுமென்றும், அவைகளுக்குச் சிறிதுநேரம் ஓய்வு கொடுக்க வேண்டுமென்றும் ஸாம் கூறினான். அந்த நேரத்தில் சாளரத்தின் வழியாக அவர்களைப் பார்த்துக்கொண்டிருந்த திருமதி ஷெல்பி, அங்கே வந்து, ஹேலி சாப்பிட்டுவிட்டுப் போகவேண்டுமென்றும், குளோ அத்தை விரைவிலே சமையலை முடித்துவிடுவாள் என்றும் கூறினாள். அதனால் ஹேலி அவளுடன் வீட்டுக்குள்ளே சென்றான்.

குதிரைகள் லாயத்திற்குக் கொண்டு போகப்பட்டன. அப்பொழுது ஸாமும் ஆண்டியும் மிகுந்த மகிழ்ச்சியோடு பேசிக்கொண்டார்கள். 'யசமானி அம்மாளின் நோக்கப்படியே நாம் செய்துவிட்டோம். அவர்களுக்கு மிகுந்த சந்தோஷமாயிருக்கும்!' என்றான் ஆண்டி. 'ஆம், இதற்குள் எலிஸா வெகுதூரம் போயிருப்பாள். இன்னும் நாம் சில தந்திரங்கள் செய்தால், அவளைப் பிடிக்கமுடியாமலே தடுத்துவிடலாம்' என்று ஸாம் சிரித்துக்கொண்டே சொன்னான். இருவரும் வீட்டை நோக்கித் திரும்பினர். 'இன்று நமக்கு நல்ல விருந்து கிடைக்கும்' என்று பேசிக்கொண்டே அவர்கள் சமையலறையை நாடிச் சென்றனர்.

சாப்பாட்டிற்குப் பிறகு இரண்டு மணிக்கு ஹேலியும் இரண்டு நீகிரோவர்களும் குதிரைகளின்மீது

ஏறிக்கொண்டு, எலிஸாவைத் தேடுவதற்காகப் புறப் பட்டுச் சென்றனர். சிறிது தூரம் சென்றபின், சாலை இரண்டு பிரிவாகப் பிரிந்து காணப்பட்டது. ஒரு பாதை கல்லும் சரளையும் பரப்பி நல்ல ரஸ்தாவாக இருந்தது. மற்றது வெறும் மண்ணால் அமைந்ததாக இருந்தது. அவர்கள் எந்தப் பாதையில் செல்வது என்று ஆலோசிக்கத் தொடங்கினார்கள். 'மண் பாதையே நல்லது. அதில் ஆள் நடமாட்டம் குறைவு. அந்த வழியாகத்தான் எலிஸா போயிருப்பாள்!' என்று ஸாம் கூறினான். அதுதான் சரியென்று ஹேலியும் ஒப்புக்கொண்டான்.

ஆனால் அவர்கள் ஒரு மணி நேரம் சவாரி செய்து கொண்டு சென்றதில், பாதை குறுக்கே அடைக்கப் பட்டிருந்ததைக் கண்டனர். அப்பொழுது ஹேலி மிகுந்த கோபமுற்று, 'இங்கே மேற்கொண்டு பாதை இல்லை என்பது உங்களுக்கு முன்பே தெரிந்திருக்கும். வேண்டுமென்றே என்னை ஏமாற்றிவிட்டீர்கள்! உங்க ளுடைய நீகிரோ வேலையை என்னிடமே காட்டிவிட் டீர்கள்!' என்று உரக்கக் கத்தினான். ஸாம், 'அப்படி யொன்றுமில்லை. சுருக்கமான பாதையில் அவளை எட்டிப் பிடித்துவிடலாம் என்றுதான் எண்ணினேன்' என்றான். மூவரும் அங்கிருந்து வந்தவழியே திரும் பிச் சென்று, சரளை பரப்பியிருந்த ரஸ்தாவில் குதிரை களை ஓட்டிக்கொண்டு சென்றனர்.

5. தாயும் சேயும்

டாம் மாமாவின் குடிசையைவிட்டு வெளியேறிய பின், எலிஸா தன் நிலைமையைப் பற்றிச் சிந்தனை செய்து வருந்தினாள். இந்தப் பரந்த உலகிலே தான் ஆதரவற்றுத் தனியே தவிப்பதாக எண்ணினாள். பலமுறை ஆண்டவனைத் தொழுதாள். ஹாரியை அவள் நடத்தியே கூட்டிக்கொண்டு போயிருக்கலாம்; ஆனால் அவனைக் கீழே விடுவதற்குக்கூட அவளுக்கு மனமில்லை. அவனும் தாயை அன்போடு பற்றிக் கொண்டிருந்தான்.

நடந்து நடந்து, அவள் கென்டக்கியிலிருந்து வெகுதூரம் சென்றுவிட்டாள். பொழுதும் புலர்ந்தது. மேலும் நடந்துகொண்டே சென்று, எப்படியும் ஓஹியோ நதியைக் கடந்துவிட்டால், தன்னை எவரும் பிடிக்கமுடியாது என்று அவள் கருதியிருந்தாள். அந்த ஆற்றுக்கு வடக்கே அடிமைகளை எவனும் தானாகப் போய்ப் பிடிக்கமுடியாது. அங்கே அடிமை வியாபாரமும் இல்லை. அதனால்தான் எலிஸா ஆற்றைக் கடந்துவிட வேண்டுமென்று ஆத்திரத்தோடு நடந்து கொண்டேயிருந்தாள். பகலில் அவள் பையனைக் கீழே இறக்கி நடத்திக் கூட்டிக்கொண்டு போனாள். நண்பகலில் அவள் ஒரு கடையில் பலகாரங்கள் வாங்கி, தானும் உண்டு, குழந்தைக்கும் கொடுத்தாள். அங்கேயே சிறிதுநேரம் ஓய்வெடுத்துக்கொண்டாள்.

மீண்டும் நடந்துசென்று, சூரியன் மேல்திசையில்

மறையுமுன்பே, அவள் ஓஹியோ நதிக்கரையை அடைந்தாள். ஆற்றைப் பார்த்ததும், அவள் திடுக்கிட்டாள். வெள்ளம் அதிகமாயிருந்தது. தண்ணீரில் இறுகிய பனிப்பாறைகள் கட்டி கட்டியாக மிதந்து கொண்டிருந்தன. அந்த ஆற்றை எப்படித் தாண்டு வது என்று திகைத்து, அவள் அருகிலிருந்த ஒரு சத்திரத்தை நாடித் திரும்பினாள். நெடுந்தூரம் நடந்த தால், அவள் கால்கள் தள்ளாடிக் கொண்டிருந்தன. பசியோ அதிகமாயிருந்தது. அன்றிரவு சத்திரத் திலே தங்கி ஓய்வெடுத்துக்கொண்டு, மறுநாள் காலை யில் ஓர் ஓடத்தின்மூலம் ஆற்றைக் கடந்து செல்ல லாம் என்று எண்ணி அவள் சத்திரத்திற்குச் சென்றாள்.

சத்திரத்தை நடத்திவந்த கிழவி அவளுடைய நிலைமையைக் கண்டு பரிதாபப்பட்டாள். எலிஸா அங்கு போனவுடன் ஓடம் கிடைக்குமா என்பதையே முதலாவது விசாரித்தாள். வெள்ளம் காரணமாக ஓடம் நிறுத்தப்பட்டுவிட்டது என்று கிழவி சொன்னாள். அவள் எலிஸாவும் குழந்தையும் தங்குவதற்கு ஓர் அறையைக் காட்டினாள். அங்கே எலிஸா குழந்தை யைப் படுக்கையில் வைத்துத் தூங்கச் செய்தாள். அப்பொழுது கிழவி அங்கே வந்து சிறிதுநேரம் அவ ளுடன் பேசிக்கொண்டிருந்தாள். தனக்குத் தெரிந்த நண்பன் ஒருவன் இருப்பதாகவும், அவன் வெள்ளத் திலே தைரியமாக ஓடத்தை விடுவானோ என்று கேட் டுச் சொல்வதாகவும் அவள் தெரிவித்தாள். அவள் வெளியே சென்றபின், எலிஸா சாளரத்தின் பக்கமாக நின்று, ஆற்றைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவ ளுக்கு உறக்கம் வரவில்லை. வெளியே ஆறு சீறிப்

பாய்ந்து கொண்டிருந்தது. அதைக் கடந்து எப்படி யாவது ஓஹியோ ராஜ்யத்தை அடைந்துவிட வேண்டு மென்று அவள் உள்ளம் துடித்துக் கொண்டிருந்தது.

அந்த நேரத்தில் வெளியே குதிரைகள் ஓடிவரும் ஓசையும் கூச்சலும் கேட்டன. எலிஸா வெளியே எட்டிப் பார்த்தாள். மூன்று குதிரைகளில் ஆட்கள் வந்துகொண்டிருந்தனர்; அவர்களில் இருவர் ஸாமும் ஆண்டியும் என்பதையும், மற்றவன் அடிமை வியா பாரி என்பதையும் அவள் தெரிந்துகொண்டாள்.

அந்த நேரத்தில் ஸாம் தனது தொப்பியைக் காற் றிலே பறக்க விட்டுவிட்டு, 'ஐயோ, என் தொப்பி போய்விட்டது! இருங்கள், அதை எடுத்து வரு கிறேன்!' என்று உரக்கக் கூவினன். சாளரத்தின் வழியாக அவன் எலிஸாவைக் கண்டதால்தான், அவ ளுக்கு எச்சரிக்கை செய்வதற்காக, அவன் இவ்வாறு கூவினன்.

எலிஸா கண் கொட்டித் திறக்குமுன்னல், உறங் கிக்கொண்டிருந்த குழந்தையைத் தூக்கிக்கொண்டு, ஆற்றை நோக்கி ஓடினள். அப்பொழுது அவளை ஹேலி கண்டுவிட்டான். 'இந்தப் பெண் ஓர் அசுரப் பெண்ணுய்த்தா னிருப்பாள்! காட்டுப் பூனையைப் போலல்லவா துள்ளிஓடுகிருள்' என்று அவன் சீறினன்.

அப்பொழுது ஸாம், 'இனி எங்களுக்கு வேலை யில்லை. குதிரைகளைக் கொண்டுபோய் எசமானரிடம் ஒப்படைக்கவேண்டும். உங்களுக்கு வணக்கம்!' என்று சொல்லிவிட்டு, ஆண்டியை அழைத்துக்கொண்டு அங்கிருந்து திரும்பிச் சென்றன்.

ஹேலி, குதிரைமீதிருந்து கீழே குதித்து, எலிஸா வைத் தொடர்ந்து ஓடினன். அவளுக்கு எங்கிருந்து

பனிக்கட்டிகளின் மீது அவள் தாவித் தாவிச் சென்றுள்

தான் அவ்வளவு வலிமை வந்ததோ தெரியவில்லை; ஒரே ஓட்டமாக ஓடி அவள் ஆற்றில் துள்ளிக் குதித்தாள். பனிக் கட்டிகளின்மீது அவள் தாவித் தாவிச் சென்றுள். குழந்தை தன் கையிலேயே இருந்தால், அதை எதிரி பிடித்துக்கொண்டு போய்விடக்கூடாதே

என்று அவள் அதைப் பலமாகப் பிடித்துக்கொண்டாள். பனிக்கட்டிகள் ஆடி அசைந்து வெள்ளத்தோடு போய்க்கொண்டிருந்தன. ஓர் அடி தவறினால், அவள் நீருள் விழுந்திருப்பாள். அவள் உள்ளம் துடித்தது; உடலும் துடித்தது. கால்களிலிருந்த செருப்புகள் கழன்று விழுந்துவிட்டன. அவள் அணிந்திருந்த காலுறைகளும் கிழிந்திருந்தன. தாங்க முடியாத குளிர்ச்சியினால் பாதங்கள் மரத்துப்போயின. அவைகளிலிருந்து இரத்தமும் பெருகிக்கொண்டிருந்தது.

ஆற்றின் மறுகரையை அடையும் நேரத்தில், அவள் கால் தவறி நீரில் விழுந்துவிட்டாள். தண்ணீர் கழுத்தளவுக்கு இருந்தது. அவள் குழந்தையைத் தலைக்கு மேலே தூக்கிக்கொண்டாள். அப்பொழுது கரையில் நின்றுகொண்டிருந்த வயோதிகர் ஒருவர், அவளுடைய சட்டைத் துணியைப் பற்றி இழுத்து, அவளை மெதுவாகக் கரையிலே சேர்த்தார். 'நல்ல வேளை, கரை அருகிலே சறுக்கி விழுந்தாய்! இல்லாவிட்டால், நீ வெள்ளத்தோடு போயிருப்பாய்!' என்று அவர் கூறினார். எலிஸா, அவர் தன்னைப் பிடித்து, வியாபாரியிடம் ஒப்படைத்துவிடுவாரோ என்று அஞ்சினாள். 'என் குழந்தையைக் காப்பாற்றுங்கள்! எப்படியாவது அவனை மறைத்துவைத்துக் காப்பாற்றுங்கள்!' என்று அவள் கூவினாள்.

தாடியும் மீசையும் வளர்த்து, பெரிய ஞானியாக விளங்கிய அந்த உத்தமர், 'நீ மிகவும் தைரியசாலிதான்! இரவிலே இப்படித் துணிந்து வரலாமா?' என்று கேட்டார்.

எலிஸா, 'என் குழந்தையை விற்றுவிட்டார்கள்! அவனைக் காக்கவே ஓடி வந்தேன்! அவனை விலைக்கு

வாங்கியவன் அதோ எதிர்க்கரையிலே நிற்கிறான்!' என்று பதறிக்கொண்டே கூறினாள்.

'நீ ஷெல்பி வீட்டுப் பெண்ணல்லவா?' என்று அவர் கேட்டார். அவர் யார் என்பதையும் எலிஸா தெரிந்துகொண்டாள். அவர் பெயர் **சைம்ஸ்.** எலிஸா சிறுவயதில் தங்கியிருந்த வீட்டுக்கு அருகில் குடியிருந்தவர் அவர். அவர் அவளுக்கு ஆறுதல் சொல்லி, சிறிது தூரத்தில் வெள்ளை நிறமாய்க் காணப்பட்ட ஒரு வீட்டைச் சுட்டிக் காட்டினார். 'அங்கேயுள்ளவர்கள் நல்லவர்கள். உன்னைப் பாதுகாப்பார்கள்!' என்றும் அவர் சொல்லியனுப்பினார்.

எலிஸாவை நேரில் கண்டபின்பும், அவளைப் பிடிக்க முடியாமல் போய்விட்டதே என்ற ஏக்கத்துடன், அடிமை வியாபாரி ஹேலி பக்கத்திலிருந்த சத்திரத்தை நோக்கித் திரும்பிச் சென்றான்.

வீட்டுக்குத் திரும்பிச் சென்ற ஸாமும் ஆண்டியும் நடந்த விஷயங்களையெல்லாம் யசமானியம்மாளிடம் தெரிவித்தார்கள். அவள் மிகவும் வியப்படைந்து, 'ஆண்டவன் அவளைக் காப்பாற்றுவான்! இப்பொழுது இரவு பதினொரு மணியாகிறது. நீங்கள் மிகவும் களைத்திருப்பீர்கள். முதலில் நீங்கள் போய்ச் சாப்பிட்டு வாருங்கள்!' என்று சொன்னாள்.

நீகிரோவர் இருவரும், இன்பமாகச் சிரித்துக் கொண்டே, சமையலறைக்குச் சென்றார்கள்.

6. அடைக்கலம் அளித்த அன்பர்கள்

சைம்ஸ் காட்டிய வெண்மை நிறமான மாளிகையைச் சுற்றிப் பார்த்து, எலிஸா சமையலறைக்குள்ளே புகுந்தாள். அங்கே தினு என்ற நீகிரோ கிழவியும், கட்ஜோ என்ற வேலைக்காரனும், அவளுடைய பரிதாப நிலையைக் கண்டு, வருத்தத்துடன் அவளை உள்ளே அழைத்துச் சென்றனர். அவளுடைய உடைகள் கிழிந்திருந்தன. அவளுடைய பாதங்களிலிருந்து அப்பொழுதும் இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. கட்ஜோ அவள் கையிலிருந்த பையனைத் தான் வாங்கிக்கொண்டு, கீழே அமர்ந்து, அவன் பாதங்களைச் சூடு உண்டாகும்படி நன்றாகத் தேய்த்தான். எலிஸா நிற்க முடியாமல், அப்படியே இரண்டு நாற்காலிகளின்மீது சாய்ந்தாள். தினு அவளைத் தடவிக்கொடுத்து, அவளுக்கு ஆறுதல் சொல்லிக்கொண்டிருந்தாள். ஆனால் எலிஸா கண்களை மூடிக்கொண்டு இந்த உலக நினைவேயில்லாமலிருந்தாள். எலிஸா அழகுள்ளவள்; பார்வைக்கு அவள் பெரும்பாலும் வெள்ளைக்காரி போலவே இருப்பாள். ஆயினும் அவள் நீகிரோ வம்சத்தைச் சேர்ந்தவள் என்பது தெளிவாய்த் தெரிந்தது. அவளும் பையனும் தாங்கள் வேலை செய்துகொண்டிருந்த இடத்திலிருந்து தப்பி ஓடி வந்திருப்பார்கள் என்று கட்ஜோ எண்ணிக்கொண்டான்.

அந்தச் சமயத்தில் மாளிகையின் கூடத்திலே வீட்டுச் சொந்தக்காரர் திருவாளர் பர்ட் என்பவரும்

அவர் மனைவியும் பேசிக்கொண்டிருந்தனர். அவர் ஐக்கிய மாகாணச் சட்டசபையில் அங்கத்தினரா யிருந்தார். சமீபத்தில் சட்டசபையில் ஒரு சட்டம் இயற்றியிருந்தனர். கென்டக்கிப் பகுதியிலிருந்து ஓடி வரும் நீகிரோ அடிமைகளுக்கு எவரும் உண்ண உணவும், பருகுவதற்குக் கஞ்சியும் கொடுக்கக் கூடாது என்று அந்தச் சட்டம் விதித்திருப்பதாகப் பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருந்தது. அதைப் பற்றி பர்டிடம் அவர் மனைவி கேட்டுக்கொண்டிருந்தாள். அத்தகைய சட்டம் நியாயமா, தர்மமா என்று அவள் வினவினாள். 'இந்தச் சட்டமே அநீதியானது. பசி யோடு பரிதவித்து ஓடிவரும் ஓர் அடிமைக்கு உணவு, உடைகள்கூடக் கொடுக்கக்கூடாது என்பது நமது கிறிஸ்தவ மார்க்கத்திற்கே விரோதமானது!' என்று அவள் கூறினாள்.

அந்த நேரத்தில் கட்ஜோ கூடத்தினுள் தலையை நீட்டி, யசமானியை மெதுவாக அழைத்தான். இரு வரும் சமையலறைக்குள் சென்றனர்.

அங்கேயிருந்த காட்சியைக் கண்டதும் யசமானி யம்மாள், அங்கிருந்துகொண்டே தன் கணவரைக் கூவி அழைத்தாள். அவரும் ஓடிவந்து, நாற்காலி களின்மீது மயங்கிக் கிடந்த பெண்ணையும், வேலைக் காரன் தூக்கி வைத்திருந்த பையனையும் பார்த்தார். அந்தப் பெண் சற்றுக் குளிர் காயவேண்டுமென்று சொல்லிக்கொண்டு அங்கு வந்ததாகக் கட்ஜோ கூறினான்.

எலிஸா சற்றே கண்திறந்து, 'ஹாரி, ஹாரி! என் குழந்தை எங்கே? அவனைப் பிடித்துக்கொண்டு போய்விட்டார்களா?' என்று அலறினாள். ஹாரி,

உடனே கட்ஜோவின் கரங்களிலிருந்து கீழே குதித்து, தன் தாயின் பக்கம் ஓடிப்போய் நின்றான்.

திருமதி பார்ட், 'இங்கே யாரும் வரமாட்டார்கள், எவரையும் பிடிக்கமாட்டார்கள்! நீங்கள் நல்ல இடத்திற்குத்தான் வந்து சேர்ந்திருக்கிறீர்கள். கவலைப்படாதே!' என்று சொன்னாள்.

'ஆண்டவன் உங்களை ஆசீர்வதிப்பான்!' என்று சொல்லி, எலிஸா ஒரு கையால் தன் பையனை அணைத்துக்கொண்டு, அப்படியே கண்ணயர்ந்துவிட்டாள்.

சிறிது நேரத்திற்குப் பின் அவள் கண்களைத் திறந்தாள். அப்பொழுது யசமானியம்மாள் அவள் அருகில் அமர்ந்துகொண்டு அவளைப் பற்றிய வரலாற்றைக் கேட்டாள். எலிஸா தான் கெண்டக்கியிலிருந்து வந்ததாயும், யசமானர் தன் பையனை விற்றுவிட்டதாயும், அவர் மிகவும் நல்லவர் என்றும், ஏதோ அவசியம் ஏற்பட்டதால்தான் விற்க நேர்ந்தது என்றும் தெரிவித்தாள்.

'ஆற்றை நீ எப்படிக் கடந்துவந்தாய்?' என்று யசமானி கேட்டாள்.

'பனிக்கட்டிகளின்மீது ஏறித் தாவி வந்தேன். ஆபத்துக் காலத்தில் எங்கிருந்தோ துணிவு வந்துவிடுகின்றது! ஆண்டவரும் துணை செய்தார்!'

ஒரு தாய் தன் குழந்தைக்காக எவ்வளவு தியாகம் செய்கிறாள் என்பதை எண்ணித் திருமதி பார்ட் கண்ணீர் உகுத்தாள்.

ஒரு மாதத்திற்கு முன்புதான் அவளுடைய கடைசிப் பையன் இறந்துபோயிருந்தான். அந்தச் சோகம் அவள் உள்ளத்தில் நிறைந்திருந்ததால், எலிஸாவிடம் அவள் மிகுந்த அன்பு கொண்டாள். 'என் கணவரிடம்

கலந்து கொண்டு, உங்களுக்கு நல்ல ஏற்பாடு செய்கிறேன்! நீ எங்கே செல்ல விரும்புகிறாய்?' என்று அவள் கேட்டாள்.

'கானடாவுக்கு!'

'நீ நினைப்பதுபோல், கானடா அவ்வளவு அருகில் இல்லை!'

இந்தப் பேச்சுக்குப் பின்னால், கணவரும் மனைவியும் வீட்டுக் கூடத்தில் அமர்ந்து வெகுநேரம் ஆலோசனை செய்தனர். அடிமை வியாபாரி மறுநாளே தங்கள் வீட்டில் வந்து நிற்பான் என்றும், அன்றிரவே எலிஸாவையும் குழந்தையையும் பாதுகாப்பான இடத்தில் கொண்டுபோய் விடவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். அப்படி எந்த இடம் இருக்கிறது என்று மனைவி கேட்டாள். ஏழு மைல்களுக்கு அப்பால், ஒரு வனத்தில் **டுரோம்ப்** என்ற ஒரு நண்பர் இருப்பதாயும், அவர் அடிமைகளுக்கு ஆதரவானவர் என்றும் பர்ட் கூறினார்.

சட்டம் எப்படியிருந்த போதிலும் தன் கணவர் இரக்கத்தோடு நடந்துகொள்வதைக் கண்டு திருமதி பர்ட் மகிழ்ச்சி அடைந்தாள். உடனே அங்கிருந்து எழுந்து சென்று தன் அலமாரியைத் திறந்து, இறந்து போன தன் பையனின் சட்டைகள், கால் சட்டைகளை வெளியே எடுத்தாள். அப்போது அந்தத் துணிகளைப் பார்த்ததில், அவளால் தன் கண்ணீரை அடக்கிக் கொள்ள முடியவில்லை. அவள் ஒருவாறு மனத்தைத் தேற்றிக்கொண்டு, தன்னுடைய பழைய உடை ஒன்றையும் எடுத்துக் கொண்டு, சமையலறைக்குச் சென்றாள்.

தான் கொண்டுசென்ற உடைகளை அவள் எலி

ஸாவிடம் கொடுத்தாள். அவளும் குழந்தையும் அந்த உடைகளை அணிந்துகொண்டு, புறப்படத் தயாரா யிருக்கும்படி அவள் சொன்னாள்.

அன்றிரவு பர்ட் தானே வண்டியை ஓட்டிக் கொண்டு சென்றார். வண்டிக்காரன் கூடச் சென்றி ருந்த போதிலும், கரடுமுரடான பாதையில் தானே கவனித்து ஓட்டவேண்டும் என்று அவர் விரும்பினார். வண்டிக்குள்ளே எலிஸா ஹாரியைத் தன் மடியில் வைத்துத் தட்டிக்கொண்டிருந்தாள்.

அவர்கள் இரவில்நெடுநேரத்துக்குப்பின் டுரோம் பின் வீட்டை அடைந்தனர். அங்கே டுரோம்பிடம் எலிஸாவையும் குழந்தையையும் ஒப்படைத்துவிட்டு, பர்ட் உடனே திரும்பிவிட்டார். திரும்புமுன், அவர் களுடைய செலவுக்காக, அவர் டுரோம்பிடம் ஐம்பது டாலர் நோட்டுகளையும் கொடுத்துச் சென்றார்.

7. டாம் மாமாவின் பிரிவு

எலிஸா தப்பியோடிய மறுநாள் காலை, டாமை அழைத்துக்கொண்டு போவதற்காக ஹேலி ஷெல்பி யின் வீட்டுக்கு வந்திருந்தான்.

அன்று பொழுது விடிந்ததிலிருந்தே டாம்மாமா வின் குடிசையில் சோகம் குடிகொண்டிருந்தது. டாம் ஒரு நாற்காலியில் அமர்ந்து வேதப் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தான். அவன் அருகில் நின்று கொண்டிருந்த குளோ அத்தை, அவனுடைய சட்டை ஒன்றை மேசைமீது விரித்து, இஸ்திரி போட்டுக்

கொண்டிருந்தாள். அவளுடைய உள்ளம் குமுறிக் கொண்டிருந்தது. கண்களில் நீர் வற்ருமல் வடிந்து கொண்டிருந்தது. பிறந்தது முதல் டாம் அந்தக் குடிசையிலேயே வாழ்ந்து வந்தான். அன்று அவன் வெளியேற வேண்டியிருந்தது. அவன் தன் வாழக்கை யில் மீண்டும் அந்தக் குடிசைக்கு அநேகமாகத் திரும்பி வர மாட்டான். தெற்கு ராஜ்யங்களிலே விற்கப்படும் அடிமைகள் பருத்திக் காடுகளில் மிகவும் துன்புறுத் தப்படுவார்கள். வேலையும் அதிகம், உணவும் குறைவு. முதலாளிகள் அவர்களைக் கசக்கிப் பிழிந்து விடுவார்கள். இத்தகைய விஷயங்களைப் பற்றிக் குளோ எண்ணமிட்டுக் கொண்டிருந்தாள்.

அவள் அன்று டாமுக்கு மிகவும் பிரியமான உணவுகளை அளிக்க வேண்டுமென்று எண்ணிச் சமைத்திருந்தாள். குடிசையிலிருந்த சிறந்தகோழியை அடித்துக் கறி சமைத்திருந்தாள். அவளுடைய பையன்கள் இருவரும் அந்தக் கறியை அள்ளித் தின்று சிரித்து மகிழ்ந்து கொண்டிருந்தனர். 'அப்பா இன்று கடைசியாக இந்த ஒரு வேளைதான் இங்கே சாப்பிடப் போகிருர். இந்தப் பிறவியில் இனிமேல் அவரை நாம் காணமுடியாது. அதற்காகவா இப்படிச் சிரித்துக் கூத்தடிக்கிறீர்கள்?' என்று அவள் குழந் தைகளை அதட்டி அடித்தாள்.

டாம் அவளைத் தடுத்தான். 'நீ ஏன் இப்படிப் பேசுகிருய்? இங்குள்ள கடவுள்தான் அங்கும் இருக் கிருர். அவர் என்னைக் கைவிட மாட்டார்!' என்று அவன் கூறினன்.

'சில சமயங்களில் அந்தக் கடவுள் செய்யும் பயங்கரமான லீலைகளை நம்மால் தாங்க முடியவில்

லையே! யசமானர் உன்னை ஏன் விற்கவேண்டும்? இத்தனை ஆண்டுகளாக நீ அவருக்கு உழைத்தாயிற்று. இனி உனக்கு விடுதலை கொடுத்து அனுப்பவேண்டும். அதைவிட்டு, இப்படி விற்கலாமா?' என்றாள் குளோ.

'யசமானரைப் பற்றித் தவறாகப் பேசாதே! அவர் சிறு குழந்தையாயிருந்த பொழுது, அவரை நான் எடுத்து வளர்த்தேன். மனமாற நான் இதுவரை அவருக்குக் கெடுதல் செய்ததில்லை. அவரும் எனக்குக் கேடு நினைத்ததில்லை. ஏதோ காலம் சரியில்லை, என்னை விற்கும்படி நேர்ந்து விட்டது. இதில் எனக்குச் சந்தோஷம்தான்! ஏனென்றால், உங்களை விற்று விட்டு, என்னை இங்கே வைத்திருந்தால், இன்னும் மோசமாயிருக்கும். நீங்கள் நல்ல இடத்திலே இருக்கக் கிடைத்திருக்கிறது. இது நமது பாக்கியம்தான்!' என்றான் டாம் மாமா.

'டாம், இதுவே நமது கடைசிச் சந்திப்பு என்று தான் எனக்குத் தோன்றுகிறது. தெற்கே போனவர்களில் மீண்டவரை நான் கண்டதேயில்லையே!'

இவ்வாறு சொல்லிக்கொண்டே, குளோ மீண்டும் தேம்பித் தேம்பி அழுதாள். டாமின் கண்களிலும் நீர் ததும்பி நின்றது. அவர்களைப் பார்த்துப் பையன்களும் இரைந்து அழத் தொடங்கினர்.

டாமுக்கும் குழந்தைகளுக்கும் உணவு பரிமாறி விட்டு, குளோ அவனுடைய உடைகளை எடுத்து ஒரு பெட்டியிலே அடுக்கி வைத்தாள்.

சாப்பிட்ட பின்பு, டாம் கைக்குழந்தையை எடுத்துக் கொஞ்சிக் கொண்டிருந்தான். கள்ளம் கபடம் எதுவும் தெரியாத அக்குழந்தை, வழக்கம்போல், அவன் தலைமயிரைப் பிடித்து இழுத்து விளையாடிக்

கொண்டிருந்தது. மனிதர்களிலே அடிமைகளுக்கு மட்டும் தாய், தந்தை, மனைவி, மக்கள் ஒருவரும் கிடையாது. தளிர்த்து வளரும் மரங்களை வேரோடு பறித்து வேறிடத்தில் எறிவது போல, அடிமைகளை மட்டும் எறியலாம். புது இடங்களில் அவர்கள் மீண்டும் வேரூன்றி வளர்ந்தால் நல்லது, அல்லாமல் பட்டு நசித்துப் போனாலும், எவரும் கவலைப்படப் போவதில்லை. அடிமைகள் உயிருள்ள ஜந்துக்களே அல்லர், அவர்கள் வெறும் பொருள்கள் என்று இருந்தது அந்தக் காலத்தில். எவ்வளவோ பெருந்தன்மையும் இரக்கமும் கொண்ட ஷெல்பி பிரபுவே தன் தலைமையான வேலைக்காரனைக் கொடிய வியாபாரி ஒருவனுக்கு விற்க நேர்ந்தது என்றால், மற்ற முதலாளிகளைப்பற்றி என்ன சொல்ல முடியும்?

திருமதி ஷெல்பியும் டாம் மாமாவின் குடிசைக்குள்ளே வந்தாள். அவன் வெளியே போகுமுன், அவனைச் சந்தித்து ஒருவார்த்தை பேசவேண்டுமென்று அவள் துடித்துக் கொண்டிருந்தாள். அவனைக் கண்டதும், இருவருக்கும் அழுகை வந்துவிட்டது. கண்ணீரை வடியவிட்டுக்கொண்டு, தழுதழுத்த குரலில் அவள் பேசினாள். 'டாம் உன்னை விட்டுவிட மாட்டோம்! நீ போகிற இடங்களை யெல்லாம் விசாரித்துத் தெரிந்துகொள்வோம். விரைவிலே, கையில் பணம் சேர்ந்தவுடன், உன்னை மறுபடி விலைக்கு வாங்கிக் கொண்டுவந்து விடுவோம். நீ இதை நம்பு! உன்னைப் பிரிவது தாங்க முடியாத வேதனையாக இருக்கிறது. உனக்குக் கைநிறையப் பணம் கொடுத்தனுப்ப வேண்டுமென்று கொண்டுவந்திருக்கிறேன். ஆனால் பணம் முழுவதையும் வியாபாரி பிடுங்கிக்

பிரிந்து செல்லும்பொழுது, தான் அதைத் தாங்க முடியாதென்று எண்ணி, அவர் அன்று அதிகாலையி லேயே குதிரைமீது ஏறி, வெளியே எங்கோ போய் விட்டார். டாமுக்கு ஒரே ஒரு வருத்தம்தான் இருந் தது. யசனமானருடைய மகன் ஜியார்ஜ் ஊரிலில்லை. 'அவனிடம் விடை பெருமல் போகவேண்டி யிருக் கிறதே !' என்று அவன் குளோவிடம் சொன்னுன்.

டாம் வண்டியில் ஏறி அமர்ந்துகொண்டான். உடனே ஹேலி நீண்ட சங்கிலி விலங்கை எடுத்து அவன் கால்களில் மாட்டுவதற்காகச் சென்ருன். அப் பொழுது திருமதி ஷெல்பி, மனம் கலங்கி, உரக்கக் கூறிஞள் : 'டாமுக்கா விலங்கு? வேண்டவே வேண் டாம்! அவன் சத்தியத்திற்குக் கட்டுப்பட்டவன்! ஓட மாட்டான் !'

ஹேலி சிரித்துக்கொண்டே, 'இனி நான் ஏமாற மாட்டேன்! இதே இடத்தில் ஒரு பெண்ணிஞல் எனக்கு ஐந்நூறு டாலர் நஷ்டமாகிவிட்டது!' என்று கூறிவிட்டு, டாமின் கால்களில் விலங்கை மாட்டிவிட் டான். பின்னர் அவன் வண்டியின் முன்பக்கம் ஏறி அமர்ந்துகொண்டு குதிரையைத் தட்டிவிட்டான். டாம், வண்டியினுள்ளே இருந்துகொண்டு, தன் குடும் பத்தாரைக் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டே சென்ருன். சிறிது நேரத்தில் ஷெல்பி பிரபுவின் பண்ணை கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து விட்டது.

வழியில் டாமும் ஹேலியும் மௌனமாகவேயிருந் தனர். ஒரு மைல் தூரம் சென்றபின், ஓர் இரும்புப் பட்டறை முன்பு ஹேலி வண்டியை நிறுத்திக் கீழே இறங்கிஞன். அந்தக் கடைக்குள்ளேயிருந்த கருமா

டாம் மாமாவை வண்டியில் ஏற்றி அழைத்துச்
சென்ருன் ஹேலி

னைக்கண்டு, அவனிடம் ஒரு விலங்கைக் கொடுத்து, அதை அகலமாக்கிக் கொடுக்கும்படி அவன் சொன்ஞன்.

ஹேலி கடைக்குள் இருந்த சமயத்தில், குதிரை மீதூர் இளைஞன் அங்கே வந்து நின்ருன். அவன் உடனே கீழே குதித்து, வண்டியிலேறி, டாம் மாமாவைக் கட்டிக்கொண்டு, கதறி அழத்தொடங்கிஞன். அவன்தான் ஷெல்பியின் மகன் ஜியார்ஜ்! டாமின் பிரிவைப்பற்றி அவனுக்கு முன்ஞல் தெரியாது. வெளியூரிலிருந்து வீட்டுக்கு வந்தவுடன், டாம் வண்டியிலே

சென்றுவிட்டான் என்று கேள்விப்பட்டு, அவனைத் தொடர்ந்துவந்து, அவன் கண்டுபிடித்துவிட்டான்!

'ஜியார்ஜ் யசமான்! உங்களைப் பார்க்காமல் வந்ததுதான் எனக்கு வருத்தம். இப்பொழுது அதுவும் தீர்ந்துவிட்டது!' என்று கூறி, டாமும் அவனை ஆவலுடன் கட்டிக்கொண்டான்.

ஜியார்ஜ், 'டாம் மாமா, உனக்காக ஒரு வெள்ளி டாலர் கொண்டு வந்திருக்கிறேன்!' என்ருன்.

'அதையெல்லாம் நான் வைத்துக்கொள்ள என்னை விடமாட்டார்கள்; வேண்டாம் யசமான்!'

'இந்த டாலரில் துமர் போட்டு ஒரு நூலும் கோத்திருக்கிறேன். இது உன் கழுத்தில் எப்பொழுதும் இருக்கட்டும். இதற்கு மேலே உன் சட்டையைமறைத்துப் போட்டுக்கொள். டாலரைப் பார்க்கும்போதெல்லாம் நீ என்னை நினைத்துக்கொள்ள வேண்டும்!'

ஜியார்ஜ் தன் கையாலேயே டாலரை அவன் கழுத்தில் கட்டினுன். 'மாமா! நான் சிறு பையன். எனக்கு வயதாகி, நான் பெரிய மனிதனுயிருந்தால், இப்படி உன்னை விற்கும்படி நேர்ந்திருக்காது. இது மகா கேவலம்! ஆயினும் வெகு சீக்கிரத்திலே பணம் சேர்த்துக்கொண்டு உன்னை மீட்க வருகிறேன். உன்னை நான் மீண்டும் வாங்கி வருவது நிச்சயம்!—இது சத்தியம்!' என்றும் அவன் கூறினுன்.

டாம் இறுதியாக அவனுக்குச் சொல்லவேண்டிய சில புத்திமதிகளைச் சொன்னுன். 'எது கிடைத்தாலும், தாய் மட்டும் கிடைக்கமாட்டாள், ஜியார்ஜ்! நீ தாய் சொல் தவருமல் நடக்கவேண்டும். என் அருமை ஜியார்ஜ் உயர்ந்த கனவானுயிருக்கிருன் என்று நான் கேள்விப்பட வேண்டும்!'

'அப்படியே நடப்பேன், மாமா!' என்று உறுதி சொல்லி விடைபெற்றுக்கொண்டு, ஜியார்ஜ் மீண்டும் தன் குதிரைமீது ஏறிக்கொண்டான். அப்பொழுது கடைக்குள்ளேயிருந்த ஹேலியைக் குத்தித் தள்ள வேண்டுமென்று அவன் எண்ணிக்கொண்டே திரும்பிச் சென்றான். 'கடவுள் உன்னை ஆசீர்வதிப்பார்!' என்று டாம் அவனை வாழ்த்தினான். குதிரை மறையும் வரை அவன் அந்தத் திசையையே பார்த்துக்கொண்டிருந்தான்.

ஹேலி மீண்டும் வண்டிக்கு வந்து குதிரையை ஓட்டத் தொடங்கினான். இடையிடையே, அவன் தன் சட்டைப்பையில் வைத்திருந்த பத்திரிகையிலிருந்த விளம்பரங்களைப் பார்த்துவந்தான். அடிமைச் சந்தைகளில் எங்கெங்கு மேற்கொண்டு சில அடிமைகளை விலைக்கு வாங்கலாம் என்பதற்காகவே அவன் பத்திரிகையைப் புரட்டிக்கொண்டிருந்தான்.

'ஐயா, என்னை எங்கே அழைத்துச் செல்லப் போகிறீர்கள்?' என்று டாம் கேட்டான்.

'மேலும் சில நீகிரோக்கள் விலைக்கு வந்திருப்பதாய்த் தெரிகிறது. வாஷிங்டன் முதலான சில இடங்களில் பெருவாரியாக அடிமைகளை வாங்கலாம். உன்னோடு அவர்களையும் சேர்த்து தெற்கே நியூ ஆர்லியன்ஸில் கொண்டுபோய் விற்க வேண்டுமென்று எண்ணியிருக்கிறேன். இன்னும் சில நாட்களில் நாம் கப்பலேறி மிஸிஸிப்பி ஆற்றின் வழியாகச் செல்லவேண்டும்' என்று ஹேலி தெரிவித்தான்.

8. விடுதலை பெற்ற வீரன்

டிரோம்பின் உதவியால் எலிஸாவுக்கு ஒரு நல்ல வீடு கிடைத்தது. அந்த வீட்டில் சுமார் ஐம்பது, அறுபது வயதுடைய **ராக்கேல்** என்ற ஒரு கிழவி இருந்தாள். அவள் எலிஸாவுக்கு வேண்டிய உதவிகளை அன்புடன் செய்துவந்தாள். சிமியோன் என்பவர் அவளுடைய கணவர். தப்பி யோடிவரும் நீகிரோ மக்களை ஆதரித்து, அவர்களை ஊரூராக அழைத்துச் சென்று, கடைசியாகக் கானடாவில் கொண்டு போய்ச் சேர்ப்பது அவர் வழக்கம். அவரும் அவருடைய குடும்பத்தாரும் கிறிஸ்தவர்களில் 'குவேக்கர்' வகுப்பைச் சேர்ந்தவர்கள். குவேக்கர்கள் ஜீவகாருண்யமுள்ளவர்கள். கொலை, பலாத்காரம் முதலியவற்றை அவர்கள் வெறுத்து வந்தார்கள். எந்தக் காரணத்தினாலும் அவர்கள் யுத்தத்தில் சேரமாட்டார்கள்.

எலிஸா ஒரு நாற்காலியில் அமர்ந்து தையல் வேலை செய்துகொண்டிருந்தாள். அவள் அருகில் இருந்த ராக்கேல் அம்மாள், 'நீ கானடாவுக்குத்தான் போகப் போகிறாயா?' என்று கேட்டாள்.

'ஆமாம்; அங்கே சென்றால்தான் எங்களுக்குப் பாதுகாப்புக் கிடைக்கும்.'

'அங்கே நீ என்ன தொழில் செய்யப்போகிறாய்?'

'எது கிடைத்தாலும் செய்ய வேண்டியதுதான். அந்தப் பெரிய நாட்டிலே எனக்கு ஒரு வேலை கிடைக்காமலா போகும்?'

அந்த நேரத்தில் சிமியோன் உள்ளே வந்தார். அவர் நெடிய உருவமுள்ளவர். அவருடைய நீண்ட தாடியும் ஒளி மிகுந்த முகமும் சூதுவாதற்ற அவருடைய உள்ளத்தை எடுத்துக் காட்டின. அவர் நீண்ட அங்கியும் அகன்ற தொப்பியும் அணிந்திருந்தார்.

அவரைக் கண்டதும் ராக்கேல், 'என்ன செய்தி?' என்று கேட்டாள்.

'செய்தியெல்லாம் நல்ல செய்திதான்!' என்று சொல்லிவிட்டு, அவர் எலிஸாவைப் பார்த்து, 'உன் கணவனின் பெயர் ஹாரிஸ் என்றுதானே சொல்லியிருந்தாய்?' என்று கேட்டார்.

எலிஸாவுக்கு அச்சமுண்டாகி விட்டது. அவள் நடுங்கிக்கொண்டே, 'ஆம்' என்றுள். சிமியோன், 'சரிதான்! உனக்கு ஒரு நல்ல செய்தியைக் கொண்டு வந்திருக்கிறேன்! உன் கணவன் தப்பியோடி வந்து விட்டான். இங்கே பக்கத்து ஊர் ஒன்றில் அவன் இருக்கிருன். இன்றிரவு என் நண்பர்கள் அவனை இங்கே அழைத்து வருவார்கள்!' என்ருர்.

அந்த நல்ல செய்தியைக் கேட்டவுடனேயே எலிஸா அளவில்லாத மகிழ்ச்சி யடைந்தாள். திடீரென்று அவளுக்கு மயக்கமுண்டாயிற்று. ராக்கேலும் அவள் கணவரும், அவளை மெதுவாகத் தூக்கி ஒரு கட்டிலில் படுக்க வைத்தனர். பல நாட்களாக உறக்கம் இல்லாதிருந்த எலிஸா நெடிய உறக்கத்தில் ஆழ்ந்திருந்தாள். தூங்கும்பொழுதும், அவள் கான

டாவைப் பற்றியே இன்பக் கனவுகள் கண்டு கொண்டிருந்தாள்.

குறித்தபடி அன்றிரவு ஹாரிஸ் அங்கே வந்து சேர்ந்தான். அவன் உள்ளே வந்ததும், பையன் ஹாரியைத் தூக்கி வைத்துக்கொண்டு, கட்டிலருகில் சென்று, எலிஸாவைத் தட்டி எழுப்பினன். ஒவ்வொரு கணமும் அவள் அவனுடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்ததால், அவள் உடனே எழுந்து திரும்பிப் பார்த்தாள். எதிரே அவளுடைய கணவன் நின்று கொண்டிருந்தான்! அவளுடைய கனவு எப்படியோ நனவாகிவிட்டது!

சிறிது நேரத்திற்குப் பின் சிமியோன் அங்கு வந்து அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். அவருடைய பேச்சிலிருந்து அடிமைகளுக்கு அடைக்கலம் அளிப்பதால் அவருக்கு எத்தனையோ துயரங்கள் ஏற்படுமென்று தெரிந்தது.

'எங்களால் நீங்கள் அபராதம் கட்டவேண்டியிருக்குமோ?' என்று கேட்டான் ஹாரிஸ்.

'ஆம், அபராதம் விதித்தால், கட்டிவிடுவேன். சிறைத் தண்டனே விதித்தால், சிறைக்கும் போகத் தயாராயிருக்கிறேன். இல்லாவிட்டால், ஏழைகளுக்கு எப்படி உதவி செய்ய முடியும்? ஒரு பாவமும் அறியாத நாங்கள் கஷ்டப்பட்டால்தான், அடிமைகளாகிய உங்களுக்கு நன்மை உண்டாகும்!' என்று அவர் கூறினர்.

'எங்களிடம் இரக்கம் கொண்டு நீங்கள் இவ்வளவு தியாகம் செய்கிறீர்களே!' என்று ஹாரிஸ் வியந்து பேசினன்.

'கடவுளுக்காகவும் மனிதனுக்காகவும் உழைக்

காலை நாங்கள் பிறந்திருக்கிறோம். கடமையைச் செய்வதில் கஷ்டங்கள் வந்தால், தாங்கிக்கொள்ள வேண்டும்.'

'எப்படியும் நாங்கள் இந்த இடத்தைவிட்டு விரைவில் வெளியேறினால்தான் நல்லது!' என்றான் ஹாரிஸ்.

'இன்றும் நாளைப் பகலிலும் நீங்கள் இங்கேதான் இருக்கவேண்டும். நாளை இரவில் நண்பர்கள் வந்து உங்களை அழைத்துப் போவார்கள். கானடாவிலும் எங்களுக்கு வேண்டியவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் உங்களுக்கு உதவி செய்வார்கள்' என்று கிழவர் ஆறுதல் சொன்னார்.

மறுநாள் காலை ஹாரிஸுக்கும் அவன் குடும்பத்தாருக்கும் விருந்து அளிக்கப்பட்டது. எலிஸாவும் ஹாரியும் உற்சாகமா யிருந்தனர். எலிஸா ஆண்டவனுடைய கருணையை எண்ணிப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாள்.

அவர்கள் இருந்த இடத்தை எப்படியோ எதிரிகள் தெரிந்துகொண்டு விட்டார்கள் என்றும், இரவிலே அவர்கள் புறப்பட்டுவிட வேண்டுமென்றும் சிமியோன் தெரிவித்தார்.

இரவில் இரண்டு குதிரைகள் பூட்டிய பெரிய வண்டியொன்று வந்து சேர்ந்தது. அதிலிருந்து பிளெச்சர் என்பவன் இறங்கி வந்து, சிமியோனைக் கண்டு பேசினான். ஹேலியின் ஆட்களைத்தான் கிராமத்திலே சந்தித்ததாகவும், அவர்கள் இரவில் தங்களைத் தொடர்ந்து பிடிக்கவருவார்கள் என்றும் அவன் தெரிவித்தான். ஆகவே முன்கூட்டியே புறப்பட வேண்டுமென்று சிமியோன் ஏற்பாடு செய்தார்.

எலிஸாவுக்கு என்ன செய்வதென்று விளங்கவில்லை. தாங்கள் கானடாவுக்குச் செல்லுமுன்னல் அபாயம் வந்துவிட்டதே என்று அவள் வருந்தினுள்.

அவளும் ஹாரியும் நண்பர்களிடம் விடைபெற்றுக்கொண்டு முதலில் வண்டியிலேறினுர்கள். பிளெச்சர் கோச்சுப் பெட்டியில் ஏறி அமர்ந்துகொண்டான். ஹாரிஸ், தனது துப்பாக்கியை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு, வண்டியின் பின்புறம் ஏறி நின்றுகொண்டான்.

'நண்பர்களே, சேமமாகப் போய்வாருங்கள்!' என்றுகூறி சிமியோன் வழியனுப்பினுர். வண்டி புறப்பட்டு வேகமாகச் சென்றது.

வழியில் ஹாரிஸ் பின்புறம் கவனித்துக்கொண்டேயிருந்தான். வெகுநேரம் வரை எவரும் தொடர்ந்து வரவில்லை. வண்டியினுள் ஹாரி நன்ருகத் தூங்கிவிட்டான். எலிஸாவும் சாய்ந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தாள்.

காலை மூன்று மணிக்கு, பிளெச்சருக்கு வேண்டிய ஒரு நண்பன் குதிரைமீது வேகமாக வந்துகொண்டிருந்தான். அவன் வண்டியருகே சென்று, ஏழு, அல்லது எட்டு எதிரிகளுக்குமேல் குதிரைகளில் வருவதாயும், வண்டியை வேகமாக ஓட்டும்படியும் கூறிச் சென்ருன். பிளெச்சர் சவுக்கால் குதிரைகளை மாறி மாறி அடித்து விரட்டினுன். அவைகளும் அளவு கடந்த வேகத்தில் ஓடிக்கொண்டிருந்தன.

எலிஸாவை எப்படியாவது பிடித்துவிட வேண்டுமென்று ஹேலி ஓர் ஏற்பாடு செய்திருந்தான். ஓடிச் செல்லும் நீகிரோக்களைப் பிடிப்பதற்கென்றே ஒரு கூட்டம் இருந்தது. ஹேலி அக்கூட்டத்தின் தலைவனுன

முரடன் ஒருவனைக் கண்டு பேசினான். அத்தலைவன் ஈவு இரக்கமற்றவன். அவன் எலிஸாவை உயிரோடு பிடித்துவருவதாயும், முடியாவிட்டால் அவள் உடலையாவது கொண்டுவருவதாயும் சபதம் செய்தான். ஹேலி அவளையும் குழந்தையையும் உயிரோடுதான் பிடித்துவர வேண்டுமென்றும், குழந்தையைத் தன்னிடம் கொடுத்துவிட்டு, அவளைத் தலைவன் வேறு யாருக்காவது விற்றுவிடலாம் என்றும் கூறினான். அந்த ஏற்பாட்டின்படியே தலைவன் வேறு சில முரடர்களையும் கூட்டிக்கொண்டு எலிஸாவைப் பிடிப்பதற்காக வந்துகொண்டிருந்தான். இடையில் ஹாரிஸும் ஓடிவந்துவிட்டதால், அவனையும் பிடிக்க வேண்டுமென்று அவர்கள் வந்துகொண்டிருந்தார்கள்.

பிளெச்சருடைய வண்டி நெடுந்தூரம் செல்வதற்கு முன்பே, பின்னால் குதிரைகளின் காலோசை கேட்டது. மலைப்பாங்கான ஒரு பிரதேசத்தில், வண்டியை ஒரு பாறையின் மறைவில் நிறுத்திவிட்டு, பிளெச்சர் கீழே குதித்தான். வண்டியிலிருந்த மூவரையும் கீழே இறக்கினான். ஹாரியைத் தானே கையில் எடுத்துக்கொண்டு, அவன் பாறைமேல் ஏறிச் சென்றான். பாறைகளில் ஏறுவது அவனுக்கு வழக்கமாயிருந்தது. ஆனால் ஹாரிஸும் எலிஸாவும் மிகவும் கஷ்டப்பட்டு ஏறினார்கள். ஒரே ஓர் ஆள்மட்டும் நுழையக்கூடிய ஒரு சந்தின் வழியாக, பிளெச்சர் அவர்களை அழைத்துச் சென்றான். அங்கே ஒரு பெரிய பாறைக்குப்பின்னால், அவன் நின்றுகொண்டான். 'இந்த இடத்திற்கு எதிரி எவனும் உயிரோடு வர இயலாது!' என்று அவன் உறுதியுடன் கூறினான்.

ஹாரிஸ் பாறையின் உச்சியில் ஏறி நின்று,

கையிலே துப்பாக்கியை வைத்துக்கொண்டு, கீழே உற்றுப் பார்த்தான். எதிரிகள் வந்துவிட்டனர். அவர்கள் குதிரைகளை விட்டிறங்கி, பாறையை நோக்கி நடந்து வந்துகொண்டிருந்தனர்.

அப்பொழுது ஹாரிஸ் அவர்களைப் பார்த்து, 'நீங்கள் யார்? எதற்காக வந்திருக்கிறீர்கள்?' என்று கேட்டான்.

'இரண்டு நீக்ரோவர்களையும், ஒரு குழந்தையையும் பிடிப்பதற்காக நாங்கள் வந்திருக்கிறோம். நீதானே ஹாரிஸ் என்பவன்? ஒய்யாரமாக உயரே நிற்கிறாயோ?' என்று பதில் கூறினான் **டாம் லோக்கர்** என்பவன்.

'ஆமடா, நான்தான் ஹாரிஸ்! என்னை நீங்கள் என்ன செய்யமுடியும்? இப்பொழுது நான் சுதந்தர மனிதன். உங்களில் எவனாவது மேலே ஏறிவந்தால், சுட்டுத் தள்ளிவிடுவேன்!' என்று ஆவேசத்துடன் பேசினான் ஹாரிஸ்.

லோக்கர் அவனை நோக்கி ஒருமுறை சுட்டான். ஆனால் குறி தவறிவிட்டது. உடனே ஹாரிஸும் திருப்பிச் சுட்டான். லோக்கரின் உடலில் குண்டு பாய்ந்து உதிரம் ஒழுகிக்கொண்டிருந்தது. அத்துடனே அவன் பாறையின்மீது ஏறி வந்தான். ஹாரிஸ் அவனை ஒரு காலால் எற்றித் தள்ளினான். லோக்கர் அலறிக்கொண்டு, கற்களின்மீது உருண்டு, தரையிலே வந்து வீழ்ந்தான். இதைக் கண்ட மற்ற எதிரிகள், மேற்கொண்டு அங்கு நிற்பது அபாயம் என்று கருதி, தங்கள் குதிரைகளில் ஏறிக்கொண்டு பறந்து போய்விட்டனர். அவர்களில் ஒருவன்கூடத் தரையிலே வீழ்ந்து கிடந்த தங்கள் நண்பன் லோக்கரைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை!

பாதிரிகள் மறைந்த பின்பு, பிளேச்சரும் நண்பர் அவரும் வண்டியை நோக்கிச் சென்றனர். வழியில் காயப்பட்டுத் துடித்துக்கொண்டிருந்த லோக்கரை ஹாரிஸ் திரும்பிப் பார்த்தான். 'ஐயோ, பாவம்! இவனையும் நாம் தூக்கிக்கொண்டு போவோம்!' என்று அவன் கூறினான். அவனும் பிளெச்சரும் லோக்கரைத் தூக்கி வண்டியில் வைத்துக்கொண்டார்கள். வண்டி மீண்டும் ஓடத்தொடங்கியது.

மறுநாள் முற்பகல் அவர்கள் அடுத்த நகரை அடைந்தனர். அங்கே நண்பர்கள் அவர்களை வரவேற்று உபசரித்தனர். அந்த நண்பர்கள் லோக்கருடைய காயத்துக்கும் மருந்து வைத்துக் கட்டி, சிகிச்சை செய்தார்கள்.

9. எவாஞ்சலின்

மிஸிஸிப்பி நதியின்மீது ஒரு கப்பல். அது நியூ ஆர்லியன்ஸ் நகரை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. அந்தக் கப்பலில் வெள்ளைக்காரர் பலர் யாத்திரை செய்துகொண்டிருந்தனர். அதன் அடித்தளத்தில் பஞ்சுப்பொதிகள் வைக்கப்பட்டிருந்தன. அவைகளின் பக்கத்தில், ஆண்களும் பெண்களுமாக, பல நீகிரோ அடிமைகள் அமர்ந்திருந்தனர். ஒரு பொதியின் மேலே டாம் மாமா அமர்ந்திருந்தான். அவன் கைகளில் வேதப் புத்தகம் இருந்தது. அவன் அதைப் பார்த்து ஒவ்வொரு வார்த்தையாகக் கூட்டிப் படித்துக்கொண்டிருந்தான். அவனுடைய நற்குணத்தை

அறிந்த ஹேலி அவனுடைய விலங்கைக் கழற்றிவிட்டான். டாம் கப்பலில் எங்கு வேண்டுமானாலும் சுற்றி வர அனுமதிக்கப்பட்டிருந்தான்.

இடையிடையே, அவன் தன்னைப்போல் வீடுவாசலில்லாமல், உறவினரையெல்லாம் பிரிந்து, அங்கே கூடியிருந்த அடிமைகளைப் பற்றி எண்ணமிட்டான். எல்லோரும் நியூ ஆர்லியன்ஸ் நகரத்துச் சந்தைகளிலே விற்கப்பட வேண்டியவர்கள். மனிதரை மனிதரே இப்படிக் கொடுமைப்படுத்துதல் எப்பொழுது ஒழியுமென்று அவன் சிந்தனை செய்தான். வேதப் புத்தகத்தில், 'உன் இதயம் துயரப்பட வேண்டாம் என்னுடைய தந்தையின் வீட்டில் ஏராளமான அறைகள் இருக்கின்றன. அங்கே உனக்கும் ஓர் இடம் பார்த்து வைத்திருக்கிறேன்' என்ற வாக்கியத்தைப் பார்த்ததும் அவன் சிறிது ஆறுதலடைந்தான்.

கப்பலின் மேல்தளத்தில், நேர்த்தியான அறை ஒன்றில், ஆறு வயதுச் சிறுமி ஒருத்தியும் அவள் தந்தையும், வயது முதிர்ந்த பெண் ஒருத்தியும் இருந்தனர். அவர்களும் நியூ ஆர்லியன்ஸுக்குத்தான் போகிறவர்கள். அந்தச் சிறுமி மிகுந்த அழகுடன் விளங்கினாள். தங்க நிறமுள்ள அவள் கூந்தலும், நீலக்கண்களும் பார்ப்பவர்களைப் பரவசப்படுத்துபவை. அவள் ஓர் இடத்தில் தங்காமல் அங்குமிங்கும் ஓடிக்கொண்டேயிருந்தாள். ஒரு சமயம் கறுப்பு நிறமாயிருந்த கூட்டத்தாரைக் காட்டி, 'அப்பா, இவர்கள் யார்?' என்று அவள் கேட்டாள். அவர்கள் அடிமைகள் என்று தந்தை கூறியதும், அவள். 'அவர்களுக்காக இரக்கப்படுகிறேன்!' என்றாள். 'நானும் இரக்கப்படவே செய்கிறேன்! நம்முடைய தென் ராஜ்யங்

களிலே இன்னும் அடிமை முறை போகவில்லையே!' என்று கூறினார் தந்தை.

அவர் நல்ல இதயம் படைத்தவர்; மிகுந்த செல்வமுள்ளவர்; பார்வைக்கு அழகாகவும் இருந்தார். அவர் பெயர் **அகஸ்டின்.** அவருக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த ஸ்திரீ அவருடைய மாமன் மகள் **ஒபீலியா.** ஊரிலே அவருடைய மனைவிக்கு உடல் நலமில்லாததால், அவர் இவளை உதவிக்காக அழைத்துச் சென்றார். அவர் மனைவி பெரும்பாலும் சோம்பேறியாகவே காலங் கழித்துவந்தாள். ஆனால் உயர்ந்த ஆடைகளும் அணிகளும் அணிந்துகொள்வதில் அவளுக்கு ஆர்வம் அதிகம். குணத்திலும் அவள் சிறந்தவளில்லை. அவர்களுடைய மாளிகையிலிருந்த பல அடிமைகளையும் அவள் கொடுமையாகவே நடத்தி வந்தாள். தான் பெற்ற ஒரே பெண் குழந்தையிடமும் அவளுக்குப் பொறுமை இருந்துவந்தது. ஆகவே முக்கியமாகத் தன் குழந்தையைக் கவனித்துக்கொள்ளவே அகஸ்டின் ஒபீலியாவை அழைத்து வந்திருந்தார்.

சில சமயங்களில் அகஸ்டினின் குமாரி **எவாஞ்சலின்** டாம் இருந்த இடத்திற்குச் சென்று விளையாடுவாள். ஒரு சமயம் அவளுடைய பந்தைக் காணவில்லை. டாம் அதைத் தேடி எடுத்துக் கொடுத்தான். பல தடவைகளில் அவள், மிட்டாய்களும் ஆரஞ்சுப் பழங்களும் கொண்டுவந்து, நீகிரோவர்களுக்குக் கொடுப்பாள். எல்லோருக்கும் அவளிடத்தில் தனிப்பட்ட ஒரு பிரியம் இருந்து வந்தது.

அவள் தன் அருகில் வந்த சமயம் டாம், 'அம்மா, உன் பெயர் என்ன?' என்று கேட்டான். 'என் பெயர்

எவாஞ்சலின். ஆனால், வீட்டிலே என்னை எல்லோரும் ஈவா என்றுதான் கூப்பிடுவார்கள்!' என்று சொல்லி விட்டு அவள், 'உன் பெயர் என்ன?' என்று கேட் டாள்.

'என் பெயர் டாம். குழந்தைகள் என்னை 'டாம் மாமா' என்று கூப்பிடுவார்கள்.'

'நீ எங்கே போகிறாய்?'

'அது எங்களுக்கு எப்படித் தெரியும்? எங்களை எங்கேயாவது கொண்டுபோய் விற்பார்கள்!'

இதைக் கேட்டவுடன் ஈவாவின் கண்களில் நீர் தளும்பியது.

அதுமுதல் டாமிடம் அவள் மிகுந்த அன்பு காட்டி வந்தாள். தன் தந்தையிடமும் அவனைப் பற்றிச் சொன்னாள்.

ஒரு சமயம் கப்பல் ஒரு துறைமுகத்தில் சிறிது நேரம் நின்றுகொண்டிருந்தது. அடிமைகள் அதில் விறகுக் கட்டைகளை ஏற்றிக் கொண்டிருந்தன. டாமும் அவர்களுடன் சென்று உதவி செய்தான். சிறிது நேரத்திற்குப்பின், கப்பல் புறப்பட்டது. அப் பொழுது மேல் தளத்திலிருந்து வெளியே பார்த்துக் கொண்டிருந்த ஈவா, கால் தவறி, ஆற்றினுள் விழுந்து விட்டாள். அவள் அருகில் நின்ற அவளுடைய தந்தை, 'ஐயோ, குழந்தை!' என்று கூவினார். அந்தச் சமயம் அடித்தளத்தில் நின்றுகொண்டிருந்த டாம் மேலேயிருந்து ஈவா விழுந்ததைக் கவனித்துவிட் டான். உடனே மற்றவர்கள் திரும்பிப் பார்க்கு முன்பே, அவன் தண்ணீரில் பாய்ந்து ஒரு கையால் சிறுமியைத் தூக்கிக்கொண்டு, மீண்டும் கப்பலுக்கு நீந்தி வந்தான். அகஸ்டின், குழந்தையை வாங்கிக்

கையில் ஏந்திக்கொண்டு, தன்னுடைய அறைக்குச் சென்றார்.

மறுநாள் கப்பல் நியூ ஆர்லியன்ஸை நெருங்கிக் கொண்டிருந்தது. அகஸ்டின் திடீரென்று அடிமை வியாபாரியைக் கண்டு, டாமுக்கு என்ன விலை வேண்



ஆற்றில் விழுந்த ஈவாவை டாம் காப்பாற்றினன்...

டும் என்று கேட்டார். அவன் 1,400 டாலர் வேண்டு மென்றும், அதற்குக் குறைந்தால் கொடுக்கமுடியாது என்றும் சொன்னான். குழந்தை ஈவா என்ன விலை யாவது கொடுத்து டாமை வாங்கிவிடவேண்டுமென்று தன் தந்தையிடம் சொல்லியிருந்தாள். அவருடைய பண்ணையில் எத்தனையோ அடிமைகளிருந்த போதி லும், ஈவாவுக்காக டாமையும் வாங்க வேண்டுமென்று அவர் தீர்மானித்திருந்தார். மேலும் முந்திய நாள்தான் டாம் அக்குழந்தையின் உயிரைக் காப்பாற்றியதையும் அவர் நினைத்துக்கொண்டே யிருந்தார்.

ஹேலி விலை குறையாது என்று சொன்னதும், அகஸ்டின் 1,400 டாலர்கள் இருந்த ஒரு நோட்டுக் கட்டை அவனிடம் நீட்டினார். அவன் அதைச் சரி பார்த்துக்கொண்டு ஷெல்பி பிரபு எழுதிக் கொடுத் திருந்த டாமின் விற்பனைப் பத்திரத்தை அவரிடம் எடுத்துக் கொடுத்தான். 'நல்ல விலைதான் கிடைத் துள்ளது!' என்று அவன் மகிழ்ச்சியடைந்தான்.

உடனே அகஸ்டின் மகளை அழைத்துக்கொண்டு டாமிடம் சென்றார். 'டாம், நான்தான் உன்னுடைய புதிய யசமான்!' என்று சொன்னார்.

'கடவுள் உங்களை ஆசீர்வதிப்பார்' என்று டாம் கூறினான். அப்பொழுது அவனுடைய கண்களி லிருந்து கண்ணீர்த் துளிகள் உதிர்ந்தன.

அகஸ்டினின் முகத்தை அவன் பார்த்ததில், அவர் நல்லவராகவே இருப்பாரென்று அவன் கருதி னான். அவனுக்கு வண்டி ஓட்டத் தெரியுமா என்று அவர் விசாரித்தார்.

'ஓ, நன்றாகத் தெரியும். அது எனக்கு வெகுநாள் பழக்கமானது!' என்று அவன் சொன்னான்.

அப்பொழுது ஈவா, 'என் அப்பா மிகவும் நல்லவர். டாம் மாமா, நீ எங்களோடு மிகவும் இன்பமாக வாழலாம்!' என்ருள்.

நியூ ஆர்லியன்ஸை அடைந்ததும், அகஸ்டினை அழைத்துச் செல்வதற்காக வந்திருந்த கோச்சு வண்டியில் அவரும், மகளும், ஒபீலியாவும், டாமும் ஏறிக் கொண்டு சென்றனர்.

அகஸ்டின் துரையின் மாளிகை மிகப் பெரியதாயும் அழகாயும் இருந்தது. அதன் வாசலில், அடிமைகளும் குழந்தைகளுமாகப் பெருங் கூட்டத்தினர் யசமானரை வரவேற்பதற்காக நின்று கொண்டிருந்தனர். வண்டி வந்ததும், எல்லோரும் ஆரவாரம் செய்தனர். அகஸ்டின் அவர்களுடைய நலத்தையெல்லாம் விசாரித்துவிட்டு உள்ளே சென்ருர். ஈவா, ஆனந்தமாகத் தாண்டவ மாடிக்கொண்டே, ஒவ்வொருவரிடமும் சென்று கை குலுக்கினுள். டாம் அந்த வீட்டையும் மலர்ச்செடிகள் நிறைந்த தோட்டத்தையும் கண்டு வியப்படைந்தான்.

வீட்டுக்குள்ளே சென்ற ஈவா, தன் தாயின் கட்டிலருகே சென்று அவளைப் பன்முறை முத்தமிட்டாள்.

பிறகு அகஸ்டின் தன் மனைவியருகில் வந்து, தன்னுடன் ஒபீலியா வந்திருப்பதாயும், அவள் வீட்டு வேலைகளைக் கவனித்துக்கொள்வாள் என்றும், டாம் என்ற புதிய அடிமை ஒருவன் வந்திருப்பதாயும் தெரிவித்தார்.

டாம் வசிப்பதற்கு நல்ல அறை ஒன்று அளிக்கப் பட்டது. அவனுக்கு உயர்ந்த உணவும், உடைகளும் கிடைத்தன. 'நாம் நல்ல இடத்திற்கே வந்து சேர்ந் திருக்கிரேம்!' என்று அவன் எண்ணினுன். அதே

சமயத்தில் கென்டக்கியில் அவன் விட்டுவந்த மனைவி குழந்தைகளைப் பற்றிய நினைவும் அவனுக்கு ஏற்பட்டது.

ஈவா அவனைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக்கொண்டிருந்தாள். ஏராளமான பூக்களைப் பறித்துவந்து, அவனுடைய சட்டையில் பொத்தான்களின் துவாரங்களில் அவைகளை அவள் மாட்டிவிட்டாள். ரோஜா மலர்களை மாலையாகக் கட்டி அவன் கழுத்திலே அணிவித்து, அவள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள்.

10. டாமும் ஈவாவும்

அகஸ்டினின் மாளிகையில் டாமுக்கு அளிக்கப்பட்டிருந்த அறை சுத்தமாகவும், வசதியாகவும் இருந்தது. அங்கே ஒரு மேசையும், நாற்காலியும், கட்டிலும் இருந்தன. மேசைமீது ஒரு வேதப்புத்தகமும் இருந்தது.

டாமிடம் ஈவாவுக்கு அன்பு வளர்ந்துகொண்டே வந்தது. அவனும், இமைகள் கண்ணைக் காப்பது போல், அவளைக் கவனித்துவந்தான். அவர்கள் இருவரும் நகமும் சதையும்போல் இருப்பதைக் கண்ட அகஸ்டின் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். டாமுடன் பழகுவதால் ஈவாவுக்கு நன்மையே விளையும் என்பதை அவர் உணர்ந்திருந்தார்.

ஒரு நாள் டாம் தன் மனைவிக்குக் கடிதம் எழுத வேண்டுமென்று எண்ணினான். ஈவாவிடம் சென்று

ஒரு காகிதம் வாங்கி வந்து, அவன் எழுதத் தொடங்கினன். அவன் மனத்தில் எத்தனையோ எண்ணங்கள் தோன்றின. ஆனல் அவன் எதையும் எழுத முடியவில்லை. முன்பு அவன் ஜியார்ஜிடம் கற்றிருந்த எழுத்துக்கள்கூட மறந்து போய்விட்டன. எப்படியோ சிரமப்பட்டு, அவன் சில சொற்களைக் காகிதத்தில் குறித்துக் கொண்டிருந்தான். அந்த நேரத்தில் ஈவா அங்கே வந்தாள். காகிதத்தைப் பார்த்தவுடன் அவளுக்கு வேடிக்கையா யிருந்தது. அவள், அவன் அருகே நின்றுகொண்டு, அவன் எழுதுவதற்கு உதவி செய்தாள்.

'உன் கடிதத்தைப் பார்த்தவுடன் குளோ அத்தை மிகவும் சந்தோஷப்படுவாள். கூடிய சீக்கிரத்தில் உன்னை ஊருக்கு அனுப்ப வேண்டுமென்று அப்பாவிடம் சொல்லப்போகிறேன். நீ சுதந்தரமா யிருக்க வேண்டும். நீயும், உன் மனைவி மக்களும் சேர்ந்திருக்க வேண்டும். அதுதான் எனது ஆசை!' என்று ஈவா சொன்னள்.

அப்பொழுது அங்கே வந்த அகஸ்டின், டாம் கடிதம் எழுதுவதைக் கவனித்தார். ஈவா தான் அவனுக்கு உதவி செய்துகொண்டிருந்ததாகக் கூறினள் அவன் எழுதியது சரியாயில்லை யென்றும், அன்று மாலை அவனுக்காகத் தானே எழுதித் தருவதாகவும் அகஸ்டின் கூறிவிட்டுச் சென்றார். அவ்வாறே மாலையில் கடிதம் எழுதப்பெற்று, தபாலிலும் சேர்க்கப் பட்டது.

ஈவா அடிமைகள் எல்லோரிடத்தும் அன்பா யிருந்து வந்தாள். ஒரு நாள் மாதா கோயிலுக்குப் போகவேண்டு மென்பதற்காக, அவளுடைய அன்னை

மேரி, அவளுக்குப் பட்டுப் பாவாடை, சட்டை முதலியவைகளை அணிவித்தாள். வீட்டிலிருந்த வைர நகைகளையும் பூட்டி, அவளை அலங்காரம் செய்தாள். ஆனல் சிறிது நேரத்திற்குள், ஈவா அடிமைகள் இருக்கும் இடத்திற்குப் போய்விட்டாள். அங்கே அவள் மம்மி என்ற வேலைக்காரியைக் கண்டாள். அந்த வேலைக்காரிதான், இரவு முழுவதும் விழித்திருந்து, யசமானியைக் கவனிப்பவள். பல நாட்களாகத் தொடர்ந்து விழித்திருந்ததால், அவள் தனக்குத் தலைவலி அதிகமாக இருப்பதாகச் சொன்னாள். அப்பொழுது ஈவா தன்னிடம் இருந்த தங்க டப்பியொன்றை அவளிடம் கொடுத்தாள். 'இதிலிருக்கும் மருந்தை அடிக்கடி முகர்ந்து பார்த்தால், தலைவலி போய்விடும்' என்று அவள் சொன்னாள். விலையுயர்ந்த அந்த டப்பியைத் தொடுவதற்குக்கூட மம்மி அஞ்சினாள். 'எனக்கு இது வேண்டவே வேண்டாம்' என்று அவள் மறுத்தாள். ஆனல் ஈவா விடுவதாயில்லை. டப்பியை அவள் கைகளிலே திணித்துவிட்டு, அவள் தன் தாயிடம் சென்றாள்.

அவளைக் கண்டதும், மேரி அவளைக் கண்டித்துப் பேசினாள். ஓயாமல் அடிமைகளிடம் நெருங்கக் கூடாதென்று கூறினாள். பேச்சின் நடுவே, தங்க டப்பி எங்கேயென்று அவள் கேட்டாள். 'மம்மிக்கு அதிகத் தலைவலி. அவளுக்கு அதைக் கொடுத்திருக்கிறேன்!' என்றாள் ஈவா.

'உடனே போய் அதை வாங்கி வா! அப்புறம் தான் நாம் கோயிலுக்குச் செல்லவேண்டும்!' என்று தாயார் கடிந்து பேசினாள். அப்படியே ஈவா போய் அதை வாங்கிவந்தாள்.

இவ்வாறு கறுப்பு மனிதர், வெள்ளையர் என்ற வேற்றுமையில்லாமல், எல்லோரிடத்திலும் ஈவா அன்புடன் பழகிவந்தாள். டாம் அவளுக்குப் பல கதைகள் சொல்லிவந்தான். சில சமயங்களில் அவன் பாடல்கள் பாடுவான்; நடனமும் ஆடுவான்.

ஒரு நாள் அகஸ்டின் எட்டு வயதுள்ள டாப்ஸி என்ற ஓர் அடிமைப் பெண்ணை விலைக்கு வாங்கி வந்திருந்தார். அவளை ஒபீலியாவிடம் காட்டி 'உனக்காகவே இவளை வாங்கி வந்திருக்கிறேன். இவளை நீ வேலைக்கு வைத்துக்கொள்!' என்று சொன்னார். அந்தப் பெண்ணைப் பார்த்து, 'இவள்தான் உன்னுடைய புதிய யசமானி! இவளிடம் நீ ஒழுங்காக நடக்க வேண்டும்!' என்றும் கூறினார். ஒபீலியா அவளை ஏற்றுக்கொள்ள மறுத்தாள். அசுத்தமான உடைகளுடன், அந்தப் பெண் மிகவும் விகாரமாயிருந்ததால் ஒபீலியாவுக்கு அவளைப் பிடிக்கவில்லை. அகஸ்டின், அந்தக் குழந்தை மிகவும் கஷ்டப்பட்டவள் என்றும், குடிகாரர்களாயிருந்த யசமானர்கள் அவளை அடித்து வந்தனரென்றும், அதனால் தான் வாங்கிவர நேர்ந்ததென்றும் தெரிவித்தார்.

அவர் வெளியே சென்றதும் ஒபீலியா அந்தப் பெண்ணை அழைத்துச் சில கேள்விகள் கேட்டாள்.

'உன் பெயர் என்ன?'

'தெரியாது!'

'தெரியாதா! சரி, உன்னுடைய தாய் யார்?'

'எனக்குத் தாயே கிடையாது!'

'தாயே இல்லாமல் நீ எப்படித் தோன்றினாய்? நீ எங்கே பிறந்தாய்?'

'நான் பிறக்கவேயில்லை, அம்மா!'

'நீ இப்படி யெல்லாம் பேசக் கூடாது. உன்னுடைய தாயும் தகப்பனும் எங்கே இருக்கிறார்கள் என்பதைச் சொல்லு!'

'எனக்குத் தாயில்லை, தகப்பனுமில்லை; ஒன்றுமே கிடையாது!'

இதற்குப் பின்னர் கடவுளைப் பற்றி அவளிடம் ஒபீலியா கேட்டாள். டாப்ஸி திகைத்து நின்றாள்.

'உன்னைப் படைத்தவர் யார்?'

'ஒருவரும் படைக்கவில்லை, நானாக வளர்ந்தேன் அம்மா!'

'நீ என்ன வேலைகள் செய்வாய்?'

'நான் தண்ணீர் கொண்டுவருவேன், பாத்திரங்கள் விளக்குவேன், நீங்கள் சொல்லுகிற வேலைகளைச் செய்வேன்!'

அவளை வைத்துக்கொண்டு வேலை வாங்குவது மிகவும் கஷ்டம் என்று ஒபீலியா கருதினாள். ஆயினும் ஒவ்வொரு வேலையாக அவளுக்குச் சொல்லிக்கொடுத்தாள்.

நாளடைவில் டாப்ஸி, திருந்துவதற்குப் பதிலாக அதிகக் குறும்புகளைச் செய்துவந்தாள். திருடுவதும், பொய் சொல்லுவதும் அவளுக்குத் தொழிலாயிருந்தன. ஒரு சமயம் அவள் கட்டிலில் படுக்கை விரித்துக்கொண்டிருந்தபொழுது, ஒபீலியாவுக்குச் சொந்தமான சில நாடாக்களும், இரண்டு கையுறைகளும் அவள் மடியிலிருந்து கீழே விழுந்துவிட்டன. அவற்றைப் பார்த்த ஒபீலியா அவளைப் பிடித்து அழுத்திக் கேட்டாள்: 'இவைகளை ஏன் திருடினாய்?'

'நான் திருடவேயில்லை. இவைகளை இப்பொழுது தான் நான் பார்த்தேன்!'

'நீ திருடாமல் இவைகள் உன் மடிக்கு எப்படி வந்தன?'

'அதுதான் தெரியவில்லை!'

ஒபீலியாவுக்குக் கோபத்தை அடக்க முடியவில்லை. ஒரு கழியை எடுத்து அந்த அடிமைப் பெண்ணை நையப் புடைத்தாள். அப்பொழுது அங்கே வந்த அகஸ்டின் மிகவும் திகைப்படைந்தார். டாப்ஸியை எப்படித் திருத்துவது என்று அவருக்குப் புரியவில்லை. அவளை டாம் மாமாவிடம் ஒப்படைத்துப் பார்க்கலாம் என்று அவர் எண்ணினார்.

ஒரு நாள் ஈவா டாப்ஸியைக் கண்டு வருத்தப் பட்டுப் பேசினாள். 'உனக்கு ஏதாவது வேண்டுமானால் என்னிடம் கேள்! நான் தருகிறேன். இனிமேல் நீ எதையும் திருடக் கூடாது!' என்று அன்புடன் கூறினாள்.

'ஈவா அம்மா! இதுவரை யாரும் என்னை நேசித்தது கிடையாது. நீதான் என்னிடம் பிரியமாயிருக்கிறாய்!' என்றாள் டாப்ஸி.

'டாப்ஸி, உன்னிடம் எனக்கு மிகுந்த அன்பு உண்டு. ஆனால் நீ நல்ல பெண்ணாயிருக்க வேண்டும்!'

ஈவாவுக்கு உலகத்தின் போக்கு ஒன்றும் புரியவில்லை. தன்னிடம் ஏராளமான உடைகளும் தேவையான எல்லாப் பொருள்களும் இருந்தன. டாப்ஸிக்கு எதுவுமேயில்லை. இதற்கெல்லாம் என்ன காரணம் என்பது அவளுடைய குழந்தை உள்ளத்திற்குத் தெரியவில்லை.

ஒபீலியாவின் சொந்த வீட்டில் அடிமைகளை வைத்துக் கொள்வதில்லை. ஆனால் அவளுடைய அத்தை வீடாகிய அகஸ்டின் இடத்தில் வீடு நிறைய அடிமை

கள் இருந்தனர். ஒபீலியா எல்லா வேலைகளையும் தானே மேற்பார்த்து வந்தாள். வீட்டைச் சுத்தம் செய்தல், சமையல், சாப்பாடு, அடிமைகளை முறையாக வேலை வாங்குதல் ஆகிய எல்லா வேலைகளையும் அவளே கவனித்து வந்தாள். டாப்ஸி வந்து சேர்ந்தது, தனக்கு உதவியில்லை, உபத்திரவம்தான் என்று அவள் கருதினாள். அதற்கு ஏற்றாற் போலவே டாப்ஸியின் வேலைகளும் இருந்தன. அவள் வந்த பிறகு எந்தச் சாமானும் வைத்த இடத்தில் இருப்பதில்லை. உயர்ந்த பட்டில் தயாரிக்கப் பெற்றிருந்த ஒபீலியாவின் அலங்காரமான தொப்பியில் ஒரு பகுதியை டாப்ஸி வெட்டி, அந்தத் துணியைக் கத்தரித்துப் பொம்மைகளுக்கு உடைகள் தயாரித்துக் கொண்டிருந்தாள். ஒபீலியாவின் உடைகளான 'கவுன்'களை எடுத்து டாப்ஸி தலையணைகளுக்கு அணிவித்து, அவைகளை நட்டமாக நிறுத்தி, அவைகளைச் சுற்றி விளையாடிக் கொண்டிருந்தாள்.

இந்தத் திருவிளையாடல்களையெல்லாம் அறிந்த டாமும் ஈவாவும் டாப்ஸியிடம் இரக்கம் கொண்டு அவளை எப்படித் திருத்தலாம் என்று தனித்தனியே முயற்சி செய்து வந்தனர்.

11. அன்பு நிறைந்த உள்ளம்

இரண்டு ஆண்டுகள் உருண்டோடி விட்டன. அகஸ்டின் பிரபுவின் மாளிகையிலே, ஈவாவின் அன்பையும் ஆதரவையும் பெற்று டாம் இன்பமாக

வாழ்ந்து வந்தான். அவன் முன்பு ஊருக்கு எழுதியிருந்த கடிதத்திற்கு நாளடைவில் குளோவிடமிருந்து பதிலும் வந்தது. அவளுக்காக ஜியார்ஜ் அந்தக் கடிதத்தை எழுதியிருந்தான். ஊரில் எல்லோரும் சுகமென்றும், குளோ ஒரு ரொட்டிக் கடையில் வேலை பார்ப்பதாயும், மோஸேயும், பீட்டரும் நன்கு வளர்ந்து வருவதாயும், குழந்தை போலி வீட்டிற்குள் எங்கும் சுற்றி நடந்து வருவதாயும் அந்தக் கடிதத்தில் எழுதப் பட்டிருந்தது.

இரண்டு ஆண்டுகள் கழிந்த பின்புதான் துன்பங்கள் தொடர ஆரம்பித்தன.

கோடைக் காலத்தில் வெய்யில் மிக அதிகமாயிருந்தது. சிறிது காலமாகவே ஈவாவுக்கு உடம்பு சரியாயில்லை. அவள் ஓயாமல் இருமிக்கொண்டே இருந்தாள். ஒபீலியா, தனக்குத் தெரிந்த மருந்துகளையெல்லாம் கொடுத்தும், பயன் ஏற்படவில்லை. ஈவா மெலிந்துகொண்டே வருவதை டாம் கவனித்தான். அவள் முன்போல் ஓடிச் சாடித் திரிவதில்லை; மற்ற நீகிரோ குழந்தைகளுடன் மணிக்கணக்காக விளையாடுவதில்லை. ஆயினும் அவள் விரைவிலே குணமடைந்துவிடுவாள் என்றுதான் டாம் எண்ணியிருந்தான்.

கோடைக் காலத்தில் அகஸ்டின் குடும்பத்தார் கிராமப் புறத்திலே அவர்களுடைய சொந்த வீடு ஒன்றில் தங்கியிருப்பது வழக்கம். அந்த ஆண்டிலும் அவர்கள் அங்கே போயிருந்தார்கள். வீட்டினருகில் அழகான பெரிய ஏரி ஒன்றிருந்தது. ஒரு நாள் மாலை ஈவா டாமுடன் அந்த ஏரிக்கரையிலே அமர்ந்திருந்தாள். வேதப் புத்தகத்திலிருந்து சில அருமையான

பகுதிகளை அவள் அவனுக்கு வாசித்துக் காட்டுவாள். திடீரென்று அவள் ஏரியை உற்றுப் பார்த்து, அதில் கதிரவனின் பொன்னிறமான கிரணங்கள் பாய்வதைக் கவனித்தாள். உடனே 'டாம், அதோ தெரிகிறது பார்!' என்று அவள் சொன்னாள்.

'என்னம்மா, அது?' என்று கேட்டான் டாம்.

ஈவா நீரில் தான் பார்த்த இடத்தைச் சுட்டிக் காட்டி, 'அங்கே இருக்கிறது சுவர்க்கம்! கதிரவன் ஒளியால் அங்கு நெருப்பைப்போல் ஒரே சிவப்பாயிருப் பதைக் கவனி! நான் அங்கேதான் செல்லப் போகி றேன்!' என்றாள்.

இதைக் கேட்ட டாமுக்கு உள்ளம் உடைந்து போய்விட்டது. உண்மையிலேயே ஈவா தங்களை விட்டுப் பிரிந்து போய்விடுவாளோ என்று அவன் அஞ் சினான். பூவுலகிலே ஒரு தெய்வப் பெண்ணைப்போல் நடமாடிக் கொண்டிருந்த ஈவா விரைவிலே தேவ உலகம் போய்ச் சேர்ந்துவிடுவதுபோல அவனுக்குத் தோன்றிற்று. அவன் அவள் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். ஜுரத்தினால் அது கொதிப்படைந்திருந் தது. அந்த நேரத்தில், 'ஈவா, ஈவா! வீட்டுக்குள் வந்து விடு, அம்மா! வெளியே பனி விழத் தொடங்கிவிட் டது!' என்று வீட்டிலிருந்து கூவியழைத்தாள் ஒபீலியா.

டாம் நினைத்தது சரியாகத்தானிருந்தது. ஈவா நாளுக்கு நாள் மெலிவடைந்து வந்தாள். சிறந்த வைத்தியர் ஒருவர் அவளுக்கு மருந்து கொடுத்து வந் தார். ஆயினும் ஒபீலியா அவள் நெடுநாள் உலகில் தங்கியிருக்க மாட்டாள் என்பதைத் தெரிந்துகொண் டாள். அதைப் பற்றி அவள் மேரியிடம் சொல்லி

பொழுதெல்லாம், மேரி அதை நம்பவில்லை. எப்பொழுதுமே மேரி, தன் நலத்தைத் தவிர, மற்றவர்களைப் பற்றிக் கருத்தைச் செலுத்துவதே இல்லை. தனக்கு ஏதோ நோய்கள் இருப்பதாக அவள் எண்ணிக் கொண்டேயிருந்தாள். ஆனால் அவை என்ன நோய்கள் என்று அவளுக்கே தெரியாது. ஒருவேளை நோய்கள் இருப்பதாக அவள் கற்பனை செய்துகொண்டிருக்கலாம். ஈவாவைப் பற்றி ஒபீலியா அடிக்கடி தொந்தரவு செய்வதையே அவள் விரும்பவில்லை.

நோய் அதிகமாகி, ஈவா கட்டிலில் படுக்கையிலே படுத்திருந்தாள். வைத்தியரும் அவளைப் பற்றி உறுதி சொல்ல முடியாதென்று தெரிவித்துவிட்டார். அப்பொழுதுதான் மேரி உண்மையான நிலையை ஓரளவு தெரிந்துகொண்டாள். அகஸ்டின் பிரபு தன்னுடைய அருமை ஈவா தன்னைவிட்டு ஒரு நாளும் பிரியமாட்டாள் என்று எண்ணி வந்த நிலை மாறி அவரும் அதிகக் கவலை கொண்டார்.

ஒரு நாள் வேதத்தைப்பற்றி டாமிடம் பேசிக்கொண்டிருந்தபொழுது, 'கிறிஸ்துபெருமான் மற்றவர்களுக்காகத் தாம் ஏன் உயிர்விட விரும்பினார் என்பது எனக்குத் தெளிவாய்த் தெரிகிறது!' என்று ஈவா சொன்னாள். 'எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே! நீ என்ன சொல்லுகிறாய்?' என்றான் டாம்.

ஈவா பேசலுற்றாள் : 'எனக்கும் மற்றவர்களுக்காக உயிரை அளிக்க வேண்டுமென்று ஆசை ஏற்படுகிறது. அன்று கப்பலில் உன்னை முதன்முதலில் சந்தித்தபொழுது, உன்னுடன் எத்தனையோ அடிமைகள் இருந்தார்கள். தாய், தந்தை, கணவன், மனைவி, குழந்தைகள் ஆகியவர்களைப் பிரிந்து அடிமைகள்

தவித்துக் கொண்டிருப்பதைக் கண்டேன். ஆனாலும் பல சமயங்களில் அதே மாதிரியான காட்சிகளைக் கண்டிருக்கிறேன். சமூகத்திலே ஒரு பகுதியினர் மட்டும் ஏன் இப்படி அல்லற்படுகின்றனர் என்பது எனக்கு விளங்கவில்லை. ஆனாலும் அவர்களுடைய நன்மைக்காக நான் என்னைத் தியாகம் செய்ய முடியும். அதையே நான் செய்ய விரும்புகிறேன்!'

அந்தச் சமயத்தில் அகஸ்டின் அங்கு வந்ததால், தந்தையும் மகளும் சிறிதுநேரம் பேசிக்கொண்டிருக்கட்டும் என்று எண்ணி, டாம் மெதுவாக வெளியே சென்றான். தந்தையிடமும் ஈவா அடிமைகளைப் பற்றியே பேசத்தொடங்கினாள்.

'அடிமைகள் நம் மாளிகையில் இன்பமாகத் தானே இருக்கிறார்கள்?' என்று கேட்டார் தந்தை.

'உங்கள் தயவினால் அவர்கள் இன்பமாக இருக்கிறார்கள். உங்களுக்குப் பின்னால், வேறு யசமானர்கள் அவர்களை இப்படி நடத்துவார்களா? நான் கவலையில்லாமல் இன்பமாயிருக்க வேண்டும் என்று நீங்கள் அடிக்கடி சொல்வீர்கள். அது வெறும் சுயநலம் தானே! உலகத்தில் அடிமைகளே இல்லாமலிருக்கும்படி செய்யவேண்டும், அப்பா!'

'கண்ணே, அது மிகவும் கஷ்டமான காரியம்.'

'நான் இறந்த பிறகு, அடிமைகளே இருக்கக் கூடாது என்று நீங்கள் மற்றவர்களுக்கும் சொல்லி வையுங்கள்!'

'இறத்தல்' என்பதைக் கேட்டதும் தந்தை திடுக்கிட்டார். 'ஈவா, நீ எப்படியும் பிழைத்துக்கொள்வாய் என்று நான் நம்புகிறேன்' என்று அவர் கூறினார்.

'எனக்கு அப்படித் தோன்றவில்லையே, அப்பா இனி நாம் சுவர்க்கத்தில்தான் சந்திக்கவேண்டும்!'

அகஸ்டின் அவளைத் தூக்கிச் சிறிதுநேரம் கைகளிலே வைத்துக்கொண்டு சமாதானப்படுத்தினர்.

ஒரு சமயம் மேரி, வைர நகைகளை வைத்திருந்த பெட்டி ஒன்றைக் கொண்டுவந்து, அவளிடம் அதைத் திறந்து காட்டினுள். பளபளப்பான வைரங்களைப் பார்த்தவுடன், ஈவா வியப்படைந்து, 'இவைகளையெல்லாம் விற்ருல் நிறையப் பணம் வருமல்லவா, அம்மா?' என்று கேட்டாள்.

'ஆம், ஈவா! ஆனுல் எதற்காக விற்கவேண்டும்? இவைகளை நீ அணிந்துகொள்ள வேண்டும்! திருமணமான புதிதில் நான் இவைகளை அணிந்துகொண்டு ஒரு நடனத்திற்குப் போயிருந்தேன். எல்லோரும் என்னைப் பார்த்து ஆச்சரியப்பட்டனர்!' என்ருள் மேரி.

'அம்மா! நிறையப் பணம் கிடைத்து, அதைக்கொண்டு நாம் ஒரு பெரிய மாளிகையை வாங்கலாம். எல்லா அடிமைகளையும் அங்கே இருக்கச் செய்து, அவர்களுக்குச் சுதந்தர மளிக்கவேண்டும்; நல்ல ஆசிரியர்களைக் கொண்டு அவர்களுக்குக் கல்வி அளிக்கவேண்டும்!'

இதைக் கேட்ட அன்னை, 'ஆமாம், நீயே அங்குத் தலைமை ஆசிரியையாக இருக்கலாம்!' என்று சிரித்துக்கொண்டே சொன்னுள்.

இவ்வாறு கட்டிலில் படுத்திருந்த நிலையிலும், அடிமைகளைப் பற்றியும், அவர்களுடைய துன்பங்களைப் பற்றியுமே ஈவா எண்ணிக்கொண்டிருந்தாள். மற்ருெரு சமயம், அவள் தன் தந்தை வந்தபொழுது,

தான் இறந்ததற்குப் பிறகு டாமுக்கு விடுதலை அளித்து விட வேண்டுமென்றும் வேண்டிக்கொண்டாள்.

இந்த ஈவா ஒரு பெண்ணா, அல்லது தேவதையா? காந்தம் ஊசிகளை இழுப்பதுபோல, அவள் எல்லா அடிமைகளையும், மற்றவர்களையும் தன்வசம் இழுத்துக் கொண்டு விளங்கினாள்.

12. இறுதி நாட்கள்

நாளுக்கு நாள் ஈவா மெலிந்துகொண்டே யிருந்தாள். அவளுடைய அறையில் ஒரு பெரிய சாளரம் இருந்தது. அதனருகில், கட்டிலிலிருந்தபடியே, அவள் வெளியேயிருந்த ஏரியையும், இயற்கைக் காட்சியையும் பார்த்து அனுபவித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய கைகளில் வேதப்புத்தகம் எப்பொழுதும் இருந்துவந்தது.

ஒரு நாள் காலை, அவள் மேரியிடம், 'அம்மா, என் தலை முடியில் கொஞ்சம் கத்தரித்து எடுக்கவேண்டும்' என்று கூறினாள்.

'எதற்காக?' என்று தாய் கேட்டாள்.

'என்னுடைய நண்பர்கள் எல்லோருக்கும் நான் என் கையாலேயே அதைப் பிரித்துக் கொடுக்கவேண்டும்!' என்று சொன்னாள் மகள்.

சிறிது நேரத்திற்குப்பின் ஒபீலியா ஒரு கத்தரியை எடுத்துக்கொண்டு வந்தாள். ஈவாவின் கூந்தலில் பின் தலையிலிருந்து சுருண்டு நீண்டிருந்த சில ரோமங்களைக் கத்தரித்து, அவைகளை அவள் ஈவா

விடம் கொடுத்தாள். பிறகு அடிமைகள் எல்லோரையும் அங்கு வரும்படி அவள் ஏற்பாடு செய்தாள். ஆண்களும் பெண்களுமாக அடிமைகள் அனைவரும் அங்கு வந்து நின்றனர். ஈவா படுத்திருந்த நிலையையும், அவள் முகத்தையும் பார்த்த அவர்கள், தங்களிடம் அவள் கடைசியாக விடைபெற்றுக்கொள்ளப் போகிருள் என்பதைத் தெரிந்துகொண்டனர். அறை முழுதும் அமைதி நிலவியது.

ஈவா பேசத் தொடங்கிஞள்: 'உங்கள் அனைவரிடமும் எனக்குப் பிரியம் அதிகம். நான் உங்களை விட்டுச் செல்லுமுன்ஞல், உங்களுக்கு ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் அதை எப்பொழுதும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்!'

இதைக் கேட்டதும் அடிமைகள் கண்ணீர் விட்டு அழுதனர். அவள் சிறிதுநேரம் மௌனமாயிருந்துவிட்டு, மீண்டும் பேசலாஞள்: 'என்னிடம் உங்களுக்கு அன்பிருந்தால், நான் பேசும்பொழுது நீங்கள் அழுது தடை செய்யக்கூடாது. சுவர்க்கத்திலே என்ருவது ஒருநாள் நீங்கள் என்னைச் சந்திக்க விரும்பிஞல், நீங்கள் நல்லவர்களாக மாறவேண்டும். நீங்கள் சோம்பலாகவும், கவனமில்லாமலும், சிந்தனையில்லாமலும் வாழக்கூடாது. நீங்கள் அன்பு நிறைந்த உண்மைக் கிறிஸ்தவர்களாக வாழவேண்டும். நீங்கள் ஆண்டவரைப் பிரார்த்தனை செய்ய வேண்டும். வேத நூலைப் படிக்கவேண்டும்—'

ஈவா பேச்சை இடையில் நிறுத்திக்கொண்டு, அவர்களை ஒரு முறை திரும்பிப் பார்த்தாள். பிறகு மீண்டும் பேசிஞள்:

'அந்தோ! உங்களுக்குப் படிக்கத் தெரியாது

என்பதை நான் மறந்துவிட்டேன். நீங்கள் வேதத்தைப் படிக்க முடியாவிட்டாலும், நீங்கள் பிரார்த்தனை செய்யுங்கள்! எவரையாவது கொண்டு வேதத்தைப் படிக்கச்சொல்லிக் கேளுங்கள். அப்படிச் செய்தால், நாம் அனைவரும் வானுலகில் சந்திக்கலாம்!'

அடிமைகள் கண்ணீர் விட்டுக்கொண்டே, முழங்காலிட்டுப் பணிந்து, ஆண்டவனைத் தொழுதார்கள்.

ஈவா, 'அடுத்தாற்போல் என் நினைவுக்காக உங்களுக்கு என் தலை ரோமங்களில் ஆளுக்கொன்று அளிக்கப்போகிறேன். அதைப் பார்த்ததும், உங்களுக்கு என் நினைவு வரும்!' என்று சொன்னாள்.

அடிமைகள் ஒவ்வொருவராக எழுந்து கட்டிலருகில் சென்று ஒரு ரோமத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பினர். ஒபீலியா, உணர்ச்சிப் பெருக்கினால் ஈவா மிகவும் களைப்படைந்து போவாள் என்று கருதி, ரோமம் வாங்கிக்கொண்ட அடிமைகளை மெதுவாக அறைக்கு வெளியே அனுப்பிவிட்டாள். டாம் மாமாவும், கிழவி மம்மியும் மட்டும் எஞ்சியிருந்தனர்.

'டாம் மாமா! உனக்காக நேர்த்தியான ஒரு முடியை எடுத்து வைத்திருக்கிறேன். நான் விரைவிலே புறப்பட்டுவிடுவேன்! ஆனால் அப்பாவைப் பற்றித்தான் கவலையாயிருக்கிறது. நாம் எல்லோரும் சுவர்க்கத்தில் சந்திப்போம். என்னுடைய அருமை மம்மியும் அங்கே வந்து சேருவாள்!' என்று சொல்லிக்கொண்டே ஈவா அவர்கள் இருவருக்கும் இரண்டு முடிகளை எடுத்துக் கொடுத்தாள்.

மம்மி கண்ணீர் விட்டுக் கதறிக்கொண்டே, 'என் கண்மணி ஈவா இல்லாமல் நான் எப்படி உயிர் வாழ்ந்திருப்பேன்?' என்று கூறினாள். அவளும் டாமும்

வெளியில் சென்றபிறகு, டாப்ஸி ஈவாவின் அருகில் வந்து நின்ருள். தலையணையில் அயர்ந்து சாய்ந்திருந்த ஈவா திரும்பிப் பார்த்ததும், கனவில் ஏதோ உருவம் தெரிவதாக எண்ணினுள். பிறகு டாப்ஸி நிற்பதைத் தெரிந்துகொண்டு, 'நீ எங்கிருந்து வருகிருய்?' என்று கேட்டாள். டாப்ஸி, கண்களைக் கசக்கிக்கொண்டு, 'இவ்வளவு நேரமாக நான் இங்கேதான் நின்றேன், அம்மா! நான் கெட்ட பெண்தான்! ஆனுலும் எனக்கும் ஒரு முடி கொடுக்க மாட்டீர்களா!' என்று கேட்டாள்.

'உனக்கு இல்லாமல் என்ன? உனக்கும் தருகிறேன்! நீ இதைப் பார்க்கும்பொழுதெல்லாம் உன்னிடம் நான் கொண்டுள்ள அன்பை நினைத்துப் பார்! நீ நல்ல பெண்ணுக நடந்து கொள்ளவேண்டும்!' என்று சொல்லி ஈவா அவளுக்கும் ஒரு ரோமத்தை எடுத்துக் கொடுத்தாள்.

'அம்மா, நான் நல்லவளாக இருக்கத்தான் முயற்சி செய்கிறேன். ஆனுல் அது மிகவும் கஷ்டமாயிருக்கிறது. எனக்கு அது பழக்கமில்லை. நான் விடாமல் முயற்சி செய்கிறேன்!' என்ருள் டாப்ஸி.

'கவலைப்படாதே! ஏசுநாதரை எண்ணிக்கொள்! அவர் உனக்கு உதவி செய்வார்!'

ஒபீலியா, சப்தம் செய்யாமல், டாப்ஸியை மெல்ல வெளியே அனுப்பிவைத்தாள். டாப்ஸி ஈவா அளித்த முடியைப் பத்திரமாகத் துணியில் முடிந்து வைத்திருந்தாள்.

ஒவ்வொரு நாளும் ஒபீலியா இரவில் ஈவாவின் அருகிலிருந்து கவனித்துவந்தாள். சில சமயங்களில் டாம் மாமா, ஈவாவைக் கைகளில் தூக்கிக்கொண்டு,

வெளியிலே சிறிதுநேரம் உலாவிக்கொண்டிருப்பான். இரவில் அவன் ஈவாவின் அறைக்கு வெளியேயிருந்த வராந்தாவில்தான் படுத்திருப்பான். ஒரு சமயம் ஒபீலியா, 'நீ ஏன் இங்கே படுத்திருக்கிறாய்? உன் அறைக்குப் போவதில்லையா?' என்று அவனைக் கேட்டாள். அவன், 'எந்த நேரத்திலும் ஆண்டவர் ஈவாவை அழைத்துப்போக வருவார். அதைக் கவனிக்கவே நான் இங்கே விழித்திருக்கிறேன்!' என்று பதில் சொன்னான்.

அன்று ஈவாவுக்கு முகம் சற்றுத் தெளிவாயிருந்தது. ஆனால் நள்ளிரவில் நிலைமை மாறிவிட்டது. ஒபீலியா டாமை அழைத்து, உடனே போய் வைத்தியரை அழைத்து வரும்படி சொன்னாள். அவனும் ஓடிச்சென்று அவரை அழைத்துவந்தான். அவர் மேற்கொண்டு எதுவும் செய்வதற் கில்லையென்று கையை விரித்துவிட்டார். அகஸ்டினும், மேரியும் அறைக்குள்ளே வந்திருந்தனர். அகஸ்டின் ஈவாவின் செவியருகே வாயை வைத்துக்கொண்டு, 'கண்ணே, என்னைத் தெரிகிறதா?' என்று கேட்டார்.

ஈவா தன் நீலக் கண்களைத் திறந்து பார்த்து, 'அப்பா!' என்றாள். ஒரு கணநேரம் அவள் முகத்தில் புன்னகை படர்ந்திருந்தது. பின்பு அது வேதனையாக மாறியது. மகள் படும் துயரத்தைக் கண்டு தாங்க முடியாமல், அகஸ்டின் டாமின் கைகளைப் பிடித்துக்கொண்டு, 'டாம், என்னால் சகிக்க முடியவில்லையே!' என்று கூறிக் கண்ணீர் பெருக்கினார்.

டாம் ஈவாவைத் திரும்பிப் பார்த்தான். அவள் கண்கள் மூடியிருந்தன. 'அன்பு, இன்பம், அமைதி!' என்று முனகிக்கொண்டே, ஈவா கடைசியாகப் புன்

னதை செய்தாள். 'யசமான், எல்லாம் முடிந்துவிட்டது!' என்ருன் டாம்.

ஈவா மரணத்தைத் தாண்டி, மறுஉலகம் சென்று விட்டாள்.

13. அடிமைகளுக்கு நேர்ந்த அவதி

ஈவாவின் ஈமக்கிரியைகள் முடிந்த பின்பு, அகஸ்டின் குடும்பத்தார் கிராமத்தைவிட்டு, நகர மாளிகைக்குச் சென்ருர்கள். நகரத்தில் அகஸ்டின், வெளியே போய், நண்பர்களை அடிக்கடி கண்டு, அளவளாவிப் பேசிவந்தார். முன்பெல்லாம் அவர் இம்மாதிரிச் சுற்றுவதில்லை. ஆனல், இப்பொழுது எந்த நேரத்திலும் ஈவாவின் நினைவு அவர் நெஞ்சைவிட்டு அகலாதிருந்ததால், அவர் நண்பர்களின் மூலம் சிறிதளவு அமைதி பெறுவதற்காக வெளியில் சுற்றிக்கொண்டிருந்தார். அவர் குறித்த வேளையில் வந்து உண்பதில்லை. உணவிலேயே அவருக்கு வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. நாளுக்கு நாள் அவரது உடலும் நலிவடைந்துவந்தது.

'நாம் சுவர்க்கத்தில் சந்திப்போம்!' என்று ஈவா அடிக்கடி கூறிவந்தது அவர் செவியில் ஒலித்துக் கொண்டே யிருந்தது. அத்தகைய சந்திப்பு விரைவில் கிடைக்குமா என்று அவர் ஏங்கலானர்.

அவருடைய மனைவிக்கு அவரிடம் வருத்தம் ஏற்பட்டிருந்தது. அவர் தன்னிடம் வந்து ஆறுதல் சொல்லிக் கொண்டிராமல், வெளியே- அலைகிருர் என்று அவள் துக்கப்பட்டாள்.

அகஸ்டின், 'ஈவா பிரிந்து சென்ற பிறகு எனக்கு உலகமே வெறுமையாகிவிட்டது!' என்று டாமிடம் கூறினார். அத்துடன் தன் மகளின் எண்ணத்தின்படி, டாமை விரைவிலே விடுதலை செய்ய ஏற்பாடு செய்து கொண்டிருப்பதாயும் அவர் கூறினார். 'எந்த நேரத்திலும் நீ ஊருக்குப் புறப்படத் தயாராயிரு! உன் பெட்டி, சாமான்களை எடுத்து வை. நீ உன் மனைவி மக்களுடன் போய்த் தங்குவதற்கு உரிய விடுதலைப் பத்திரம் எழுதிக்கொண்டு வரும்படி சொல்லியிருக்கிறேன்!' என்றும் தெரிவித்தார்.

டாமுக்குத் தன் விடுதலையைக்காட்டிலும் யசமானருடைய உடலைப் பற்றியே அதிகக் கவலையிருந்தது. அவர் மெலிந்துகொண்டே வந்தது எதில் கொண்டு போய் விடுமோ என்று அவன் கலங்கினான். ஒபீலியாவும் அவரைப் பற்றிக் கவலை கொண்டிருந்தாள்

அவள் டாப்ஸியை அடிப்பதை நிறுத்திவிட்டாள் அவளைத் திருத்துவதற்கு அன்பைத் தவிர வேறு வழியில்லை என்பதை ஈவா மூலம் அவள் தெரிந்துகொண்டாள். டாப்ஸியும் நாளுக்குநாள் திருந்தி வந்தாள். டாப்ஸியை ஒபீலியாவுக்கு அளிப்பதாக அகஸ்டின் ஒரு பத்திரம் எழுதி, அதை ஒபீலியாவிடமே ஒப்படைத்துவிட்டார்.

ஒரு நாள் மாலை, வெளியே போய்ச் செய்திகளை விசாரித்துத் தெரிந்துகொள்ளலாம் என்று, அகஸ்டின் வீட்டைவிட்டு வெளியே சென்றார். டாம் தன்னுடன் வரவேண்டியதில்லையென்றும், அவன் வீட்டு வாசலிலேயே இருந்தால் போதுமென்றும் அவர் சொல்லியிருந்தார். அப்பொழுது மாலை கழிந்து இருட்டும் நேரம்.

டாம் மாளிகை வாயிலில் அமர்ந்து கொண்டே யிருந்தான். சில மணி நேரத்திற்குப் பின் அவன் அமர்ந்திருந்த இடத்திலேயே சிறிது கண்ணயர்ந்து விட்டான். பின்னர் இரவில் மாளிகை முன்பு கூச்சல்கள் கேட்கவே, அவன் விழித்து எழுந்து பார்த்தான்.

ஐந்தாறு பேர்கள், அடிபட்ட ஒருவரைத் தூக்கிக் கொண்டு மாளிகைக்குள் வந்துகொண்டிருந்தனர் அடிபட்டவர் தன் யசமானர்தான் என்பதை அறிந்ததும், டாம் நடுக்கமடைந்தான்.

அன்று மாலை அகஸ்டின் ஒரு விடுதிக்குச் சென்றிருந்தார். அங்கே அவர் பத்திரிகை படித்துக் கொண்டிருக்கும்பொழுது, இரண்டு பேர்கள் குடிவெறியில் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவன் கையில் பிச்சுவா வைத்திருந்தான். அதைக் கண்டதும் அவர் எழுந்து சென்று, அந்த ஆயுதத்தைப் பிடுங்கி, இருவரையும் விலக்கிவிட வேண்டுமென்று விரும்பிஞர். ஆஞல் பிச்சுவா வைத்திருந்தவன் அவருடைய உடலில் விலாப்பக்கம் குத்திவிட்டான். அங்கிருந்த கூட்டத்தினர் அவரைத் தூக்கிக் கொண்டு வீட்டுக்கு வருவதற்குள், அவர் உடலிலிருந்து ஏராளமான உதிரம் வடிந்துவிட்டது.

வீட்டிலே உடனே வைத்தியர் வந்து பார்த்தார். காயத்தில் மருந்து வைத்துக் கட்டிஞர். ஆஞல் பிரபு பிழைக்கமாட்டார் என்று அவர் தெரிவித்தார்.

டாம் கண்ணீர் விட்டுக்கொண்டே, அவருடைய கட்டிலருகே முழந்தாள் பணிந்து, பிரார்த்தனை செய்து கொண்டிருந்தான். அப்பொழுது அகஸ்டின், அவனுடைய கைகளைத் தன் கையால் பற்றிக்கொண்டு,

அவனுடைய விடுதலைப்பத்திரம் தயாராகவில்லையே என்று வருத்தப்பட்டார்.

சில நிமிடங்களுக்குப் பின்னர் அவருடைய ஆவி பிரிந்துவிட்டது. அவர் தன் அருமைக் குமாரியிடம் போய்ச் சேர்ந்துவிட்டார்.

திடீரென்று எதிர்பாராத நிலையில் அகஸ்டின் இறந்துபோனதால், அடிமைகள் அனைவரும் திகிலடைந்து திகைக்கலானார்கள். மாளிகை முழுவதும் அழுகைக் குரலைத் தவிர வேறெதுவும் கேட்கவில்லை. யார் யார் எங்கெங்கே விற்கப்படுவார்களோ என்று எல்லோரும் கலக்கம் அடைந்திருந்தனர். அங்கேயிருந்தவர்களில் டாமும் ஒபீலியாவுமே மனமுடையாமல் தைரியமாக இருந்தனர்.

பிரேத அடக்கம் முடியும்வரை டாம் இறைவனைப் பற்றியும், விதியைப் பற்றியும் எண்ணி, பிரார்த்தனை செய்துகொண்டேயிருந்தான். பின்னால்தான் அவன் தன் நிலைமையைப்பற்றி எண்ணலானான்.

கணவர் இறந்தவுடனேயே மேரி தங்கள் குடும்ப வக்கீலை அழைத்து அடிக்கடி பேசிவந்தாள். அவர்களுடைய பேச்சின் விளைவாகச் சில முடிவுகள் செய்யப்பட்டன.

மேரி சிறிது தூரத்திற்கப்பால் இருந்த தன் தகப்பனாரின் வீட்டுக்குச் சென்றுவிட வேண்டுமென்றும், ஒபீலியா தன் வீட்டுக்குச் செல்ல வேண்டுமென்றும், அடிமைகள் அனைவரையும் விற்றுவிட வேண்டுமென்றும், மாளிகை, தோட்டம், நிலங்கள் முதலியவற்றையும் விற்றுவிட வேண்டுமென்றும் மேரி முடிவு செய்தாள்.

டாமின் நிலைமை என்ன? சில நாட்களுக்கு

முன்புதான் அகஸ்டின் அவனுக்கு விடுதலை அளிக்கப் போவதாகச் சொல்லியிருந்தார். அவருடைய கடைசி விருப்பத்தை மேரி நிறைவேற்றுவாளா? அவள் தன் அருமைப் பெண் ஈவா டாமுக்கு விடுதலை அளிக்க வேண்டுமென்று அடிக்கடி சொல்லி வந்ததை இப்பொழுது நினைத்துப் பார்ப்பாளா? டாமுக்கு ஒன்றும் புரியவில்லை. பிரார்த்தனை செய்வதில்கூட அவனுக்குச் சலிப்பு ஏற்பட்டது. விரைவிலே தன் மனைவியையும் குழந்தைகளையும் போய்ப் பார்க்கலாம் என்று அவன் ஆசை கொண்டிருந்தான். திடீரென்று அந்த ஆசையில் மண் விழுந்துவிட்டது.

எனினும் டாம் நம்பிக்கையைக் கைவிடவில்லை. அவன் ஒபீலியாவைக் கண்டு பேசினான். 'அம்மா! யசமான் என்னை விடுதலை செய்யப் போவதாகச் சொல்லி யிருந்தார். அதற்கு வேண்டிய பத்திரமும் எழுத ஏற்பாடு செய்திருந்தார். எனக்காகத் தாங்கள் யசமானியம்மாளைக் கண்டு பேசினால் நல்லது. விடுதலைப் பத்திரத்தைச் சீக்கிரமாக எழுதி முடித்தால், நான் ஊருக்குத் திரும்பிச் செல்லமுடியும்' என்று தெரிவித்தான்.

அவனுக்காக ஒபீலியா எத்த உதவியும் செய்யத் தயாரா யிருந்தாள். 'நான் மேரியிடம் விவரமாகக் கேட்டு வருகிறேன். ஆனால் அவள் ஒரு பிடிவாதக்காரி. என்னால் இயன்றதை நான் செய்கிறேன்' என்று அவள் கூறினாள்.

கூடத்தில் மேரி ஒரு 'சோபா'வில் அமர்ந்து கொண்டிருந்தாள். அவளருகில் ஒரு வேலைக்காரி புதிய துணிகள் சிலவற்றை அவளிடம் எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தாள். கணவர் இறந்ததற்காக

மேரி துக்கம் கொண்டாடுவதற்கு ஒரு கறுப்பு உடை தைக்க வேண்டுமென்று விரும்பினாள். நல்ல துணியாக ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அதை விரைவிலே தைத்து வாங்கி வரவேண்டுமென்று அவள் வேலைக்காரியிடம் சொல்லி யனுப்பினாள். இதற்குப் பின்னர் ஒபீலியா அவளிடம் சென்று பேசத் தொடங்கினாள்.

அப்பொழுது மேரி, வீட்டையும், நாற்காலிகள், கட்டில்கள் முதலிய சாமான்களையும், அடிமைகளையும் ஏலத்தில் விற்றுவிடவேண்டுமென்று வக்கீல் சொல்லியிருப்பதாகவும், வெளியூரிலிருந்த தன் மைத்துனரும் அப்படியே செய்யும்படி எழுதியிருப்பதாகவும் கூறினாள். அடுத்த வாரத்திலேயே தான் வீட்டைக் காலி செய்துவிட்டு, வெளியேறப் போவதாகவும் அவள் தெரிவித்தாள்.

ஒபீலியா தான் சொல்ல வேண்டிய விஷயத்தை மெதுவாகத் தொடங்கினாள்: 'உன் கணவர் இறப்பதற்கு முன்னால் டாமுக்கு விடுதலை அளிப்பதாகச் சொல்லியிருந்தார். அதற்காகப் பத்திரமும் எழுதச் சொல்லியிருந்தார். அந்த விஷயத்தை நீயும் கவனித்து, சட்ட பூர்வமாகச் செய்யவேண்டிய காரியங்களை விரைவிலே செய்து முடித்தால் நலம்.'

'நான் அப்படி எதுவும் செய்யப் போவதில்லை. அடிமைகளிலே டாம்தான் தலைசிறந்தவன். அவனை விட்டுவிட்டால், மிகுந்த நஷ்டமுண்டாகும். அவனுமா விடுதலை கேட்கிறான்? இந்த அடிமைகள் எல்லோரும் விடுதலை விடுதலையென ஏன் கத்துகிறார்கள்? அடிமைகளின் விமோசனம் பற்றிப் பேசுவதே எனக்குப்பிடிக்கவில்லை. அவர்களை ஒருநாளும் சுதந்தரமாக விடக்கூடாது!' இவ்வாறு மேரி ஆத்திரத்தோடு பேசினாள்.

ஒபீலியா ஓரளவு தைரியத்துடன் பேசினுள்: உன் கணவருடைய கடைசி வாக்குறுதி அது. அதை நிறைவேற்ற வேண்டியது உனது கடமை. ஈவாவும் மூச்சு இருக்கும்வரை அதையே சொல்லிக் கொண்டிருந்தாள்.'

உடனே மேரி, தன் கைக்குட்டையை எடுத்து வைத்துக்கொண்டு அழத்தொடங்கினுள். 'என்னிடத்தில் ஒருவருக்கும் இரக்கமில்லை. எல்லோரும் எனக்கு விரோதமாகவே பேசுகின்றனர். என் ஒரே மகளும் போய்விட்டாள். என் விருப்பமறிந்து நடக்கும் கணவரும் இறந்து போனுர். எனக்கு ஆதரவானவர் ஒருவருமில்லையே!' என்று கூச்சலிடத் தொடங்கினுள். அவள், தலைவலி உண்டாகிவிட்டது என்று சொன்னுள். மம்மியை அழைத்து, சாளரத்தைத் திறந்து விடும்படி சொன்னுள். ஒரே சமயத்தில் தனக்குப் பல வேதனைகள் ஏற்பட்டுவிட்டதுபோல் அவள் நடந்து கொண்டாள்.

மேற்கொண்டு அவளிடம் பேசிப் பயனில்லை என்று கருதி, ஒபீலியா திரும்பிச் சென்றுவிட்டாள் ஆனுல் டாமுக்காக ஏதாவது உதவி செய்ய வேண்டுமென்று அவள் விரும்பினுள். கென்டக்கியிலுள்ள திருமதி ஷெல்பிக்கு அவள் ஒரு கடிதம் எழுதினுள். அதில் டாமின் நிலைமையைப் பற்றியும், விரைவில் அவனுக்கு ஏற்படக்கூடிய அபாயத்தைப் பற்றியும் குறிப்பிட்டு, உடனே பணம் அனுப்பி அவனை விலைக்கு வாங்கிச் செல்ல வேண்டுமென்று அவள் எழுதியிருந்தாள்.

ஆனுல் மறுநாளே டாமும் மற்றும் ஆறு அடிமைகளும் ஏலத்தில் விற்கப்படுவதற்காக ஓர் அடிமைக்

கிடங்குக்கு அனுப்பப்பட்டுவிட்டனர். அந்தக் காலத்தில், வியாபாரப் பொருள்களை அடுக்கி வைப்பதற்குக் கிடங்குகள் இருந்ததுபோல, அடிமைகளை அடைத்து வைக்கவும் கிடங்குகள் இருந்தன. அவைகள் பெரிய கொட்டாரங்கள். அவைகளில் பல அறைகள் இருந்தன. ஒவ்வோர் அறையிலும் ஏராளமான அடிமைகள் அடைக்கப்பட்டு வந்தனர். அடிமை வியாபாரிகள் சந்தைகளுக்கு அந்தக் கிடங்குகளிலிருந்து அடிமைகளை நேராக அழைத்துப் போவார்கள்.

டாம் இருந்த கிடங்கில் வேறு பல அடிமைகளும் இருந்தனர். அவர்களில் சிலர் பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் பொழுது போக்கிக் கொண்டிருந்தனர். டாம், ஓர் அறையில் ஒரு மூலையில், தன் பெட்டியை வைத்துக்கொண்டு தனியே அமர்ந்திருந்தான்.

அந்தக் கிடங்கின் மற்றோர் அறையிலே ஐம்பது, அறுபது ஸ்திரீகள் அடைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் சிறு பெண்கள் முதல் கிழவிகள் வரை இருந்தனர். அந்த அறையில் ஒரு மூலையிலே தாயும் மகளுமாக இருவர் இருந்தனர். அவர்கள் மிகவும் அழகுள்ளவர்கள். மற்ற நீகிரோக்களைப்போல முழுதும் கருமையாயிராமல், அவர்கள் ஓரளவு வெண்மை நிறமாயிருந்தனர். அவர்கள் நல்ல பெரிய மனிதர் வீட்டில் வளர்ந்தவர்கள் என்று தோற்றத்திலேயே தெரிந்தது. இருவரும் படித்தவர்கள். அவர்களில் மகளுக்குப் பதினைந்து வயதிருக்கும். அவள் பெயர் எமிலின். அவளைப் பார்த்து, இரவில் சிறிது நேரமாவது கண்களை மூடி உறங்கும்படி தாய் அடிக்கடி சொல்லிவந்தாள் 'எனக்கு உறக்கம் எப்படி வரும்? இன்று இரவில்

மாட்டும் தானே நாம் இருவரும் ஒன்றாக இருப்போம்! நாளைச் சந்தையிலே உன்னை எவன் வாங்கப் போகிறானோ, என்னை எவன் வாங்கப் போகிறானோ?' என்று மகள் சொல்லி வேதனைப்பட்டாள்.

மறுநாள் காலை கிடங்கு முழுதும் தடபுடலாக ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன. சந்தையில் விற்பதற்காக வியாபாரிகள் அடிமைகளைத் தயார் செய்து கொண்டிருந்தனர்.

அமெரிக்காவிலேயே நியூ ஆர்லியன்ஸில் நடந்த சந்தைதான் அடிமைச் சந்தைகளிலே மிகப் பெரியது. அங்கு அதிகாலையிலிருந்தே அடிமைகள் கூட்டம் கூட்டமாக வந்து குவிந்து கொண்டிருந்தனர். டாமும் அகஸ்டின் பிரபுவின் மற்ற அடிமைகளும் ஒரு பக்கத்தில் தனியாக நிறுத்தப்பட்டிருந்தனர். எமிலினும் அவளுடைய தாயும் வேறொரு பக்கத்தில் நடுங்கிக் கொண்டே நின்றனர்.

திடீரென்று குள்ளமான முரடன் ஒருவன் டாமிடம் வந்து, அவனை ஏற இறங்கப் பார்த்தான். மாடுகளைப் பார்ப்பதுபோல் அவனுடைய பற்களைப் பிடித்துப் பார்த்தான். சட்டையைக் கழற்றச் சொல்லி, அவன் உடலின் தசை நார்களைக் கவனித்தான். டாமைப் பற்றிய விவரங்களையும் அவன் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

ஏலம் தொடங்கிவிட்டது. டாமை அந்த முரடனே விலைக்கு வாங்கினான். எமிலினையும் அவனே வாங்கினான். அவளுடைய தாயை வேறொரு பெரிய மனிதர் வாங்கிச் சென்றார். விரைவிலே வியாபாரிகள் தாங்கள் வாங்கிய அடிமைகளைக் கூட்டம் கூட்டமாக நடத்திக் கொண்டு சென்றனர்.

14. டாமின் புதிய யசமானன்

மறுபடி டாம் ஒரு கப்பலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தான். அவனுடைய கைகளிலும் கால்களிலும் சங்கிலிகள் மாட்டப்பட்டிருந்தன. அவன் அமர்ந்திருந்த கப்பல் மிகவும் சிறியது. அந்தக் கப்பலுக்குக் 'கொள்ளைக்காரன்' என்று பொருத்தமாகவே பெயர் வைக்கப்பட்டிருந்தது.

டாமை விலைக்கு வாங்கிய முரடனின் பெயர் சைமன் லெகிரி. இந்த லெகிரியைப்போல் கொடுமையானவரை அமெரிக்காவில் காண்பதே அரிது. டாமுடன் சேர்த்து அவன் எட்டு அடிமைகளை விலைக்கு வாங்கியிருந்தான்.

லெகிரி டாமின் பெட்டியைத் திறந்து பார்த்தான் அதில் அகஸ்டின் அளித்திருந்த நல்ல உடைகள் பல இருந்தன. அவற்றுடன், குதிரை லாயத்தில் வேலை செய்யும்போது டாம் அணியக்கூடிய பழைய உடைகளும் இருந்தன. லெகிரி டாமின் விலங்குகளைக் கழற்றிவிட்டு, பழைய உடைகளை அணிந்துகொள்ளும்படி கூறினான். உடனே டாம், எழுந்து சென்று, தன் புதிய உடைகளைக் கழற்றிவிட்டு, பழையவற்றை அணிந்துகொண்டு, திரும்பிவந்தான். அவனுடைய கால்சட்டைப் பையில் சிறு வேதப்புத்தகம் ஒன்றை அவன் நினைவோடு எடுத்து வைத்துக்கொண்டிருந்தான். ஆனால் பெட்டியில் தோத்திர கீதங்கள் அடங்கிய நூல் ஒன்றிருந்தது. லெகிரி பெட்டி முழுவதையும் சோதனை செய்தான். அதில் குழந்தை ஈவா

டாமுக்குப் பரிசாக அளித்த சில பொருள்கள் இருந்தன. அவைகளையெடுத்து அவன் ஆற்றில் எறிந்து விட்டான். பிறகு தோத்திர கீதங்களைக் கையில் வைத்துக்கொண்டு, 'நீ சமயப்பற்று மிகுந்தவனோ?' என்று கேட்டான்.

'ஆம், யசமான்!' என்று டாம் சொன்னான்.

'இதெல்லாம் எனக்குப் பிடிக்காது! என்னுடைய இடத்தில் கூச்சலிடுவது, பிரார்த்தனை செய்வது, கீதங்கள் பாடுவது முதலியவைகளை நான் அனுமதிப்பதில்லை. இனிமேல் எச்சரிக்கையாயிரு! நான்தான் உனக்கு மாதாகோயில், தெரிந்துகொள்!'

டாம் மறுமொழி ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் அவனுடைய உள்ளம் 'இல்லை'யென்று கூறிற்று.

டாமின் பெட்டியைத் தூக்கிக்கொண்டு லெகிரி நடந்து சென்றான். நீகிரோவர்கள் நல்ல உடைகளை உடுத்துவது அவனுக்குப் பிடிக்காது. அவன் டாமின் சட்டைகளையும், கால்சட்டைகளையும் கப்பலில் இருந்த ஒருவனுக்கு விற்றுவிட்டான். பெட்டியையும் ஏலத்தில் விற்றுவிட்டான். பிறகு மறுபடியும் டாமிடம் சென்று, 'இப்பொழுது நீ அணிந்திருக்கிற உடைகளைக் கவனமாக வைத்துக்கொள். ஒரு வருடத்திற்கிடையே உனக்கு வேறு துணிகள் வாங்கித் தரமாட்டேன்!' என்று சீறிப் பேசினான். அவனுடைய நடையும், உடையும், பேச்சும் அருவருப்பாக இருந்தன. டாம் வருத்தத்துடன் தலைகுனிந்து நின்றான்.

அடுத்தாற்போல், லெகிரி பெண்கள் இருந்த இடத்திற்குத் திரும்பினான். அங்கே எமிலினும் வயது முதிர்ந்த ஒரு ஸ்திரீயும் இருந்தனர். லெகிரி, எமிலினின் கன்னத்தில் தட்டி, 'உற்சாகமாயிரு!' என்று,

கூறினான். அவள் அருவருப்புடன் வேறு பக்கம் திரும்பினாள். 'இதெல்லாம் இங்கே நடக்காது, பெண்ணே! நான் பேசும்பொழுது, என்னிடம் மகிழ்ச்சியோடு பேசவேண்டும்!' என்று உரக்கக் கூறிவிட்டு, அவன் தன் கைமுஷ்டியை வெளியே நீட்டிக் காட்டினான். 'எல்லா அடிமைகளும் இதை நன்றாகப் பாருங்கள்' இது இரும்பு போன்றது! அடிமைகளை அடித்து அடித்து, இது இரும்பாகிவிட்டது! நீங்கள் எச்சரிக்கையா யிருக்கவேண்டும். எனக்கு இரக்கம் என்பதே கிடையாது!' என்றும் அவன் பயமுறுத்திவிட்டுச் சென்றான். பெண்கள் இருவரும் அஞ்சி நடுங்கினர். மற்றவர்களும் நம்பிக்கையிழந்து, கண்கள் கலங்கிக் கீழே அமர்ந்திருந்தார்கள்.

லெகிரி மது அருந்தச் சென்றான். கப்பலிலிருந்த மதுக்கடையில் நின்றுகொண்டிருந்த ஒருவரிடம், 'இந்த அடிமைகளை அதட்டி உருட்டினால்தான் அவர்கள் அடங்கி யிருப்பார்கள்! கொஞ்சம் இடம் கொடுத்துவிட்டால், அவர்கள் தலைக்குமேல் ஏறி விடுவார்கள்!' என்று சொல்லி, தன்னைத் தானே மெச்சிப் பேசிக்கொண்டான். மேலும் அவன் கூறியதாவது: 'அதோ நிற்கும் டாம் என்பவன் சரியான ஆளாகத் தோன்றுகிறது. 1200 டாலர் கொடுத்து அவனை வாங்கினேன். விலை அதிகம்தான். இருந்தாலும், அடிமைகளை மேய்த்து அடக்குவதற்கு அவன் பயன்படுவான். அவனை ஒரு மேஸ்திரியாக்க எண்ணியிருக்கிறேன். அவன் தான் படித்தவன் என்று எண்ணிக்கொண்டிருக்கிறான். அடிமைகளுக்குப் படிப்பே கூடாது. அவர்களை நடத்தவேண்டிய விதமாக நடத்தவேண்டும்... அதோ அமர்ந்திருக்கும் வயதான

ஸ்திரீ புதோ நோயுற்றிருக்கிருள். இன்னும் ஓரிரண்டு ஆண்டுகளாயினும் அவள் வேலை செய்யக்கூடும். அதற்குப் பின்னல் அவள் செத்தாலும் கவலையில்லை. நோயாயிருந்தாலும், சுகமாயிருந்தாலும், என்னிடம் வேலை செய்துதான் ஆகவேண்டும்!'

இவ்வவாறு கூறினன் லெகிரி.

இடையில் அந்த ஸ்திரீயும் எமிலினும் மெதுவாகப் பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் இருவருக்கும் சேர்த்து விலங்கிடப்பட்டிருந்தது.

அந்த ஸ்திரீ வெள்ளையருக்கும் நீகிரோவருக்கும் பிறந்தவள். அவள் தன் வரலாற்றை எமிலினிடம் சொல்லி அழுதுகொண்டிருந்தாள். அவளுடைய கணவன் ஒரு கருமான். அவளுக்கு நான்கு குழந்தைகள் இருந்தார்கள். அவளுடைய யசமானர், இயற்கையில் நல்லவராக இருந்தபோதிலும், அவர் நோய்வாய்ப்பட்டிருந்ததால், அவளை அவசரமாக விற்றுவிட்டார். அவள் தன் கணவனைக்கூடப் பார்க்க அனுமதிக்கப்படவில்லை. எமிலின் அவளுக்கு ஆறுதல் சொன்னுள். ஆனல் அவர்கள் இருவருக்கும் லெகிரியிடம் அளவற்ற அச்சமிருந்தது. அவனைப் பற்றிப் பேசவே அவர்கள் நடுங்கினர்கள்.

கப்பல் ஆற்றின் கரையிலிருந்த ஒரு நகரத்தை அடைந்தது. லெகிரியும் அவனுடைய அடிமைகளும் கப்பலைவிட்டு இறங்கினர்கள்.

நகரத்திலிருந்து லெகிரியின் விவசாயப் பண்ணைக்குச் செல்ல ஒருநாள் பயணமாகும். லெகிரிக்காக அவனுடைய குதிரைவண்டி வந்து காத்திருந்தது. எமிலினையும், அவளுடன் இருந்த ஸ்திரீயையும் வண்டியிலேற்றிக்கொண்டு, லெகிரி முன்னல் சென்

...வண்டி வீட்டு வாசலை நெருங்கியதும்
வேட்டை நாய்கள் சீறிக்கொண்டு வந்தன...

ருன். வண்டிக்குப் பின்னுல் மற்ற அடிமைகள் எல்லோரும் நடந்து சென்ருர்கள்.

பாதை கரடுமுரடாக இருந்தது. சுற்றுப் பக்கங்களில் நிலமெல்லாம் வனாந்தரம் போலக் காணப்பட்டது. அந்தப் பாதையையும், வனாந்தரத்தையும்

கண்ட அடிமைகள், தாங்கள் எத்தகைய இடத்திற்குச் செல்லுகிறோம் என்பதை ஓரளவு தெரிந்துகொண்டார்கள்.

வழியில் இடையிடையே லெகிரி எமிலினிடம் பேச்சுக் கொடுத்தான். ஒரு சமயம், 'கண்ணே, சீக்கிரம் வீடு வந்துவிடும்!' என்று சொன்னான். மற்றொரு சமயம், 'நீ ஏன் காதுகளில் டோலக்கு எதுவும் அணிந்துகொள்ளவில்லை?' என்று பிரியமாகக் கேட்டான். அவன் தன்னை அடித்தாலும் தாங்கிக்கொள்ளலாம், ஆனால் அவன் கொஞ்சிப் பேசுவதைத் தாங்க முடியவில்லையே என எமிலின் வருந்தினாள். 'வீட்டுக்குப் போனபின், உனக்குக் கம்மல்களும் டோலக்குகளும் தருகிறேன்! உன்னை நல்ல முறையில் நடத்துகிறேன். ஆனால் நீயும் முறையாக நடந்துகொள்ள வேண்டும். நான் சொல்லுவதை யெல்லாம் கேட்க வேண்டும்!' என்றும் அவன் கூறினான்.

பருத்திக் காட்டினருகில் லெகிரியின் வீடு அமைந்திருந்தது. அது மிகப் பெரியதாக இருப்பினும், பாழடைந்திருப்பதாகத் தோன்றிற்று. முன் புறத்திலும், பக்கங்களிலும் கட்டைகளும் குச்சிகளும் சிதறிக் கிடந்தன. எங்கும் குப்பையும் கூளமுமாக இருந்தது. வண்டி அந்த வீட்டு வாசலை நெருங்கியதும், வீட்டிலிருந்து நான்கு வேட்டை நாய்கள் சீறிக் கொண்டு வெளியே பாய்ந்து வந்தன. அவைகளுக்குப் பின்னால் தடித்த உடல்களையுடைய இரண்டு அடிமைகள் ஓடிவந்து, அவைகளைப் பிடித்துக்கொண்டார்கள். லெகிரி கீழே இறங்கி நாய்களைத் தட்டிக்கொடுத்தான். 'அடிமைகளே! இந்த நாய்களைப் பார்த்துக்கொள்ளுங்கள்! இங்கிருந்து நீங்கள் தப்பியோட முயன்றால்,

இவைகளுக்கு நீங்கள் இரையாகிவிடுவீர்கள்!' என்று அவன் உரக்கக் கத்தினன். வீட்டிலிருந்து ஓடிவந்த அடிமைகளில் ஒருவனின் பெயர் **சம்போ,** மற்றவன் பெயர் **கிம்போ.** அவர்கள் இருவரும் லெகிரிக்கு வலக் கையாகவும், இடக் கையாகவும் விளங்கி வந்தவர்கள். அவர்கள் கொடுமைக்கு எல்லே கண்டவர்கள். முரட்டுத்தனத்திலும் மூர்க்கத்திலும் அவர்கள் வேட்டை நாய்களைப் போன்றவர்கள். அவ்வாறு அவர்களைப் பயிற்சி செய்து வைத்திருந்தான் லெகிரி. அவர்கள் அவன் என்ன சொன்னலும் செய்து முடிப்பார்கள். அவர்கள் உருவத்தில் மனிதர்களாக இருந்தாலும், அவர்களுடைய உள்ளங்கள் கல்லாகிவிட்டன. அடிமைகளை அடக்கி ஒடுக்குவதில் அவர்கள் நிகரற்றவர்கள் என்று பெயர் வாங்கியவர்கள்.

அவர்களிடம் லெகிரி, தோட்டக் காடுகளில் வேலே முறையாக நடக்கின்றதா என்று விசாரித்தான். அவர்கள், 'ஆம், யசமான்!' என்று கூறினர்கள்.

'நீங்கள் இந்த அடிமைப் பயல்களைக் கூட்டிக் கொண்டுபோய், அவர்கள் தங்கவேண்டிய இடங்களைக் காட்டுங்கள். சம்போ, உனக்காக ஒரு ஸ்திரீயைக் கொண்டு வந்திருக்கிறேன்! அவளே நீ மனைவியாக வைத்துக்கொள்!' என்று சொல்லி, லெகிரி தான் அழைத்து வந்திருந்த ஸ்திரீயைச் சம்போவிடம் பிடித்துத் தள்ளினன்.

அந்த ஸ்திரீ நடுங்கிக்கொண்டு பின்னல் ஓடி வந்து, 'என் கணவர் நியூ ஆர்லியன்ஸில் இருக்கிருர்' என்று கூவினுள்.

'அதனுல் என்ன? அவனுக்குப் பதிலாகத்தான் நான் வேருெரு கணவனைக் கொடுத்துவிட்டேன்!

உன் புரூச்செல்லாம் இங்கே பலிக்காது!' என்று உரக்கக் கத்திக்கொண்டு, லெகிரி சவுக்கை ஓங்கினுன்.

அடுத்தாற்போல் அவன் எமிலினேப் பார்த்து, 'நீ வீட்டினுள்ளே என்னுடன் இருக்கலாம்!' என்று கூறினுன்.

பின்னல் அந்த இரண்டு பெண்களுக்கும் என்ன நேர்ந்ததென்பது டாமுக்குத் தெரியாது. ஏனெனில், சம்போ அவன் கழுத்தைப்பிடித்துத் தள்ளிக்கொண்டே சென்ருன். வீட்டிலிருந்து வெகு தூரத்திற்கப்பால், வரிசை வரிசையாகச் சில குடிசைகள் இருந்தன. அவைகளைப் பார்த்தவுடன், டாம் மிகவும் வருத்தமடைந்தான். தனக்கென்று தனியான ஒரு குடிசை இருக்குமென்று அவன் எண்ணிக் கொண்டிருந்தான். ஒழிந்த நேரத்தில் வேதப் புத்தகத்தைப் படிக்கலாம் என்றும் அவன் எண்ணியிருந்தான். ஆனல் குடிசைகள் பற்பல அடிமைகளைச் சேர்த்து அடைக்கும் தொழுவங்களாகவே இருந்தன.

'நான் இருக்க வேண்டியது எங்கே?' என்று அவன் சம்போவிடம் பணிவுடன் கேட்டான்.

'அதுதான் எனக்கும் தெரியவில்லை! இந்தக் குடிசைகளில் எதிலாவது போய் இருந்துகொள். கூட்டம் பெருகிவிட்டது. என்ன செய்வதென்று எனக்கும் தெரியவில்லை!' என்ருன் சம்போ.

இரவில் வெகு நேரத்திற்குப் பின்னர் அடிமைகள் வேலை முடிந்து திரும்பிவந்தனர். கிழிந்த உடைகளும், மெலிந்த உடல்களும் கொண்டு, அவர்கள் அசைந்து ஆடி வந்தனர். சூரியன் உதிக்கு முன்பே அவர்கள் வயல்களுக்குச் சென்றவர்கள். அப்பொழுது பருத்தி எடுக்கவேண்டிய காலமாயிருந்ததால், அவர்கள் இரவு

வரை கடுமையாக வேலை செய்ய வேண்டியிருந்த அவர்கள் திரும்பி வந்தபின்பு, அவர்களுக்கு உண காகத் தானியம் கொடுக்கப்பட்டது. அவர்கள் அ திரித்து மாவாக்கி ரொட்டி சுட்டுத் தின்னவேவ யிருந்தது.

டாம் வெகுநேரம் வரை வெளியே குந்தியி தான். பிறகு ஓர் அறைக்குள்ளே நுழைந்து பா தான். அங்கே பல அடிமைகள் களைத்து நொ போய்ப் படுத்திருந்தார்கள். தரையின்மேல் வி தற்குப் பழைய வைக்கோல் கூளங்களைத் தவிர, வே விரிப்பு எதுவுமில்லை. டாமும் வைக்கோலின் படுத்து, கிழிந்த கம்பளியொன்றைப் போர்த் கொண்டான்.

உறங்கும்பொழுது அவன், ஏரிக்கரையில் வுடன் அமர்ந்திருப்பது போலவும், அவள் இனி யான குரலில் வேதப் புத்தகத்தைப் படித்துக் கா வதுபோலவும் கனவு கண்டான். கனவு முழுவ மிகவும் இனிமையா யிருந்தது. ஈவா தன்னை இன் மறக்காமலிருக்கிருள் என்று அவன் ஆறுதலை தான்.

15. மண்ணுலகின் கொடுமைகள்

டாம் தனக்குரிய வேலைகளைத் தெரி கொண்டு, முறையாகச் செய்துவந்தான். எந்த வே யையும் அவன் ஆர்வத்தோடும் கருத்தோடும் ெ வது வழக்கம். சுறுசுறுப்பும் அமைதியும் அவனு

இயற்கையாக அமைந்த பண்புகள். ஆனால் அவன் இருந்த சூழ்நிலை அவனுக்கு மிகுந்த வேதனையை உண்டாக்கியது. அடிமைகள் அடிக்கடி சவுக்கால் அடிக்கப்பட்டனர். நோயுற்றவர்களையும் களைப்படைந் தவர்களையும் மேஸ்திரிகள் அடித்து அடித்தே வேலை வாங்கினார்கள். ஈவு இரக்கமற்ற, மிருகத்தனமான மனிதர்களிடையே தான் சிக்கிக்கொண்டதை அவன் உணர்ந்திருந்தான். ஆயினும் ஆண்டவனின் அருளில் அவனுக்கு முழு நம்பிக்கை இருந்தது. 'நீ நீரைத் தாண்டிச் செல்லும்போது, நான் உன்னுடனே இருக்கிறேன்...நீ நெருப்பினூடே செல்லும்போது, நெருப்பு உன்னைச் சுடாது!' என்ற வேத வாக்கியத்தை அவன் அடிக்கடி நினைத்துக்கொண்டான்.

டாமின் சிந்தனைகளைப் பற்றி லெகிரி தானாக யூகித்துக்கொண்டான். டாம் முதல்தரமான வேலையாள் என்றும் அவன் கருதினான். ஆயினும், டாம் உத்தமனாயிருந்ததால், லெகிரி அவனை வெறுத்தான். அத்துடன் மற்ற அடிமைகளைக் கொடுமையாக நடத்துவதில் டாம் மிகவும் வருத்தமடைந்தான். அவன் வாய் திறந்து எதுவும் சொல்லாவிட்டாலும், அவனது கருத்தை லெகிரி உணர்ந்திருந்தான்.

டாமுக்கு உயர்ந்த பதவியைக் கொடுக்கவேண்டுமென்றால், அவன் எந்தக் கொடுமையையும் துணிந்து செய்ய முன்வரவேண்டும்; இரக்கமற்ற உள்ளம் கொண்டவனே மேஸ்திரி வேலைக்கு அருகதையுள்ளவன் என்பது லெகிரியின் எண்ணம்.

ஒருநாள் வயல்களில் டாம் பருத்தி எடுத்துக் கொண்டிருந்தான். அவனோடு நியூ ஆர்லியன்ஸிலிருந்து வந்த, ஸ்திரீயான லூஸி என்பவள் அவனரு

கில் வேலை செய்துகொண்டிருந்தாள். அவள் மிக பலவீனமாயிருந்ததால், தள்ளாடித் தள்ளாடி விழு கொண்டிருந்தாள். ஆயினும் ஒவ்வோர் அடிமை ஒவ்வொரு நாளும் குறித்த அளவு பருத்தி எடுத்த வேண்டுமென்று விதிக்கப்பட்டிருந்தது. டாம் அ நிலையைத் தெரிந்துகொண்டு, அவளுக்கு உ செய்ய முன்வந்தான். அதற்காகத் தான் பறித்திரு பருத்தியில் ஒரு பகுதியை அவள் கூடையிலே வீ போட்டான்.

அவள் மெல்லிய குரலில், 'வேண்டாம், வே டாம்! இதனால் உனக்கு ஆபத்து வரும்!' என் சொன்னாள்.

அந்தச் சமயத்தில், சம்போ அங்கு வந்து டான். லூஸி தன்னோடு வாழ இசையவில்லை எ தால், ஏற்கெனவே அவன் வருத்தம் கொண்டிருந்தா அவன் 'என்ன, லூஸி! வயலில் விளையாடவா செ கிறாய்?' என்று கூறிக்கொண்டே அவளைப் பூட் காலால் உதைத்துத் தள்ளிவிட்டு டாமின் முகத்த சவுக்கால் அடித்தான். டாம் வேதனையைத் தாங்கி கொண்டு, பொறுமையுடன் மறுபடி தன் வேலையை கவனிக்கலானான். ஆனால் லூஸி எழுந்திருக் வலிமையின்றிக் கீழே சுருண்டு கிடந்தாள். அவளு குத் தன் நினைவும் இல்லை.

கொடிய உள்ளமும், கொடிய உருவமும் படை திருந்த சம்போ, 'இவளுக்கு இதோ புத்தி வரும்ப செய்கிறேன், பார்!' என்று சொல்லிக்கொண்டே, த சட்டையிலிருந்து ஓர் ஊசியை எடுத்தான். கீழே கிடந்த லூஸியின் உடலில் அவன் அதைக்கொண்டு குத்தினான். உடனே அவள் துடித்து, வீரிட்டு

கொண்டு, மெல்ல எழுந்து உட்கார்ந்தாள். 'எழுந்திரு, மிருகமே! எழுந்து வேலை செய்! இல்லாவிட்டால், மறுபடி ஊசியை உடலில் இறக்குவேன்!' என்றான் அந்தப் பாவி.

லூஸி எப்படியோ எழுந்து நின்றாள். பயத்தால் அவளுடைய உடலெல்லாம் நடுங்கிற்று. பயத்தினால் ஏற்பட்ட பலத்தால், அவள் சிறிது நேரம் மளமள வென்று பருத்தியைப் பறித்துக் கொண்டிருந்தாள். 'ஒழுங்காக வேலை செய்துகொண்டிரு! இல்லாவிட்டால், இன்றிரவு உனக்குச் சாவுதான்!' என்று எச்சரிக்கை செய்துவிட்டுச் சென்றான் சம்போ.

'அந்தச் சாவு இப்பொழுதே வந்தாலாகாதா?' என்று லூஸி மெல்ல முணுமுணுத்தது டாமின் செவிகளில் கேட்டது. 'ஆண்டவரே! இன்னும் எவ்வளவு காலம் இப்படிக் கழியும்? கர்த்தரே! நீர் ஏன் எங்களுக்கு உதவி செய்யவில்லை?' என்று அவள் வருந்தினாள்.

டாம் மீண்டும் அவள் பக்கம் நெருங்கி, தன் கூடையிலிருந்த பருத்தியைக் கொத்துக் கொத்தாக அள்ளி, அவளுடைய கூடையிலே போட்டுவிட்டுத் திரும்பினான்.

அவனுடைய அன்பைக் கண்டு உள்ளம் உருகிய லூஸி, 'ஐயோ, உனக்கு ஆபத்தல்லவா! அவர்கள் பார்த்துவிட்டால், உன்னை என்ன செய்வார்கள், தெரியுமா?' என்று பதறிக்கொண்டே கேட்டாள்.

'கஷ்டத்தை உன்னைவிட நான் அதிகம் தாங்குவேன்!' என்றான் டாம்.

அன்றிரவு அடிமைகள் எல்லோரும், தாங்கள் பறித்த பருத்தியைப் பிரம்புக் கூடைகளிலே சுமந்து

கொண்டு, நிறுக்குமிடத்தை நாடிச் சென்றனர். அங்கே லெகிரி சம்போவிடமும், கிம்போவிடமும் பேசிக்கொண்டிருந்தான். அப்பொழுது சம்போ, 'யச மான், இந்த டாமைக் கொஞ்சம் கவனிக்கவேண்டும்!' என்று சொன்னான். 'அவன் தன் கூடையிலிருந்த பருத்தியை லூஸியின் கூடையில் அள்ளி அள்ளிப் போடுகிறான். அவனால் எல்லா நீகிரோக்களும் கெட்டுப்போவார்கள். அவன் சாதாரணமான ஆளாக இல்லை!' என்றும் தெரிவித்தான்.

'கறுப்பு நாய் அப்படியா செய்கிறான்? அவன் உடம்பை ஒருமுறை பிடித்துவிட வேண்டியதுதான்!' என்றான் லெகிரி.

'பிடித்துவிடுதல்' என்றால் என்ன என்பதை அந்த இரண்டு நீகிரோவர்களும் அறிவார்கள். அதைக் கேட்டு அவர்கள் எக்களிப்போடு சிரித்தார்கள்.

அடிமைகள் ஒவ்வொருவராகப் பருத்திக் கூடையைத் தராசில் கொண்டுவந்து வைத்தனர். ஒவ்வொரு கூடையும் எடை போடப்பட்டது. லெகிரியே ஒவ்வொருவர் பெயரையும், எடையையும் ஒரு கரும் பலகையில் குறித்துக்கொண்டான். டாமின் கூடையும் குறித்த எடைப்படி சரியாயிருந்தது. லூஸியின் கூடை சரியான எடையிருக்குமா என்பதை அவன் ஆவலுடன் கவனித்துக் கொண்டிருந்தான்.

லூஸி தள்ளாடிக்கொண்டே கூடையைக் கொணர்ந்து தராசில் வைத்தாள். அதுவும் குறித்த அளவு இருந்தது. இருந்தபோதிலும் லெகிரி, அது குறைவாயிருந்தது போலப் பாவனை செய்துகொண்டு, கோபத்தோடு ஊளையிடத் தொடங்கினான்: 'சோம்பேறிக் கழுதை! இன்றைக்கும் மறுபடி குறைவாயிருக்

கிறது! நீ ஒரு பக்கம் ஒதுங்கி நில்லு! இப்பொழுதே உனக்குப் பாடம் கற்பித்தால்தான், நீ திருந்துவாய் !'

அவளுடைய ஆவி துடித்தது. ஏது செய்வது என்று அறியாமல், அவள் ஒரு பக்கமாகத் தரையிலே அமர்ந்துவிட்டாள்.

லெகிரி உள்ளுக்குள்ளே மகிழ்ச்சியடைந்து, 'டாம், இங்கே வா!' என்று கூறினன். அவன் உடனே முன்னல் வந்து நின்ருன். லெகிரி அவனைப் பார்த்துப் பேசலானுன்: 'நான் உன்னை விலைக்கு வாங்கியது சாதாரண வேலைக்காக அல்ல என்பதை உனக்கு முன்னமேயே சொல்லியிருக்கிறேன். உனக்கு மேலான பதவி கொடுக்க எண்ணியிருக்கிறேன். நீ இந்த அடிமைகளை வைத்து வேலை வாங்கவேண்டும். அந்த வேலையை இன்று, இந்த இரவிலேயே, நீ தொடங்கிவிடுதல் நல்லது. இதோ இருக்கிற இந்தப் பெண்பிள்ளையை அழைத்துப்போய், நீ சவுக்கால் அடிக்கவேண்டும்! சவுக்கால் அடிப்பதை நீ எத்தனையோ முறை பார்த்திருப்பதால், உனக்கு அதைச் சொல்லித்தர வேண்டியதில்லை!'

'யசமான், என்னை மன்னிக்க வேண்டுகிறேன்! எனக்கு இந்த வேலையைக் கொடுக்க மாட்டீர்கள் என்றும் நம்புகிறேன். இந்த வேலை எனக்குப் பழக்கமில்லை. நான் ஒருபோதும் அடித்ததில்லை—என்னல் அது முடியாது!'

உடனே லெகிரி கையில் சவுக்கை எடுத்து ஓங்கிக்கொண்டே, 'உனக்கு முன்னல் தெரியாத பல விஷயங்களை நீ இங்கே கற்றுக்கொள்வாய். இதோ கற்றுக்கொடுக்கிறேன், பார்!' என்று சொல்லி, அவன் முகத்தில் ஓங்கி அடித்தான். பிறகும் அவன் உடல்

முழுதும் மாறி மாறி அடித்துக்கொண்டேயிருந்தான்! 'இப்பொழுதும் நீ அடிக்க முடியாது என்று சொல்லு வாய்?' என்று அவன் ஊளையிட்டான்.

டாம், முகத்தில் வழிந்த இரத்தத்தை ஒரு கையால் துடைத்துக்கொண்டே, 'ஆம், யசமான்! நான் இரவும் பகலும் வேலை செய்யக் காத்திருக் கிறேன். எனக்கு உயிருள்ளவரை, மூச்சுள்ளவரை, உழைக்கத் தயாராயிருக்கிறேன். ஆனால் நீங்கள் இப்பொழுது சொல்லும் வேலையைச் செய்வது நியாய மில்லை; யசமான், இதை நான் செய்ய மாட்டேன்! செய்யவே மாட்டேன்!' என்று கூறினான்.

டாம் அடக்க ஒடுக்கத்துடன் அமைதியாகவே பேசினான். அவனுடைய குரல் இனிமையாகவும், மரியாதையுள்ளதாகவும் இருந்தது. அவன் உறுதி யாக உள்ளத்திலுள்ளதைப் பேசியபோதிலும், லெகிரி அவன் கோழை என்றும், அவனை எளிதில் அடக்கி விடலாம் என்றும் கருதினான். ஆயினும் அங்கிருந்த அடிமைகள் அவன் 'மாட்டேன்' என்று இறுதியாக உறுதியுடன் கூறியதை நன்கு புரிந்துகொண்டனர். மேல்விளைவு என்னவாகுமோ என்று அவர்கள் ஆச்சரி யத்துடன் கவனித்துக் காத்துக் கொண்டிருந்தனர். அனைவரும் மூச்சுக்கூட விடவில்லை. லூஸி கைகளைப் பிசைந்துகொண்டு, 'ஐயோ, கடவுளே!' என்று முன கிக்கொண்டு, அயர்ந்து கிடந்தாள்.

லெகிரி ஒரு நிமிடம் வியப்போடு திகைத்து நின் றான். பிறகுதான் வாய் திறந்து பேசலானான் :

'என்னடா, கறுப்பு நாயே! பெரிய ஞானிபோலப் பேசுகிறாய்? நான் சொல்வதைச் செய்வது நியாயம் இல்லை என்று பேசுகிறாய்? நியாயம் ஏது என்று

சிந்திக்க உங்களுக்கு என்னடா உரிமையிருக்கிறது? இதற்கெல்லாம் நான் உடனே முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்! நீ உன்னை யார் என்று எண்ணிக்கொண் டாய்? நியாயம், தப்பு என்று எனக்குச் சொல்வதற்கு, நீ மிகவும் பெரிய மனிதனுகிவிட்டாய் போலிருக்கிறது! என்னடா பேசாமல் நிற்கிருய்? இந்தப் பெண்பிள் ளையை அடிப்பது பாவமாடா?'

'நான் அப்படித்தான் எண்ணுகிறேன், யசமான்!' என்ருன் டாம். 'ஐயோ, பாவம்! அவள் நோயுற்று மெலிந்திருக்கிருள்; அவளை அடிப்பது மிகவும் கொடுமையாகும். அதை நான் ஒருபோதும் செய்ய முடியாது. யசமான், நீங்கள் விரும்பினுல், என்னைப் பிடித்துக் கொன்றுவிடுங்கள்! அவளுக்கு எதிராக நான் கையை நீட்டமாட்டேன்! அவளை அடிப்பதற்கு முன், நானே இறக்கத் தயாராயிருக்கிறேன்!' என்றும் அவன் சொன்ஞன்.

அவனுடைய பேச்சிலிருந்த உறுதியை எல்லோ ரும் புரிந்துகொண்டனர். அவனை அசைக்க முடியாது என்பதை உணர்ந்துகொண்டனர். லெகிரி கோபத் தால் கொதிப்படைந்தான். அவன் உடலெல்லாம் ஆடிற்று. காட்டு விலங்குகளைப்போல அவன் கண்கள் எரிந்து கொண்டிருந்தன. ஆயினும் அவன் உடனே டாம் மீது பாயாமல், அவனை ஏளனம் செய்யத்தொடங் கிஞன்: 'பாவிகளாகிய நம்மைத் திருத்துவதற்குப் புனிதமான நாயொன்று வந்திருக்கிறது! பெரிய ஞானி, கனவான் வந்திருக்கிருர், நம்முடைய பாவங் களை எடுத்துக்காட்ட! அட, போலித் துறவியே! உன் வேதப் புத்தகத்தில், "ஊழியக்காரர்களே, உங்கள் யசமானர்களுக்குப் பணிந்து நடவுங்கள்!" என்று

சொல்லியிருப்பதை நீ படித்ததில்லையா? நான்தானே உன் யசமான்? 1,200 டாலர் ரொக்கம் கொடுத்து உன்னை நான்தானே வாங்கிவந்தேன்? நீ என் அடிமையல்லவா? உன் உடலும் ஆன்மாவும் எனக்கல்லவா சொந்தம்?' இவ்வாறு சொல்லிக்கொண்டே, அவன் காலில் அணிந்திருந்த கனமான பூட்ஸால், வெறியோடு டாமை எற்றி உதைத்தான்.

தூரத்திலே போய் உருண்டு விழுந்த டாம் உடல் வலியையெல்லாம் பொருட்படுத்தாமல், மெல்ல

லெகிரி வெறியோடு டாமை எற்றி உதைத்தான்...

எழுந்து நின்றான். லெகிரி கூறிய ஒரு சொல்லினால், அவன் முகம் சற்று மலர்ச்சியடைந்தது. அவனுடைய ஆன்மாவில் ஒரு வெற்றிக்குறி தோன்றிற்று. அவன் திடீரென்று தலை நிமிர்ந்து நேராக நின்றுகொண்டான். அவன் முகத்திலிருந்து கண்ணீரும் உதிரமும் கலந்து வழிந்துகொண்டிருந்தன.

'இல்லை, யசமான்! இல்லை, இல்லை, இல்லை! என் ஆன்மா உங்களுக்குச் சொந்தமில்லை! அதை நீங்கள் விலைக்கு வாங்கவில்லை, அதை உங்களால் வாங்கவும் முடியாது! என் ஆன்மா என் பெருமான் ஏசுநாதருக்கே உரியது! நீங்கள் **எனக்குக்** கேடு செய்யவே முடியாது!' என்று முழங்கினான் டாம்.

'என்னால் முடியாதா? அதையும் சீக்கிரமே பார்த்துவிடுவோம்!' என்று அலட்சியமாகச் சீறினான் லெகிரி. அவன், 'அடே, சம்போ! அடே, கிம்போ! இந்த நாயைக் கொண்டுபோய்ச் சரியான பாடம் கற்பியுங்கள்! ஒரு மாதத்திற்கு இடையில் இவன் எழுந்திருக்க முடியாதபடி செய்யுங்கள்!' என்றும் அலறினான்.

அரக்கர்களைப் போன்ற இரு நீகிரோவர்களும், மிகுந்த உற்சாகத்துடன், டாமைப் பற்றி இழுத்துக் கொண்டு சென்றனர். லூஸி, என்ன நேரும் என்பதைக் கற்பனை செய்துகொண்டு, கிரீச்சிட்டுக் கத்தினாள். அடிமைகள் அனைவரும், எவ்வித எதிர்ப்புமில்லாமல், கொலைஞர்களைப்போன்ற கொடியோர்களுடன் செல்லும்பொழுது, எழுந்து நின்று கண் கொட்டாமல் அவனையே பார்த்துக்கொண்டிருந்தனர்.

16. ஆன்மாவுக்கு அழிவில்லை!

நள்ளிரவு. பாழடைந்த கொட்டகை ஒன்றில், டாம் தனியே தவித்துக் கொண்டிருந்தான். அவன் உடலெல்லாம் அடிபட்ட காயங்களிலிருந்து உதிரம் வடிந்துகொண்டிருந்தது. அங்கு அவனைச் சுற்றிலும், உடைந்த பாண்டங்களும், கழிவுப்பஞ்சும் சிதறிக் கிடந்தன.

அங்கு காற்று இல்லாததால், மிகவும் புழுக்கமாயிருந்தது. புண்களின் எரிச்சல் ஒருபுறமும், கொசுக்களின் கடி ஒரு புறமுமாக டாமைச் சித்ரவதை செய்தன. அவன் இடைவிடாமல் இறைவனைத் துதித்துக் கொண்டே யிருந்தான். 'ஆண்டவரே, கடைசிவரை துன்பத்தைத் தாங்கும் ஆற்றலை எனக்கு அளிக்க வேண்டும். விரைவில் எனக்கு வெற்றியளிக்க வேண்டும்!' என்று அவன் பிரார்த்தனை செய்தான்.

அந்த நேரத்தில் பெண்ணொருத்தி, சந்தடி செய்யாமல், மெதுவாக அங்கே வந்தாள். அவள் பெயர் **கேஸி.** அவளும் ஓர் அடிமை. ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக லெகிரியின் கொடுமைகளை யெல்லாம் தாங்கியவள். அவனால் அவமானப்படுத்தப்பட்டு, அவனைப் பழி வாங்க வேண்டுமென்று பல ஆண்டுகளாய்க் கருதிக் கொண்டிருந்தவள். அவளிடம் லெகிரிக்குக் கொஞ்சம் பயம் இருந்து வந்தது. அவள் சூனியக்காரி யென்றும், தீய தேவதைகளை ஏவிக் கெடுதல் செய்பவள் என்றும் அவன் நம்பியிருந்தான். அவ்வாறு அவன் நம்பும்படி அவள் செய்திருந்தாள். அவள் லெகிரியின்

வீட்டை விட்டு, இரவில் டாமைக் கவனிப்பதற்காக அங்கே வந்து சேர்ந்தாள்.

அவள் கையிலே ஒரு விளக்கு இருந்தது. அதன் உதவியால் அவள் டாம் இருக்குமிடத்தைக் கண்டு கொண்டாள். அவன் ஏதோ முனகிக்கொண்டிருந்தான். அவள், அவன் தலையைச் சற்றுத் தூக்கி, அவன் வாயில் கொஞ்சம் கொஞ்சமாகத் தண்ணீரை ஊற்றினாள். அவனுடைய புண்களிலே களிம்பு ஒன்றைத் தடவினாள். பிறகு அவள் அவனருகில் அமர்ந்து, ஆறுதல் சொன்னாள். தன்னைப் பற்றியும் சில விவரங்கள் சொல்லிவிட்டு, அவள் லெகிரியின் பிடிவாதத்தைப் பற்றியும் எடுத்துச் சொன்னாள்.

'இந்த இடத்திலே நியாயம் என்பதே கிடையாது. இது ஒரு நரகம். அக்கிரமத்தைத் தவிர இங்கு வேறு எதுவும் கிடையாது. லெகிரி விடாக்கண்டன். இந்தத் தடவை நீ பணிந்து கொடுப்பது நல்லது!' என்று அவள் கேட்டுக்கொண்டாள்.

அவளுடைய பேச்சில் உண்மை இருப்பது போல் தோன்றிற்று. ஆனால் டாம் அதற்கு இசையவில்லை. 'நான் எப்படிப் பணியமுடியும்? என் கையாலேயே நான் எப்படிக் கொடுமைகளையும், கொலை பாதகங்களையும் செய்யமுடியும்? மனிதப் பண்புக்கு விரோதமாக நான் எதையும் செய்ய முடியாது! ஆண்டவர் எனக்குத் துணைபுரிவார்' என்று அவன் சொல்லி விட்டான்.

அவள் வெளியே புறப்படும் சமயத்தில், டாம் அவளிடம் தன் வேதப்புத்தகத்தைக் கொடுத்து, அதில் சில பகுதிகளைப் படிக்கச் சொல்லிக் கேட்டான்.

சிறிது நேரத்திற்குப்பின் கேஸி அவனுக்கு மறுபடி

யும் கொஞ்சம் நீர் கொடுத்தாள். தாகத்தால் தவித்துக் கொண்டிருந்த அவனுக்கு இது பேருதவியாகத் தோன்றிற்று. அவள் வெளியேறிய பிறகு, அவன் சற்றே கண்ணயர்ந்தான்.

அன்றிரவு லெகிரி, தன் வீட்டுக் கூடத்தில், மது அருந்திவிட்டு, ஏதோ யோசித்துக்கொண்டு அமர்ந்திருந்தான். வயல்களில் பருத்தி மிக அதிகமாக விளைந்திருந்தது. அதை உடனே எடுப்பதற்கு ஏராளமான ஆட்கள் தேவையா யிருந்தார்கள். இந்த நேரத்தில் நல்ல வேலைக்காரனாகிய டாமையும் அடிக்கச் சொல்லி விட்டோமே!' என்று அவன் சிறிது வருந்தினான். அப்பொழுது சம்போவும், கிம்போவும் அங்கு வந்து சேர்ந்தனர். மூவரும் நன்றாகக் குடித்து, வெகு நேரம் வரை வெறியுடன் ஆடிக் கொண்டிருந்தனர். அவர்களுடைய அட்டகாசத்தில் வேட்டை நாய்களும் வெருவி ஒடுங்கிக் கிடந்தன.

இடையில் சம்போ லெகிரியிடம் ஒரு காகிதப் பொட்டலத்தைக் கொடுத்து, 'யசமான்! டாமை அடிக்கும்போது அவன் கழுத்தில் ஒரு டாலரைக் கட்டியிருந்தான். இந்தக் காகிதத்தில் நீண்ட ரோமம் ஒன்றையும் சுற்றிச் சட்டைப் பையில் வைத்திருந்தான். நாங்கள் அவனை அடிக்கும்பொழுது இவைகளைக் கழற்றி எடுத்துவந்தோம்!' என்று சொன்னான். லெகிரி டாலரையும் ரோமத்தையும் கண்டு அஞ்சினான். அவை சூனியம் வைப்பதற்குரிய பொருள்கள் என்று எண்ணி, அவன் டாலரை வெளியே எறிந்துவிட்டு, ரோமத்தை நெருப்பிலே எரித்துவிட்டான்.

அதிகாலையில், கீழ்வானம் வெளுக்கும் சமயத்தில், லெகிரி டாமைப் போய்ப் பார்த்தான். 'என்னடா,

இன்னும் எனக்கு நீ உபதேசங்கள்தான் செய்யப் போகிறாயா? என்று கேட்டான்.

டாம் மௌனமாகப் படுத்திருந்தான். 'அட, மிருகமே! எழுந்திரு!' என்று உறுமினான் லெகிரி.

டாம் மிகவும் சிரமப்பட்டு, எழுந்து உட்கார்ந்தான். பிறகு கைகளை ஊன்றிக்கொண்டு, மெல்ல மெல்ல எழுந்து நின்றான். அவன் தலையிலிருந்து கால்வரை வேதனை தாங்க முடியாமல், ஆடிக்கொண்டிருந்தான்.

அப்பொழுது, 'கீழே விழுந்து என்னை வணங்கி, மன்னிப்புக் கேள்!' என்றான் லெகிரி.

'நான் செய்ததுதான் நியாயம்! அதற்கு மன்னிப்பு எதற்கு? என்ன துன்பம் வந்தாலும், என் கையால் நான் கொடுமை செய்யமாட்டேன்' என்றான் டாம்.

'இதனால் என்ன நேரும் தெரியுமா?'

'நன்றாய்த் தெரியும்! நீங்கள் பயங்கரமான கொடுமைகளைச் செய்யமுடியும். என் உடலை வதைக்க முடியும். ஆனால் என் ஆன்மாவை ஒன்றும் செய்ய முடியாது! அது நித்தியமான வாழ்வை அடையும்!'

'இந்தக் காட்டிலே உனக்கு யார் வந்து உதவி செய்யப் போகிறார்கள்?'

'ஆண்டவர்!'

லெகிரி உடனேயே டாமைத் தண்டிக்க விரும்பவில்லை. வயல்களில் வேலை அதிகம் இருந்ததால், அவன் தண்டனையை ஒத்தி வைத்துவிட்டு, வெளியே சென்று விட்டான்.

டாம் திடமான உடலைப் பெற்றிருந்ததால், விரைவிலே சிறிது குணமடைந்தான். அவனுடைய

உடல் நிலையைப் பொருட்படுத்தாமலே, லெகிரி அவன் தினமும் வேலைக்குச் செல்லவேண்டுமென்று கட்டாயப் படுத்தி வந்தான். இவ்வாறு நாட்களும், மாதங்களும்

கேஸி டாமின் வாயில் கொஞ்சம் கொஞ்சமாகத் தண்ணீரை ஊற்றினுள்...

..ந்து கொண்டிருந்தன. உடல் தேறுவதும், மறுபடி அமைடைவதுமாக, ஒவ்வொரு நாளும் டாம் கஷ்டப் பட்டுக் கொண்டிருந்தான். விரைவில் மரணம் வந்தால் நல்லது என்று அவன் எண்ணினான்.

கேஸி அவனை இரகசியமாகச் சந்தித்த சமயங் களில், லெகிரி விடமாட்டான் என்றும், ஏதாவது ஒரு காரணத்தை வைத்துக்கொண்டு, அவன் டாமை எலும்பு எலும்பாக உடைக்க ஏற்பாடு செய்வான் என்றும் சொல்லிவந்தாள். லெகிரியிடம் அவள் பட்டு வந்த பாடுகளுக்குத் தன் நிலைமை எவ்வளவோ மேலா னது என்று டாம் எண்ணினான். அவளுடைய உட லும், உள்ளமும், ஆன்மாவுமே நரக வேதனையில் ஆழ்ந்திருக்கும்படி செய்துவிட்டான் லெகிரி. ஆனால் டாமின் ஆன்மா பரிசுத்தமா யிருந்தது.

கேஸிக்கு ஆணும், பெண்ணுமாக இரண்டு குழந்தைகள் இருந்தார்கள். அவர்களை வேறு எவனோ விலைக்கு வாங்கிப் போய்விட்டான். அவள் ஒவ்வொரு நாளும் லெகிரியைப் பழிவாங்கத் தக்க வாய்ப்பை எதிர்பார்த்திருந்தாள். அத்துடன், புதிதாக லெகிரி விலைக்கு வாங்கி வந்திருந்த எமிலினையும் அழைத்துக் கொண்டு, தான் தப்பியோடிவிட வேண்டுமென்றும் அவள் திட்டம் தயாரித்துக் கொண்டிருந்தாள்.

17. சுதந்தரம்

லெகிரியிடம் டாம் துன்பத்தில் உழன்றுகொண் டிருக்கையில், ஹாரிஸும் எலிஸாவும் இன்பமாக வாழ்ந்து கொண்டிருந்தனர். அவர்களுடைய தைரி

யம் அவர்களுக்கு உதவி செய்தது. வெகு விரைவிலே ஐக்கிய மாகாணத்தைவிட்டுக் கானடாவுக்குச் செல்ல அவர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். கானடாவைச் சேர்ந்த ஸ்திரீ யொருத்தி, அவர்களுக்கு உதவி செய்து, தானும் அவர்களுடன் வருவதாகச் சொல்லி யிருந்தாள்.

கானடாவுக்குச் செல்வதற்கு அவர்கள் கப்பலேறி ஈரி என்ற ஓர் ஏரியைக் கடந்து செல்ல வேண்டி யிருந்தது. கப்பலில் ஏறும்பொழுது போலீஸார் அவர்களைப் பிடித்துக் கொள்ளக்கூடும். தப்பியோடிய அடிமைகளைப் பற்றிய விவரங்களெல்லாம் அவர் களுக்குத் தெரிந்திருக்கும். தவிர, அடிமை வியா பாரியின் ஆட்களும் கப்பல் புறப்படும்பொழுது அங்கே வந்து தேடிப் பார்ப்பார்கள்.

ஹாரிஸால் சுடப்பட்ட லோக்கர் என்பவனும் குண்டுபட்ட காயம் குணமாகி, ஹாரிஸுடன் தங்கி யிருந்தான். அவனும், அடிமை வேட்டையாடுவதை நிறுத்திவிட்டு, மேற்கொண்டு நல்ல முறையில் வாழ வேண்டுமென்று தீர்மானித்திருந்தான். ஹாரிஸ், எலிஸா முதலியோர் தனக்குச் செய்த உதவிக்காக அவன் கைம்மாறு செய்ய விரும்பினான். 'நீங்கள் இப்பொழுதுள்ள நிலையிலேயே கப்பலில் ஏறினால், போலீஸ்காரர்கள் நிச்சயமாக உங்களைப் பிடித்துக் கொள்வர். எலிஸா ஆண்வேடம் தரித்தாகவேண்டும். குழந்தை ஹாரிக்குப் பெண்வேடம் போடவேண்டும். நீயும் அதிக வயதானவனைப் போல வேடத்தை மாற்றிக்கொள்ள வேண்டும்!' என்று அவன் ஹாரி ஸிடம் தெரிவித்தான்.

அவன் கூறிய யோசனைப்படியே செய்யப்பட்டது.

குழந்தை ஹாரிஸுக்குக் கௌன் அணிவித்து, பெண்களுக்குரிய சட்டையும், நகைகளும் போடப்பட்டன. அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. தன்னை ஏன் இப்படிப் பெண்ணாக்குகிறார்கள் என்று அவனால் அறிந்து கொள்ள முடியவில்லை. அறிந்து கொள்ளவும் அவன் ஆத்திரப்படவில்லை. ஏனெனில், அவன் தாயுடன் வீட்டைவிட்டு ஓடிவந்ததிலிருந்து அவன் எத்தனையோ ஆச்சரியங்களைப் பார்த்துவிட்டான். அந்த ஆச்சரியங்களில் இதுவும் ஒன்று என்று அவன் எண்ணிக் கொண்டான். எலிஸா நிலைக்கண்ணாடி முன்னால் நின்று, தன் கூந்தலைக் கத்தரித்துக் கொண்டாள். சுருண்டு சுருண்டு அழகாக வளர்ந்திருந்த கூந்தலை வெட்டித் தள்ள வேண்டியிருக்கிறதே என்று முதலில் அவளுக்கு வருத்தமாகத்தான் இருந்தது. ஆனால் கூந்தலைவிடச் சுதந்தரம் அவசியம் என்று அவள் கருதியதால், அவள் ஆண்களைப்போல் தலை ரோமத்தைக் குட்டையாக வெட்டிவிட்டாள். பிறகு கால் சட்டை, அங்கி முதலியவைகளையும் அவள் அணிந்து கொண்டாள். அப்பொழுது அவளைப் பார்த்த ஹாரிஸ், 'நீ அசல் ஆண்பிள்ளையாக மாறிவிட்டாய்! இனி எவரும் உன்மேல் சந்தேகப்பட மாட்டார்கள்!' என்று சொல்லிச் சிரித்தான்.

குறிப்பிட்ட தினத்தில் அவர்கள் கப்பலேறச் சென்றார்கள். டிக்கெட்டு வாங்குமிடத்தில் ஹாரிஸ், ஹேலியின் ஆள் ஒருவன் நிற்பதைக் கண்டான். அந்த ஆள் டிக்கெட்டு விற்பவனிடம் ஹாரிஸ், எலிஸா, [illegible] ஆகியவர்களுடைய தோற்றத்தையும், அங்க அடையாளங்களையும் சொல்லிக்கொண்டிருந்தான். 'அப்படிப்பட்ட ஆசாமிகளே இந்தக் கப்ப

லுக்கு வரவில்லை!' என்று டிக்கெட்டு விற்பவன் கூறிவிட்டான். பிறகு ஹாரிஸ் ஓசைப்படாமல் மெதுவாக டிக்கெட்டுகளை வாங்கிக்கொண்டு வெளியே வந்தான்.

கப்பலிலே ஹாரி கானடா நாட்டின் ஸ்திரீயுடன் ஓர் அறையில் இருந்துகொண்டான். ஹாரிஸும் எலிஸாவும் வேறு அறையில் அமர்ந்து கொண்டனர். கதிரவன் நன்றாக ஒளி வீசிக் கொண்டிருந்தான். மணி அடிக்கப்பட்டது. கப்பல் புறப்பட்டு, நீல நிறமான ஏரியில் வேகமாகச் சென்றுகொண்டிருந்தது. அந்த ஏரிதான் கானடாவின் எல்லை. அதைக் கடந்துவிட்டால், மனிதனை மனிதன் அடிமைப்படுத்த முடியாது!

கானடாவை அடைந்ததும் ஹாரிஸும், எலிஸாவும் அடைந்த இன்பத்திற்கு அளவேயில்லை. அவர்களுக்கு வீடில்லை, வாசலில்லை, தொழிலில்லை, பணமுமில்லை! ஆனால் சுதந்தரம் கிடைத்துவிட்டது என்று அவர்கள் ஆனந்தமடைந்து இறைவனைத் தொழுதார்கள்.

கானடாவிலிருந்த குவேக்கர்களாகிய நண்பர்கள் சிலர் அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய முன் வந்தனர். ஹாரிஸுக்கு வேலையும், அவன் குடும்பத்தார் தங்கியிருக்க வீடும் கிடைக்க அவர்கள் ஏற்பாடு செய்தனர். 'விடுதலை, விடுதலை, விடுதலை!' என்ற உணர்ச்சியுடன் அவர்கள் இன்பமாக வாழ்ந்து கொண்டிருந்தனர்.

18. அடிமை வேட்டை

லெகிரியின் வீட்டு மாடியில் ஓர் அறை இருந்தது. அதில் எவரும் போய்த் தங்குவதில்லை. அதில் பேயடைந்திருப்பதாக அடிமைகள் நம்பி வந்தனர். ஏனெனில் முற்காலத்தில் நீகிரோ ஸ்திரீ ஒருத்தியை அதில் அடைத்து வைத்து லெகிரி கொன்றுவிட்டான் என்று அவர்கள் பேசிக்கொண்டனர். இதைக் கேள்விப்பட்ட பின், கேஸி அங்கே பேய் இருப்பதாகவே லெகிரியிடம் அடிக்கடி சொல்லி வந்தாள். அவனும் அதை நம்பியிருந்தான். அந்த அறையை அவன் திறப்பதே யில்லை. அதனருகில் செல்வதுமில்லை. கோழைகளாயும் முரடர்களாயும் இருப்பவர்களுக்கு இத்தகைய அச்சம் ஏற்பட்டால், எளிதில் நீங்காது.

கேஸி அந்த அறையில், கூரையின் அடியில், ஒரு சுவரின்மீது உடைந்த கண்ணாடிக் குப்பி யொன்றை வைத்திருந்தாள். காற்று வீசும்பொழுது அந்தக் குப்பியிலிருந்து சப்தம் எழுந்து வந்தது. அடிமைகள் அதைப் பேய்களின் அலறல் என்று கருதினர். அடிக்கடி அதைப்பற்றிப் பேசிக்கொண்டனர். லெகிரிக்கு எதிராக அந்த அறையைப் பயன் படுத்திக் கொள்வதற்காகவே கேஸி இத்தகைய ஏற்பா டெல்லாம் செய்திருந்தாள்.

ஒரு நாள் இரவில் திடீரென்று ஏதோ ஓசை கேட்டதால், டாம் கண்விழித்துப் பார்த்தான். அவனுக்கு எதிரில் கேஸி நின்று கொண்டிருந்தாள். அமைதியாக அவள் டாமிடம் ஒரு செய்தியைக்

கூறினாள்: 'டாம்! லெகிரி நிறையப் பிராந்தியைக் குடித்துவிட்டு, அயர்ந்து உறங்கிக் கொண்டிருக்கிறான். நான் ஒரு கோடரி எடுத்து வைத்திருக்கிறேன். இது தக்க சமயம். நீ போய்க் கோடரியால் அவனை வெட்டிக் கொன்றுவிட்டு வந்துவிடு! உன்னால் எல்லா அடிமைகளுக்கும் விமோசனம் கிடைக்கும். அடிமைகளாகிய நம்மை எலும்பு எலும்பாக அடித்து ஒடிக்கும் அந்தப் பாவியை ஒழிப்பது புண்ணியமான காரியமாகும். நீ உடனே போவது நல்லது!'

அவள் பேசியதைக் கேட்ட டாம் சிறிது நேரம் திகைத்து நின்றான். 'என்ன, கேஸி! தீமையிலிருந்து ஒரு நாளும் நன்மை விளையாது! உனக்கு ஏன் இந்தக் கெட்ட யோசனை தோன்றிற்று?' என்று அவன் கேட்டான்.

'உன்னால் முடியாதென்றால், நானே அதைச் செய்யவேண்டும்! நான் பெண்ணாக இருப்பதால், என்னால் இயலாதென்று உன்னிடம் சொன்னேன். எப்படியாவது அந்தக் கொடியவனைத் தொலைத்து விட்டு, நானும் சாக வேண்டியதுதான்!' என்றாள் கேஸி.

அவள் வெறி கொண்டிருந்தாள். லெகிரியின் எல்லை கடந்த கொடுமைகளால், அவள் நைந்து நசுங்கிப் போயிருந்தாள். அவன் ஒருவனை ஒழித்துவிட்டால், பலருக்கு நன்மை என்ற முறையிலேயே அவள் சிந்தித்து முடிவு செய்திருந்தாள். ஆனால் கொடுமையைக் கொடுமையாலேயே ஒழிக்க முடியுமா?

அதைப் பற்றி டாம் மிகத் தெளிவாக அறிந்திருந்தான். வேத நூலில் கூறியுள்ளபடி கிறிஸ்துநாதருடைய உபதேசங்களை அவன் முற்றிலும் நம்பியிருந்

தான். தீமையைத் தீமையைக் கொண்டு எதிர்க்கக் கூடாது என்றும், அன்பினாலேயே வெல்லவேண்டும் என்றும் அவர் கூறியிருந்தார். உலகத்தாருக்காக அவரே சிலுவையில் ஏறி மரிக்கவில்லையா? அவர் தலைமீதே இராணுவ வீரர்கள் முள் முடியை வைத்துக் கூத்தாடவில்லையா? தமக்கு இழைத்த கொடுமைகளை யெல்லாம் அவர் பொறுமையுடன் தாங்கிக்கொண்டாரல்லவா? கடைசியில் அவர்கள் அறியாமல் தவறு செய்வதாயும், அவர்களையும் மன்னிக்கவேண்டுமென்றும் அவர் பரமண்டலத்திலுள்ள பரம பிதாவை வேண்டிக் கொள்ளவில்லையா? இந்த விஷயங்களை யெல்லாம் சிறு வயதிலிருந்தே கேட்டும், படித்தும் தெளிவடைந்திருந்த டாம் நியாயத்திற்கு விரோதமாக நடப்பதற்கு எப்படி இசைவான்? லெகிரியின் கொடுமைகள் மிருகத்தனமானவைதாம்! ஆனால் அவைகளைவிட மோசமான ஒரு கொடுமையைக் கேஸி செய்வதை அவன் எப்படி அனுமதிக்க முடியும்?

டாம், அவளைத் தனியாக வெளியே அழைத்துச் சென்று, அவளுக்கு ஆறுதல் கூறினான். 'கிறிஸ்து பெருமானைவிடவா நமக்கு அதிகத் துன்பம் உண்டாகி விட்டது? அவர், பிறர் உதிரத்தைச் சிந்தவிடாமல், புனிதமான தம் உதிரத்தையே சிந்தினார். இதை நாம் உணர்ந்து பார்க்கவேண்டும்! சில சமயங்களில் ஏற்படும் மன வேதனைகளால் நாம் கோபத்தில் பழி வாங்க எண்ணக்கூடாது. எது எப்படியாயினும், கடைசியில் அன்புதான் வெல்லும், தர்மந்தான் வெல்லும்! நாம் ஆத்திரப்படக் கூடாது! நாம் நரகப் பாதையை விட்டு, சுவர்க்கப் பாதையிலேயே நடக்க வேண்டும்!'

டாமுடைய வார்த்தைகளும், அவனுடைய உணர்ச்சியும் கேஸியின் மனத்தை மாற்றிவிட்டன. அவன் கூறிய தத்துவத்தில் அவளுக்கு முழு நம்பிக்கை ஏற்படவில்லை என்றாலும், அன்பு நிறைந்த அவனுடைய பேச்சுக்கு மதிப்புக் கொடுக்கவேண்டும் என்று அவள் எண்ணினாள். அந்த நேரத்தில் அவளுக்கு மாற்று வழி ஒன்று தோன்றிற்று. 'நானும், எமிலினும் இங்கிருந்து தப்பி ஓடிப் போகிறோம்! நீயும் வந்துவிடு! இங்கிருந்தால், விரைவில் உன்னையும் கொன்று விடுவார்கள்!' என்று அவள் சொன்னாள்.

டாம் தான் விலைப்பட்ட அடிமையென்றும், தான் ஆண்டவனை நம்பிக்கொண்டு அங்கேயே இருப்பதாயும் கூறினான். 'ஆனால் நீங்கள் ஓடிப் போங்கள! நீங்கள் பெண்கள்! பாவம், எமிலினை நினைத்தால், பரிதாபமாயிருக்கிறது! உங்களுக்கு ஆண்டவர் கருணை காட்டுவார்!' என்று அவன் சொன்னான்.

கேஸி நன்றாக யோசனை செய்து ஒரு திட்டம் வகுத்துக்கொண்டாள். அவளும், எமிலினும் வெளியே ஓடிச் சென்றால், லெகிரி தன் வேட்டை நாய்களை ஏவி, அவர்களை விரைவில் பிடித்துவிடுவான். முதலில் அந்த நாய்களுக்குத் தப்பவேண்டும். அடுத்தபடி சம்போ, கிம்போ முதலிய கொடியவர்களுக்குத் தப்ப வேண்டும். எனவே, கேஸி மிக ஆழ்ந்து யோசனை செய்தாள். லெகிரியின் வீட்டு மாடியில், பேயடைந்திருப்பதாகக் கருதப்பட்ட அறையில், அவள் இரண்டு பேர்களுக்குச் சில நாட்களுக்குத் தேவைப்படக்கூடிய உணவுப் பொருள்களைச் சேர்த்து வைத்தாள். தாங்கள் இருவரும் முதலில் வெளியே ஓடிப் போய்விட்டு, பிறகு இரகசியமாக அந்த அறைக்குள் வந்து தங்கியிருக்க

வேண்டும் என்றும், அவர்களைத் தேடுவதற்காக லெகிரி செய்யும் ஆர்ப்பாட்டங்க ளெல்லாம் ஓய்ந்த பின்பு, உண்மையிலேயே தப்பி ஓடிவிட வேண்டும் என்றும் அவள் முடிவு செய்தாள்.

ஒரு நாள் இரவில் கேஸியும் எமிலினும் வெளியேறிச் சென்றுவிட்டார்கள். ஆனால் சிறிது தூரத்தில் நிழல்களைப்போல இரண்டு உருவங்கள் அசைந்து செல்வதைக் கண்டுகொண்ட லெகிரி, தன் அடிமைகளை அழைத்து, நாய்களை அவிழ்த்துக்கொண்டு வரும்படி சொன்னான். நாய்கள் வந்தன. கூடவே சம்போ, கிம்போ முதலியவர்களும் ஆயத்தமாக வந்து நின்றனர். அடிமைகளை வேட்டையாடிப் பிடிப்பதற்காக லெகிரி தன் பரிவாரங்களுடன் வெளியே கிளம்பி விட்டான். புறப்படுமுன், தப்பியோடியவர்கள் கேஸியும், எமிலினும் என்பதை அவன் தெரிந்துகொண்டான். அவர்கள் தங்களுடைய அறைகளில் இல்லையென்று மற்ற அடிமைகளும் வந்து தெரிவித்தனர்.

லெகிரி கடுங் கோபத்துடன் உறுமிக்கொண்டிருந்தான். 'இதுவரை நமது பண்ணையிலிருந்து ஓர் அடிமைகூட ஓடிப்போனதில்லை! இது புதுமையாய்த்தான் இருக்கிறது! நாலு பக்கத்திலும் ஓடிப் போய் நீங்கள் தேடுங்கள்!' என்று அவன் அடிமைகளிடம் கூறினான். நாய்களை அழைத்துக்கொண்டு, அவன் அடிமைகளின் பின்னாலேயே ஓடிச் சென்றான்.

நாய்கள் மோப்பம் பிடித்துக்கொண்டே ஓடின. வழியிலே ஒரு சிறு வனம் இருந்தது. அதைத் தாண்டிய பிறகு, ஒரு நீரோடை இருந்தது. அந்த ஓடைவரை நாய்கள் சென்று, இக்கரையிலேயே நின்றுவிட்டன. அவைகள் சிறிது நேரம் அந்தப் பக்கமும் இந்தப் பக்க

மும் திரும்பி மோப்பம் பார்த்தன. ஆனால் அதற்கு மேலாக அவைகள் முன்னேறிச் செல்ல மறுத்தன. இதைக் கண்ட லெகிரி, 'இப்பொழுது நாம் திரும்பிச் செல்வோம். காலையில், பொழுது விடிந்தவுடனே, மறுபடி நாய்களை அழைத்துவந்து, முயற்சி செய்வோம்!' என்று சொல்லித் திரும்பிவிட்டான்.

கேஸியும், எமிலினும் அதே பாதையில்தான் நடந்து சென்றார்கள். ஆனால் ஓடையைக் கண்டதும் அவர்கள் அதில் இறங்கி, அதைக் கடந்து செல்லாமல், நீரின் போக்கிலேயே வெகு தூரம் நடந்து சென்றனர். அவர்கள் நீருள் இறங்கிய பின்னால், வாசனை எதுவும் தெரியாததால்தான் நாய்கள் கரையிலேயே திகைத்து நின்றுவிட்டன. ஓடையிலிருந்து அந்த மாதர் இருவரும் மறுபடி கரையிலேறி, நடந்து சென்று, லெகிரியின் வீட்டில் நுழைந்து, சந்தடி செய்யாமல், மாடியிலிருந்த பேய் வாழும் அறைக்குள் மறைந்து கொண்டனர். அந்த நேரத்தில் லெகிரியின் கூட்டத்தார் அவர்களை வெளியே தேடிக் கொண்டிருந்தனர்.

அன்றிரவு முழுதும் லெகிரி அடிமைகளை உறங்க விடாமல் அதட்டிக் கொண்டும், சீறிக் கொண்டும் இருந்தான். மறுநாள் காலையில் மீண்டும் நாய்களையும், அடிமைகளையும் அழைத்துக்கொண்டு அவன் வெளியே சென்று தேடினான். நாய்கள் ஓடைக் கரையில் முன்பு நின்ற இடத்திலேயே மீண்டும் நின்று கொண்டன.

பிறகு லெகிரி, அக்கம்பக்கத்திலிருந்த பண்ணைகளுக்குச் சென்று ஆங்காங்கிருந்த அடிமைகளையும் அழைத்துவந்து தேடச் செய்தான். அவர்கள் நெடுங்

தூரம் அலேந்து திரிந்து தேடினார்கள். காடு, வனாந் தரங்கள் ஒன்றுகூட விடாமல், அவர்கள் துருவித் துருவிப் பார்த்தார்கள். ஆனால் எதுவும் பயன்பட வில்லை. மேற்கொண்டு வெளியே போய்த் தேடுவதில் பயனில்லை என்று கருதிவிட்டான் லெகிரி.

அவனுடைய வீட்டில், இரவு நேரங்களில் தலையி லிருந்து கால்வரை வெள்ளைத் துணிகள் போர்த்திய இரண்டு பிசாசுகள் நடமாடுவதாக அடிமைகள் அவ னிடம் கூறிவந்தனர். கேஸியும், எமிலினுமே அந்தப் 'பிசாசுகள்'. நள்ளிரவில் அவர்கள், வெள்ளை உடை களால் தங்கள் உடல்களை மறைத்து மூடிக்கொண்டு வெளியே நிலைமைகள் எப்படி யிருக்கின்றன என் பதைப் பார்த்து வந்தனர். பிசாசுகள் என்றாலே அடிமைகள் அஞ்சி ஒதுங்கினார்கள். லெகிரி அவர்களை விட அதிகமாகப் பயந்து கொண்டிருந்தான்.

பெண்களைத் தேடுவது நின்ற பின்பு பண்ணையில் எல்லாம் அமைதியாகவே யிருந்தன. ஆனால் லெகிரி மட்டும் கடைசியாகச் செய்து பார்க்கவேண்டிய பரீட்சை ஒன்றைப்பற்றிச் சிந்தனை செய்துகொண்டே யிருந்தான்.

19. ஆன்மாவின் வெற்றி

பலவிதமான துன்பங்கள், குழப்பங்களின் நடுவில் டாம், மனமுடைந்து போகாமல், ஓரளவு தைரிய மாகவே யிருந்தான். ஆனால் ஒபீலியா திருமதி ஷெல் பிக்கு எழுதிய கடிதத்திற்குப் பதிலாக ஏன் ஒரு செய்தி

யுமே தெரியவில்லை என்று அவன் அடிக்கடி எண்ணிப் பார்த்தான். எப்படியும் அவனை மறுபடி விலைக்கு வாங்கி வருவதாகத் திருமதி ஷெல்பி முன்பு கூறிய வாக்குறுதியை அவள் நிறைவேற்றாமல் இருப்பாளா? எந்த நேரமும் டாமின் மடிமீது விளையாடி வளர்ந்து கொண்டிருந்த ஜியார்ஜும் அவனை மறந்துவிட்டானா? அவர்கள் மறக்க மாட்டார்கள். எப்படியும் தனக்கு விரைவிலே விடுதலை வரும் என்று டாம் நம்பிக்கை கொண்டிருந்தான். ஆனால் அந்த விடுதலை அவனைக் கென்டக்கியில் கொண்டு சேர்க்குமா, அல்லது வானுலகத்தில் சேர்க்குமா என்பது மட்டும் அவனுக்குத் தெளிவாகவில்லை.

கையிலே வேதப்புத்தகம், வாயிலே ஆறுதலளிக்கும் இனிய சொற்கள், உடலால் மற்ற அடிமைகளுக்கு உதவி ஆகியவற்றுடன் விளங்கிய டாமிடம் அடிமைகளுக்கு அளவற்ற அன்பு இருந்துவந்தது. வாய்ப்புக் கிடைத்த சமயங்களில், அவன் கிறிஸ்து நாதரைப் பற்றிய சில விவரங்களையும், கதைகளையும் அவர்களுக்குச் சொல்லி வந்தான்.

கேஸியும் எமிலினும் அகப்படவில்லை என்பதில் லெகிரி மிகவும் கோபம் கொண்டிருந்தான். இறுதியில் ஒரே ஒரு ஆளைப் பிடித்து விசாரிக்க வேண்டும் என்று அவன் திட்டம் செய்திருந்தான். அந்த ஆள்தான் டாம். ஆனால் டாமை அவன் இதுவரை வசப்படுத்தவோ, பணிய வைக்கவோ முடியவில்லை. டாம் எந்த நேரமும், 'ஆண்டவர், ஆண்டவர்' என்று வாயால் சொல்லிக் கொண்டிருந்ததுடன், அவரிடம் பூரண நம்பிக்கையும் கொண்டிருந்தான். ஆனால் லெகிரியோ, பேய் பிசாசுகளை நம்பி வந்தானே தவிர,

கடவுளை நம்பவில்லை. டாம் ஆன்மாவையே நம்பியிருந்தான். லெகிரி உடலையே நம்பியிருந்தான். ஆனால் டாமை அடக்கி வைக்காவிட்டால், மற்ற அடிமைகளும் பின்னால் நிமிர்ந்து நிற்கத் தொடங்கி விடுவார்கள் என்றும் லெகிரி கருதியிருந்தான்.

ஒரு நாள் அவன் தன் கையாட்களை அழைத்து, 'உடனே டாமைக் கூட்டி வாருங்கள்!' என்றான். டாமுக்கு அன்று சரியான மரியாதை கிடைக்கும் என்று சம்போவும் கிம்போவும் பெரு மகிழ்ச்சி யடைந்தனர். அவன் உயர்ந்த ஒழுக்கத்துடன், கண்ணியமாக இருந்ததுதான் அவர்களுடைய வெறுப்புக்குக் காரணம். அவர்கள் போய் டாமை இழுத்துக்கொண்டு வந்தனர். வருகிற பாதையிலேயே, அவன், 'ஆண்டவரே, என் ஆவியை உம்மிடம் ஒப்படைக்கிறேன்! நீரே என் சரணாலயம்! எனக்குச் சீக்கிரத்தில் விடுதலை அளித்து, என்னை உம்மிடம் அழைத்துக்கொள்ளும்!' என்று பிரார்த்தனை செய்துகொண்டிருந்தான். பெண்கள் இருவரும் தப்பியோடிய விஷயம் அவனுக்குத் தெரியும். அந்த நேரத்தில் அவர்கள் எங்கே ஒளிந்திருந்தனர் என்பதையும் அவன் அறிவான். யசமானனுடைய கொடூரமான குணத்தை அவன் தானே பல முறை அனுபவித்திருந்தான். நாட்டின் சட்டமும் வெள்ளை யசமானனுக்கே உதவியாயிருந்தது. இவைகளையெல்லாம் எண்ணிப் பார்த்து, டாம், 'என் உயிருள்ளவரை அந்த ஏழைப் பெண்களை நான் காட்டிக் கொடுத்துவிடக் கூடாது! அதற்கு வேண்டிய வல்லமையை எனக்கு அருளவேண்டும், பெருமானே!' என்று அவன் கருணாமூர்த்தியான கடவுளைத் தொழுதான்.

அந்த நேரத்தில், அவன் உள்ளத்திலும், உடலிலும், உதிரத்திலும், ஒவ்வொரு நரம்பிலும் பின்கண்ட கிறிஸ்துநாதரின் பொன்மொழி ஒலித்துக்கொண்டேயிருந்தது: 'உடலை வதைப்பவர்களுக்கு அஞ்சவேண்டாம்; அதற்குப் பின்னல் அவர்கள் மேலும் செய்யக் கூடியது எதுவுமில்லை!' இறைவனே அவனைத் தொட்டுத் தட்டிக்கொடுப்பது போன்ற ஓர் உணர்ச்சி அவனுக்கு ஏற்பட்டது. அவனுடைய விடுதலை நெருங்கி விட்டது! அவன் போய்ச் சேரவேண்டிய வீடும் அவன் கண்களுக்குப் புலனாகிவிட்டது.

அவனைக் கண்டவுடன் லெகிரி, பற்களை நறநற வென்று கடித்துக்கொண்டு சீறிப் பாய்ந்தான். 'அடே, டாம்! நான்—என் மனத்தில்—உன்னைக் கொன்று விடத் தீர்மானித்துவிட்டேன், தெரியுமா?' என்று அவன் கேட்டான்.

'அது தாங்கள் செய்யக் கூடியதுதான்!' என்று மிகுந்த அமைதியுடன் டாம் தெரிவித்துக்கொண்டான்.

'அந்தப் பெண்கள் எங்கே யிருக்கிறார்கள் என்பதைச் சொல்லாவிட்டால், நான் உன்னைக் கொல்வது நிச்சயம்!'

'தங்களிடம் நான் சொல்லக் கூடியது எதுவுமில்லை.'

'கறுப்புக் கிறிஸ்தவப் பதரே, உனக்குத் தெரியாது என்று என்னிடம் சொல்லவா துணிந்துவிட்டாய்?' என்று கூறி, வெறி கொண்ட மாடுபோலத் துள்ளிக் குதித்தான் லெகிரி.

'ஆம், யசமான், எனக்குத் தெரியும்! ஆனல் உங்களிடம் எதுவும் சொல்லமாட்டேன்! நான் இறக்

கத் தயாராயிருக்கிறேன். உங்களுடைய அரிய ஆன்மாவைக் காப்பதற்காக, வயது காலத்தில், நான் என் உடலிலுள்ள ஒவ்வொரு சொட்டு உதிரத்தையும் உங்களுக்கு அளிக்கத் தயாராயிருக்கிறேன்! ஆனல் உங்களுடைய ஆன்மாவுக்கு இவ்வளவு பெரிய பாவத்தை—பழியைத் தேடிக்கொள்ள வேண்டாம். இதனுல் எனக்கு ஏற்படும் தீங்கைவிட உங்களுக்குத் தான் அதிகக் கேடு விளையும். உங்களால் முடிந் ததையெல்லாம் செய்யுங்கள். என் துயரங்கள் இத் தோடு ஒழியும்! ஆனல் நீங்கள்தான் கழுவாய் தேடிக் கொள்ள வேண்டியிருக்கும்!' என்று சாந்தமாக, நிதா னத்துடன் கூறினன் டாம்.

லெகிரி திகைத்துவிட்டான். ஆனல் ஒரு கண நேரம்தான் அப்படி நின்றான். மறுபடி வெறி வந்து விட்டது. மறுபடி சைத்தான் அவன் உள்ளத்துள் புகுந்துவிட்டான். அவன் வாயில் நுரை கக்கிக் கொண்டு, கோபத்தால் கொந்தளித்து, டாமை ஓங்கி யடித்துக் கீழே உருட்டிவிட்டான்!

அன்று இரவு செங்குருதி பாய்ந்த சிவப்பு இர வாகப் போய்விட்டது! சம்போவும், கிம்போவும், கைகள் சலிக்கும்வரை டாமைச் சவுக்காலடித்தனர். கைகளின் முட்டிகளால் குத்தினர். அவன் முகத்தி லிருந்தும், உடலிலிருந்தும் உதிரம் பெருகிக்கொண் டிருந்தது. அத்தனை அடிகளையும், அத்தனை துன்பங் களையும், அவன் மிக்க உறுதியுடன் தாங்கிக் கொண்டேயிருந்தான். கடைசியாக அவன் கீழே சாய்ந்துவிட்டான்.

'யசமான், ஆள் அநேகமாய்த் தீர்ந்தே போய் விட்டான்!' என்றுன் சம்போ.

அத்தனையையும் நின்று பார்த்துக்கொண்டிருந்த லெகிரி, 'நிறுத்த வேண்டாம்! இன்னும் அடியுங்கள் அவன் வாயிலிருந்து உள்ளது வெளிவரும்வரை அடித்து நொறுக்குங்கள்! எனக்காக ஒவ்வொரு சொட்டு இரத்தத்தையும் தருவதாக அவன் சொன்னான்; அத்தனையையும் வாங்கிவிட வேண்டியது தான்!' என்று ஊளையிட்டான்.

டாம் கண்களைத் திறந்தான். கொடுமையே உருவாகி நின்ற யசமானனை ஒருமுறை பார்த்தான். 'ஏ இரங்கத்தக்க அற்ப ஜந்துவே! இனி நீ செய்யக் கூடியது எதுவுமில்லை! உன்னை நான் மனமார மன்னிக்கிறேன்!' என்று சொல்லிவிட்டு, அவன் நினைவற்று உருண்டுவிட்டான்.

லெகிரி, 'இத்தோடு சரி! இனி அவன் மறுபடி வாய் திறந்து பேசமாட்டான்!' என்று கொக்கரித்தான். அவன் சற்று முன்னால் நகர்ந்து சென்று டாமை உற்றுப் பார்த்து. 'ஆம், தீர்ந்தே போனான்!' என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

டாம், மெய்மறந்த நிலையில், தரையிலே கிடந்தான்; மெல்லிய பட்டிழைபோல் சிறு மூச்சுவிடுவதைத் தவிர, உடலின் அசைவுகள் யாவும் ஒடுங்கிவிட்டன.

டாம் நெடுநேரம் அடிகளைத் தாங்கிய பொறுமையை — புனிதமான பொறுமையை — எண்ணிப் பார்த்த சம்போவும், கிம்போவும் உள்ளம் உருகிவிட்டனர்.

சம்போ, 'என்னடா, வேலை செய்தோம்? இது பயங்கரமான பாவமடா!' என்று சொன்னான்.

'பாவம் அடிக்கச் சொன்னவருக்குத்தான்; நமக்கில்லை!' என்றான் கிம்போ.

லெகிரி, 'நிறுத்த வேண்டாம்; இன்னும் அடியுங்கள்' என்று ஊளையிட்டான்...

அவர்கள் திடீரென்று இரக்கம் கொண்டு டாமின் காயங்களைத் தண்ணீர்விட்டுக் கழுவினார்கள். கழிவுப் பஞ்சை விரித்து, அவனை அதன்மீது தூக்கிக் கிடத்தினார்கள். அவர்களில் ஒருவன் முதலாளியின் வீட்டுக்கு ஓடிச்சென்று, கொஞ்சம் பிராந்தி எடுத்துவந்து அவன் வாயில் ஊற்றினான்.

பிறகு அவர்கள் இருவரும், 'ஏசுபெருமானே! எங்களுக்கும் நீர் இரக்கம் காட்டவேண்டும்!' என்று துதித்தனர். டாமின் கடைசிப் பிரார்த்தனையும் அது தான்—அவர்கள் இருவருக்கும் நல்லறிவு உண்டாக வேண்டும் என்றுதான் அவன் கர்த்தரை வேண்டினான்.

20. மகத்தான சபதம்

இரண்டு நாட்களுக்குப் பின்னால், அழகு ததும்பும் வாலிபன் ஒருவன், ஒரு குதிரை வண்டியை ஓட்டிக் கொண்டு, லெகிரியின் வீட்டைத் தேடிவந்து சேர்ந்தான். வண்டியை விட்டுக் கீழே குதித்து, அந்த வீட்டின் சொந்தக்காரர் யாரென்று அவன் விசாரித்தான்.

அவன்தான் ஷெல்பி பிரபுவின் மகன் ஜியார்ஜ். அப்பொழுது அவனுக்கு வயது பதினெட்டிருக்கும். டாம் மாமாவை மறந்துவிடாமல், அவனைக் கண்டு, ஊருக்கு அழைத்துப் போவதற்காக அவன் வந்திருந்தான். ஆனால் அவன் காலங்கடந்து வந்திருந்தான்.

முன்னால் ஒபீலியா திருமதி ஷெல்பிக்கு எழுதியிருந்த கடிதம் குறித்த காலத்தில் போய்ச் சேரவில்லை. அது எங்கோ கிராமப் பகுதியில், ஒரு தபால் நிலையத்தில் இரண்டு மாதங்களுக்கு மேலாகக் கிடந்து விட்டது. கடைசியாகத் திருமதி ஷெல்பிக்கு அக கடிதம் போய்ச் சேர்ந்த சமயத்தில், ஷெல்பி பிரபு நோயுற்றிருந்தார். அவரைக் கவனிக்கவே அவளுக்கு

நேரம் சரியாயிருந்தது. ஆயினும் அவள் நியூ ஆர்லியன்ஸிலிருந்த அகஸ்டின் பிரபுவின் வக்கீலுக்கு ஒரு கடிதம் எழுதினாள். ஒபீலியா தன் கடிதத்தில் அவருடைய விலாசத்தை நினைவோடு எழுதியிருந்தாள். டாம் அப்பொழுது எங்கேயிருந்தான் என்றும், அவன் விற்கப்பட்டு விட்டானா என்றும் திருமதி ஷெல்பி வக்கீலுக்கு எழுதிய கடிதத்தில் விவரம் கேட்டிருந்தாள்.

சில நாட்களுக்குப் பின் ஷெல்பி பிரபு இறந்து போனார். அவருடைய பண்ணைக் கணக்குகளையெல்லாம் சரிபார்த்து, அவசியமான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டி யிருந்தது. திருமதி ஷெல்பியும், ஜியார்ஜும் வரவேண்டிய பணங்களை வசூலிப்பதிலும், அவசரமான கடன்களை அடைப்பதிலும் ஈடுபட்டிருந்தனர். சில நிலங்களும் விற்கப்பட்டன.

இடையில் நியூஆர்லியன்ஸிலிருந்து வக்கீல் பதிலனுப்பியிருந்தார். அதில் டாம் சந்தையில் விற்கப்பட்டான் என்றும், தாம் விற்ற பணத்தை வாங்கி வரவு வைத்துக்கொண்டதைத் தவிர, வேறு தகவல் எதுவும் தமக்குத் தெரியாது என்றும் அவர் குறித்திருந்தார்.

டாமைப்பற்றி விசாரிக்க வேண்டும், விரைவில் அவனை மீட்டுக்கொண்டு வரவேண்டும் என்று ஜியார்ஜும் அவனுடைய அன்னையும் அடிக்கடி நினைத்தார்கள்; பேசிக்கொண்டார்கள். ஆனால் ஜியார்ஜ் தென் ராஜ்யத்திற்குப் புறப்படுவதற்குள், மெல்ல மெல்ல ஆறு மாதங்கள் கடந்துவிட்டன. கடைசியாகப் பண்ணை வேலையாகவே ஜியார்ஜ் நியூ ஆர்லியன்ஸ் பகுதிக்குச் செல்ல நேர்ந்தது. அப்பொழுது டாமை விலைக்கு வாங்குவதற்குத் தேவையான பணத்தையும் அவன் சேகரித்துத் தயாராக

வைத்துக்கொண்டு புறப்பட்டான். நியூ ஆர்லியன்ஸிலும், பக்கங்களிலும், அவன் டாமைப்பற்றி விவரமாக விசாரித்ததில், அவன் லெகிரியின் பண்ணையில் இருப்பதாகத் தகவல் கிடைத்தது. அதன்படி அவன் லெகிரியைத் தேடி வந்திருந்தான். ஆனால் அவன் வரும்வரை காலம் காத்திருக்கவில்லை!

ஜியார்ஜ் லெகிரியைக் கண்டு பேசினான். 'டாம் சிறு வயது முதலே எங்கள் பண்ணையில் இருந்தவன். அவனை நீங்கள் சந்தையில் விலைக்கு வாங்கியதாகக் கேள்விப்பட்டு, இங்கே வந்துள்ளேன். அவனை மீட்டுக் கொண்டு போவதற்கு உரிய பணமும் கொண்டு வந்திருக்கிறேன்!' என்று அவன் தெரிவித்தான்.

'சரிதான்! ஆனால் நான் செத்த நீகிரோக்களுக்கு விலை வாங்குவதில்லை!' என்றான் லெகிரி.

'ஆ! என்ன சொல்லுகிறீர்கள்?' என்று ஜியார்ஜ் கேட்டான்.

'நான் இதுவரை வாங்கிய அடிமைகளில் கழிவானவன் இந்த டாம்தான்! அவனால் நான் அடைந்த துன்பங்கள் போதும் போதுமென்றாகிவிட்டன! பண்ணையிலிருந்து இரண்டு பெண்களை அவன் வெளியே கடத்தி அனுப்பிவிட்டான். அவர்கள் போயிருந்த இடமெல்லாம் அவனுக்குத் தெரியும். ஆனால் என்னிடம் உண்மையைச் சொல்ல மறுத்துவிட்டான். பிறகு நான் என் கைவரிசையைக் காட்ட வேண்டாமா? ஒரு நாள் இரவு முழுவதும் இரண்டு அடிமைகளைக் கொண்டு அவனை அடித்துத் தள்ளச் சொன்னேன். கீழே சாய்ந்தவன் எழுந்திருக்கவேயில்லை. இந்த வீட்டுக்கு அருகில், வெளியே ஒரு கொட்டடியில் கிடக்கிறான்!' என்று லெகிரி கூறினான்.

ஜியார்ஜின் உள்ளம் கொதித்தது அடங்காத கோபத்தால் அவன் குமுறினன். ஆனால் கோபத்தைக் காட்ட வேண்டிய சந்தர்ப்பம் அதுவன்று என்று கருதி, அவன் தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு, வெளியே ஓடிச் சென்றான். வழியில் அவனுடைய வண்டிப் பக்கம் நின்றுகொண்டிருந்த நீகிரோ பையன் ஒருவன் டாம் இருந்த கொட்டடியை அவனுக்குக் காட்டினன்.

உடனே ஜியார்ஜ் அங்கு ஓடிச்சென்றான். டாம் படுத்திருந்த கொட்டடிக்குள் அவன் நுழைந்தவுடனே அவன் தலை சுற்றத் தொடங்கிவிட்டது. இதயத் துடிப்பும் ஒடுங்கத் தொடங்கிற்று. 'இப்படியும் நடந் திருக்கலாமா ? இது என்ன ஆச்சரியம் !' என்று முன கிக்கொண்டே அவன், 'டாம் மாமா ! என் பழைய நண்பா ! நிமிர்ந்து பார் ! நான்தான் ஜியார்ஜ் வந்திருக் கிறேன் ! என்னை உனக்குத் தெரியவில்லையா, மாமா?' என்று கேட்டான்.

'ஜியார்ஜ் யசமான் ! ஜியார்ஜ் யசமான் !' என்று மெல்லிய குரலில் டாம் இருமுறை கூறிக்கொண் டான். அவனுடைய உள் மனத்தில் ஜியார்ஜைப்பற்றிய ஒரு நினைப்புத்தான் இருந்தது. ஆனால் கொடுமை நிறைந்த அந்த வனாந்தரத்தில் அவன் எங்கே வரப் போகிறான் என்று அவன் எண்ணியிருந்தான். ஜியார்ஜ் என்ற பெயரைக் கேட்டதும், அவன் திகைப் படைந்தது போலத் தோன்றிற்று.

இரண்டு நாட்களாக அன்னமோ, ஆகாரமோ, எதுவுமில்லை ; இரவில் இரகசியமாக அவனைப் பார்க்க வந்த அடிமைகள் அவன் வாயில் துளிதுளி தண்ணீர் ஊற்றியதைத் தவிர, அவனுக்கு வேறு ஒன்றும் தெரி யாது. அவர்கள் அவன் அருகில் அமர்ந்து கண்ணீர்

பெருக்கியதைக் கூட அவன் அறிந்திருக்க மாட்டான். மாடியிலே தனியறையில் ஒளிந்திருந்த கேஸிகூட, ஒரு முறை துணிந்து வெளியே வந்து, அவனைப் பார்த்துச் சென்றாள். தனக்காகவும், எமிலினுக்காகவும் உயிர்த் தியாகம் செய்யத் துணிந்த அந்த உத்தமனை எண்ணி எண்ணி அவள் கண்ணீர் விட்டாள். பிறருக்காக வாழ்பவன் தன்னைக் காத்துக்கொள்ள முடியாது என்று முன்னால் டாம் அவளிடம் கூறிவந்ததை அவள் நினைத்துக்கொண்டு பொருமினாள். டாமைப் போன்றவர்களாலேயே உலகம் அழியாமலிருப்பதாக அவள் எண்ணினாள். அவனுக்காக அவள் ஆண்டவரிடம் பிரார்த்தனை செய்தாள்.

தான் இருந்த கொட்டடியில் ஜியார்ஜின் பெயரையும், அவன் குரலையும் கேட்ட டாமின் மனத்தில் மெல்ல மெல்ல அவன் நினைவு உண்டாயிற்று. அவன் முகம் மலர்ச்சியடைந்தது. வெறுமே பாழ்வெளியைப் பார்த்து வெறித்திருந்த அவன் கண்களில் ஒளி உண்டாயிற்று. அவன் கண்களிலிருந்து நீர் பெருகிக் கன்னங்களில் வழிந்துகொண்டிருந்தது.

'கடவுள் மகிமையுள்ளவர்! உண்மைதான்—உண்மைதான்—இதற்காகத்தான் நான் காத்துக்கொண்டிருந்தேன் — இதைத்தான் வேண்டியிருந்தேன்! என்னை அவர்கள் மறக்கவில்லை—எப்படி மறப்பார்கள்? ஆண்டவரே, என் ஆன்மா சாந்தியடைந்துவிட்டது! இனி நான் அமைதியாகச் சாகமுடியும்!' என்ற சொற்கள் அவன் வாயிலிருந்து தீனமான குரலில் வெளிவந்தன.

'டாம் மாமா, நீ இறக்கவே கூடாது! உன்னை மீட்டுக்கொண்டு போகவே நான் வந்திருக்கிறேன்!

நாம் நம்முடைய வீட்டுக்குத் திரும்பிச் செல்வோம்!' என்றான் ஜியார்ஜ்.

'ஜியார்ஜ், என் அருமை ஜியார்ஜ்! காலம் கடந்து போய்விட்டது. நீ வருமுன்பே, ஆண்டவர் என்னை விலைக்கு வாங்கி ஆட்கொண்டு... நானும் அவரிடம் போகத் துடித்துக் கொண்டிருக்கிறேன்!'

'மாமா! நீ இறக்கவே கூடாது! இந்தப் பயங்கர மான இடத்தில் நீ அநாதையாகக் கிடந்து மடிவதை நான் எப்படிச் சகித்திருப்பேன்!' என்று அழுது புலம்பினான் ஜியார்ஜ்.

அவன் டாமின் அருகில் முழங்கால் பணிந்து, அவன் கையைத் தன் இரு கைகளாலும் பற்றிக் கொண்டிருந்தான். அவனுடைய கண்களிலிருந்து அருவிபோலக் கண்ணீர் பாய்ந்துகொண்டிருந்தது.

டாம், 'ஜியார்ஜ்! நான் அநாதை என்று சொல்லாதே! நான் அநாதையாக வாழ்ந்ததெல்லாம் முடிந்துவிட்டது! இப்பொழுது சுவர்க்கமே எனக்குக் கிடைத்துவிட்டது! கிறிஸ்து பெருமான் எனக்கு வெற்றி யளித்துவிட்டார்! அவரை வாழ்த்தி வணங்குவோம்!' என்று கூறினான்.

ஜியார்ஜ் திகிலடைந்து மௌனமாக அமர்ந்திருந்தான். டாம் அவன் கைகளை இறுகப் பிடித்துக் கொண்டு, மெதுவாகப் பேசலானான்:

'ஜியார்ஜ்! நீ குளோவிடம் என்னை இந்த நிலையில் கண்டதாகச் சொல்லிவிடாதே! பாவம், அவள் துடி துடித்துப் போவாள்! நான் சுவர்க்கத்திற்குப் போவதை மட்டும் சொல்லு. இதுவரை ஆண்டவர் எனக்கு உதவி செய்து, எப்பொழுதும் என்னைக் காத்துவந்தார் என்

பதையும் சொல்லு. ஐயோ, அந்தக் குழந்தைகள் —அதிலும் அந்தக் கைக்குழந்தை—அவர்களை நினைத்து எத்தனை முறை என் நெஞ்சு நீருகியிருக்கிறது! அவர்களிடம் சுவர்க்கத்தில் என்னைச் சந்திக்கும்படி சொல்லு. நம் யசமானருக்கு என் அன்பைச் சொல்லு

'டாம் மாமா, நீ இறக்கவே கூடாது...' என்று அழுது புலம்பினன் ஜியார்ஜ்...

அம்மாவையும், அங்குள்ளவர் எல்லோரையும் நான் கேட்டதாகச் சொல்லு.'

இத்தனை வார்த்தைகளையும் கூறுவதற்கு டாமுக்கு இயற்கையில் வலிமையில்லை. ஆயினும் தன் உள்ளத்தில் இடைவிடாமல் தங்கியிருந்த ஜியார்ஜை அவன் கண்டுவிட்டதால், அந்த மகிழ்ச்சியால் அவனுக்குத் தெம்பு உண்டாகியிருந்தது. ஆனால் அது நீடித்திருக்கவில்லை. அவன் மீண்டும் தளர்ச்சியடைந்தான். மூச்சு வேகமாயிற்று. அவன் அமைதியோடு கடைசி முறையாகக் கண்களை மூடிவிட்டான்.

லெகிரி கொட்டடி அருகில் நின்று அங்கு நிகழ்ந்ததைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

அவனைக் கண்டதுமே ஜியார்ஜுக்குச் சினம் பொங்கியெழுந்தது. அவன் எழுந்து சென்று, லெகிரியைப் பார்த்து, 'உன்மீது விரைவிலே கொலை வழக்கு வரும் !' என்று உரத்த குரலில் கூறினான்.

'வழக்குக்குச் சாட்சிகள் எவர்கள்? நீகிரோக்களின் சாட்சியம் நீதித்தலத்தில் செல்லாது!' என்றான் லெகிரி.

ஆம், அதுவும் உண்மைதான். அக்காலத்திய சட்டம் அப்படித்தான் இருந்தது என்பதை ஜியார்ஜ் உடனே உணர்ந்துகொண்டான்.

லெகிரி, 'செத்த நீகிரோவுக்கு ஏன் இவ்வளவு தடபுடல்?' என்று ஏளனம் செய்தான்.

மேற்கொண்டு ஜியார்ஜால் பொறுத்திருக்க முடியவில்லை. அவன் கண்கள் அனல் வீசிக்கொண்டிருந்தன. அவன் விர்ரென்று வேகமாய்ப் பாய்ந்து 'என்னடா சொன்னாய்? யாரைச் சொன்னாய்?' என்று